
கல்கி பொன்விழா

உங்கள் வீட்டுத் திருவிழா!

1.8.92 பொன்விழா நிகழ்ச்சி விவரங்கள் →

KALKI 2.8.92 ரூ. 3.00

இந்த இதழில்...



எஸ்.வி. சேகர் எழுதும்

பெரிய தம்பி

சூப்பரான கிண்டல் தொடர்

முதல் பரிசு நாவல் ஆரம்பம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு...

சென்னை நகரப் பிரமுகர்களில் முக்கியமான ஒருவர் ''கொம்பினாஸ்ட்'' நிறுவனத் தலைவர் கே. எஸ். நாராயணன். சமீபத்தில் அவரைச் சந்திக்க நேர்ந்த போது, ரொம்ப உற்சாகமாக, ''கல்கி பொன் விழாவுக்கு நான் வந்து விடுகிறேன்; நடத்திக் கொடுக்கிறேன்'' என்று சொன்னார். அவருடைய ஆனந்த பரவசம் கொஞ்சம் ஆச்சர்யம் அளிக்கவே செய்தது. அவரே தொடர்ந்தார் : ''உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; கல்கியும் சதாசிவமும் சேர்ந்து கல்கி பத்திரிகையைத் தொடங்கிய அந்த ஆரம்ப நாட்களில் 'இங்க்' சப்ளை செய்தவன் நான்தான்! அப்போது, 'எக்மோர் எங்கே இருக்கிறது என்றால் கல்கி காரியாலயம் எதிரே இருக்கிறது' என்று கல்கி எழுதினார். அந்தக் காரியாலயத்துக்கு நான் சாம்பிள் மையுடன் போயிருக்கிறேன். தேவை அறிந்து தயாரித்து அளித்தும் இருக்கிறேன். பின் நாட்களில் படிப்படியாக, நான் வளர்ச்சியுற, அச்சு மை தயாரிக்கும் தொழிலை வேறு ஒரு நிறுவனத்துக்கு வழங்கி விட்டேன்.''

இப்படி கே. எஸ். நாராயணன் மட்டுமல்ல, சந்திக்க நேரும் எல்லோருமே பெருமிதப் பூரிப்புடன், ஏதோ ஒரு விதத்தில் தங்களுக்கும் இந்தப் பத்திரிகைக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போகிறார்கள். எங்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார்கள். எத்தனை 'டெலிஃபோன் கால்'கள்! எத்தனை வாழ்த்துக் கடிதங்கள்! எத்தனை மலரும் நினைவுகள்! சங்கர்தயாள் சர்மா மாதிரி ஆனந்தக் கண்ணீர் விட்டு அழலாமா என்று கூடத் தோன்றுகிறது! அப்புறம் நமது புதிய காரியாலய - அச்சகக் கட்டடத்தின் அருகே, அடையாறு வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடுமே என்றுதான் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது! அப்படி வாசகர்களின் பேரன்பு எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறது!

''வருக வருக'' என்று ஆகஸ்டு 1உ நடைபெறும் பொன் விழாவுக்கு - உங்கள் வீட்டுத் திருவிழாவுக்கு - அழைக்கிறோம். மேதகு ஆர். வெங்கடராமன் தலைமை தாங்க, விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. விழா நிகழ்ச்சிகள் காலையிலேயே ஆரம்பித்து விடுகின்றன. இந்த இதழின் வேறு ஒரு பக்கத்தில் விவரங்கள் காணலாம். நேரில் வர முடியாத பலரை உத்தேசித்து விழா நிகழ்ச்சிகள் பற்றி, அடுத்து வரும் கல்கி இதழ்களில் விரிவாக எழுதிப் புகைப்படங்களுடன் வெளியிடுகிறோம்.

ஒரு பொன் விழாக் காலம் இந்தப் பத்திரிகையை போஷித்து வளர்த்தவர்களில் முக்கியமானவர்கள் இதன் வாசகர்களே. தொடர்ந்து வளர்ச்சியுறச் செய்ய வேண்டியதும் அவர்களே. அவர்களைக் கைகூப்பி இந்தப் பொன் விழா திருநாளில் வணங்குகிறோம்.

இந்தப் பத்திரிகைக்கு என்று ஒரு மரபை உருவாக்கித் தர திர்மானமும் செய்தவர்கள் ''கல்கி'', ராஜாஜி, டி.கே.சி., சதாசிவம் - எம். எஸ். தம்பதி போன்ற மேதைகள். அவர்கள் வகுத்த வரம்பை மீறாமலேயே பத்திரிகையை முன்னெப்போதையும் விடச் சிறப்பாகவும் கலையாகவும் உங்களுக்குப் பயனுள்ளதாகவும் தயாரித்து அளிப்பதென்று இந்த நன்னாளில் உறுதி பூணுகிறோம். உங்கள் பேராதரவையும் உங்கள் நண்பர்கள் உறவினர்களின் நல்லாதரவையும் வேண்டுகிறோம். கல்கியைப் படித்து மகிழ்ந்தால் போதாது; வாங்கிப் படித்துப் பரவசமடையுங்கள் என்று அவர்களிடம் சொல்லி வையுங்கள்!

'கல்கி பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சியுற்று வரும்போதே இதன் வாசகர்களும் வாழ்க்கையில் உயர வேண்டும்' என்று உங்கள் குடும்ப நலனுக்காகக் கல்கியின் காவல் தெய்வமான விநாயகப் பெருமானைப் பொன் விழா திருநாளில் பிரார்த்திக்கிறோம்.

- ஆசிரியர்



பம்பாய்க் கடிதம்

தாகத்தில் தவிக்கும் பம்பாய்!

●● பம்பாய் மக்களுக்குக் குடிநீர் தருகின்ற துல்சா, துல்சி, வைத்தார்னா, விஹார் ஏரிகள் சென்ற வருடம் ஜூன் மாத நடுவிலேயே நிரம்பி விட்டன. இவ்வருடமோ அவற்றில் பாதியளவு கூடத் தண்ணீர் இல்லை. மழை பொய்த்து விட்டால் இப்போது கைவசம் இருக்கும் தண்ணீர் ஐம்பது நாட்களுக்கே வரும். ஜூலை நடு வருவதற்குள் போதிய அளவு மழை பெய்யவில்லை என்றால் மக்களை நகரத்தை விட்டு வெளியேற்ற வேண்டி இருக்கும் என கார்ப்பரேஷன் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த இக்கட்டிலிருந்து பம்பாய் மக்களைக் காப்பாற்ற, மாதுங்கா சங்கர மடம் சமீபத்தில் வருண ஜபம் நடத்தியது. வேத முறைப்படி எட்டு பெரிய பாத்திரங்களில் (அருகில் ஏரி, குளம் இல்லாததால்!) - இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டே வேத விற்பன்னர்கள் வேத கோஷம் செய்தனர். இது நடந்த சமயத்தில் இடி, மின்னலுடன் மழை பெய்தது!

பம்பாயின் [illegible] கான்வென்ட்டைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமிகள் மழை வேண்டி இந்திர பகவானுக்குக் கடிதம் எழுதியுள்ளனர். இந்த நிலையில் சென்னைவாசிகள் பம்பாயைப் பார்த்து ஆறுதலடையலாமோ!

●● வீடுகளில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த பிள்ளையார் சதுர்த்தியை, 'கணேஷ் சதுர்த்தி' என்ற பெயரில் நாடு முழுவதுமாகக் கொண்டாட வைத்த பெருமை லோகமான்ய திலகரையே சேரும். 1892-ல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கொண்டாட்டத்தின் 100-வது வயதை பிரமாதமாகக் கொண்டாட மஹாராஷ்டிரா தயாராகிக் கொண்டிருக்கிறது. திலகரின் சொந்த ஊரான பூனாவிலோ, 'தகடு சேத் ஹல்வாய்' (Dagdu Sheth Halwai) குழுவினர், ஒரு கோடி ரூபாய்ச் செலவில் கணேஷ் சதுர்த்தியைக் கொண்டாடப் போகிறார்கள். பதினோரு நாட்கள் கொண்டாட்டத்திற்குச் சுமார் இரண்டு லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

●● பம்பாய் மேற்குப் புறநகரில் ஒரு முக்கிய பணக்காரக் குடியிருப்புப் பகுதி 'லோகண்ட்வாலா காம்ப்ளெக்ஸ்'. இந்த காலனிவாசிகள் அனைவருக்கும் ஒரு நாள் காலையில் பயங்கர அதிர்ச்சி! அத்தனை வீட்டு வேலைக்காரிகளும் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களது* கோரிக்கைகள் : 1. இன்னும் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். 2. ஒவ்வொரு வேலைக்கும் (பாத்திரம் தேய்ப்பது, துணி துவைப்பது, வீடு பெருக்கித் துடைப்பது) தனித்தனியே குறைந்தபட்சம் முந்நூற்றைம்பது ரூபாய் கொடுக்கப்பட வேண்டும்! 3. வாராந்திர விடுமுறை வேண்டும். 4. விடுப்பு நாட்களுக்கும் முழுச் சம்பளம் கொடுக்க வேண்டும்!

●● சென்ற வருடம் வெளியான வெற்றிப் படங்களின் கதாநாயகர்களான சஞ்சய் தத், அஜய் தேவ்கன் முதலியோர் காட்டில் நல்ல மழை! தயாரிப்பாளர்கள் இவர்களையே நாடுவதால் இருவரும் கிட்டத்தட்ட தலா இருபது படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கின்றனர். படத் தயாரிப்பாளர் சங்கத்தின் நிபந்தனைப்படி, ஒரு ஹீரோ ஒரே சமயத்தில் பன்னிரண்டு படங்களுக்கு மேல் ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடாது. ஒரு நாளைக்கு ஒரு ஷிஃப்டுக்கு மேல் நடிக்கக் கூடாது; இப்போது இதனை எதிர்த்து சினிமா நடிகர் சங்கம் அப்பீல் செய்திருக்கிறது.

- அம்ருதா பார்த்தசாரதி

"வென்றாலும் அமைச்சர்; தோற்றாலும் அமைச்சர்!"



"இந்தத் தொகுதியில் போட்டியிடுகிற என் தம்பி, வெற்றி பெற்றாலும் அமைச்சர்; தோற்றாலும் அமைச்சர்" என்று மறைந்த எம்.ஜி.ஆர்., தேர்தல் பிரசாரத்தின் போது ஒரே ஒரு தொகுதியில் மட்டும் கூறினார். அந்தத் தொகுதி அறந்தாங்கி. அ.இ.அ.தி.மு.க. சார்பில் அங்கு போட்டியிட்டவர், திருநாவுக்கரசு. சமீபத்தில் ஜெ. அரசால், ஊழல் குற்றச்சாட்டு அடிப்படையில் கைது செய்யப்பட்டு, தவறான பிரிவில் வழக்குத் தொடுக்கப்பட்டதால் நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டவர்.

இவருக்குச் சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் தீயத்தூர். அப்பா சுப்பராமன் காங்கிரஸ்காரர். ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். ஆனால் அரசுவுக்கு (சுருக்கமாக) பள்ளிக் காலத்திலேயே அண்ணாவின் பேச்சுகளின் பேரிலும், எம்.ஜி.ஆர். படங்களின் மேலும் ஏக வெறி. பட்டப் படிப்புப் படிக்கும் போதுதான் தி.மு.க. மேடைகளில் பேச ஆரம்பித்தார். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று புதுக்கோட்டையில் சிறிது காலம் பிராக்டீஸ் செய்திருக்கிறார் அரசு. அறந்தாங்கி காங்கிரஸுக்குச் செல்வாக்கான பகுதி. அங்கே இருநூறு உறுப்பினர்களை மட்டுமே கொண்ட கிளைக் கழகம் ஒன்றைப் பல எதிர்ப்புகளுக்கிடையே ஆரம்பித்தார்.

1977ல் முதன் முதலாக அறந்தாங்கி தொகுதியில் போட்டியிட்டு வென்றவர், தொடர்ந்து ஐந்து முறை ஜெயித்திருக்கிறார். "கடந்த தேர்தலில் ராஜீவ் அனுதாப அலை மட்டுமன்றி, ஜெயலலிதா சுமார் ஆறு மணி நேரம் என் தொகுதியில் சுற்றி வந்து எனக் கெதிராகப் பிரசாரம் செய்தார். ஆனாலும் என் மக்கள் என்னைக் கைவிடவில்லை. 25000 வாக்கு வித்தியாசத்தில் வென்றேன்" என்று பெருமையுடன் கூறுகிறார் அரசு. தொகுதிக்கு, நூற்பு ஆலை, பாலிடெக்னிக், ஆஸ்பத்திரி என்று பல வசதிகளைச் செய்து கொடுத்த பெருமை இவருக்குண்டு. சென்னையில் இவரைக் கைது செய்த அன்று அறந்தாங்கி ஸ்தம்பித்தது.

கட்சியில் சிலர் ஜெயலலிதாவை ஓரங்கட்ட நினைத்த போது, அவருக்காக எம்.ஜி.ஆரிடம் வாதாடியவர்களில் இவர் முக்கியமானவர். "1985 உள்ளாட்சித் தேர்தலில் புரட்சித் தலைவர், ஜெயலலிதாவைப் பிரசாரம் செய்ய அனுமதிக்கவில்லை. இதனால் கோபமுற்ற ஜெ. தமது பெயரில் பேரவை ஒன்று தொடங்கி, அந்த ஆட்களைத் தேர்தலில் போட்டியிடச் சொன்னார். இதைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவைக் கட்சியிலிருந்தே வெளியேற்றி விடத் தீர்மானித்தார். 'அவசரப்படாதீர்கள்; திருந்துவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்' என்று ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக எம்.ஜி.ஆருடன் வாதாடிக் கட்சியிலிருந்து அவர் நீக்கப்படாதபடி பார்த்துக் கொண்டேன்" என்று நினைவுகூர்ந்தார் அரசு. (இப்போது அதற்காக வருத்தப்படுவாரோ!)

எம்.ஜி.ஆர். இறந்த பிறகு நடந்த ஜெ-ஜா பிரச்னையில், ஜெயலலிதாவுக்கு ஆதரவான எம்.எல்.ஏ.க்களைப் பாரத்தார்ஷன் அழைத்துக் கொண்டு போய் அடைகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

அண்ணாநகரில், திருநாவுக்கரசு பங்களாவில் வாசல்படி முதற்கொண்டு பங்களா முழுவதும் வழவழா ராஜஸ்தான் சலவைக் கற்கள்தான். நான்கு அலமாரி நிறையப் புத்தகங்கள். இந்திரா காந்தி, எம்.ஜி.ஆர்., ராஜீவ் போன்றவர்களுடன் எடுத்துக் கொண்ட படங்களுடன், லேட்டஸ்டாக ரஜினிக்குப் பொன்னாடை போர்த்தும் படமும் இடம்பெற்று இருக்கிறது. அரசு படத் தயாரிப்பாளரும் கூட. 'மருதுபாண்டி' இவர் எடுத்த முதல் படம். அடுத்ததாக எடுத்த 'அக்னிப் பார்வை'யில் இவரே கதாநாயகனாகவும் நடித்தார். அரசுவுக்கு 700 ரசிகர் மன்றங்கள் உள்ளன. எம்.ஜி.ஆர். - அண்ணா தி.மு.க. என்று தனியாகக் கட்சியும் நடத்துகிறார்.

"எம்.ஜி.ஆரை 'இருட்டடிப்பு'ச் செய்யும் ஜெயலலிதாவை, நான் அம்பலப்படுத்தி வருகிறேன். அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் யோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் கோபமுற்றிருக்கும் ஜெ. என்னை முடக்கப் பார்க்கிறார்" என்கிறார் திருநாவுக்கரசு.


சந்திப்பு : ப்ரியன்

- திருவட்டாறு ஆதி கேசவப் பெருமாள் கோயிலிலுள்ள தங்கத் தகடுகள், வைரக் கற்கள் திருட்டு! கோயில் அர்ச்சகர் தற்கொலை!!

- சுசீந்திரம் தாணுமாலையர் கோயிலில் ரூபாய் 65,000 மதிப்புள்ள வெள்ளிக் கட்டி (4,075 கிராம்) காணவில்லை! இது குறித்து கோயில் நகைப் பாதுகாப்பாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது!

- பூதப்பாண்டி, ஆரல்வாய்மொழிப் பகுதியிலுள்ள கோயில்களில் ரூபாய் 13,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைக் காணவில்லை!

- தக்கலை அருகேயுள்ள வேளிமலைக் குமாரக் கோயிலில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய தங்க மயில்கள், தங்க உருவங்கள் மாயம்! இது தொடர்பாக கோயில் மானேஜர் உட்பட மூன்று பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்!



● சோதனையில் நகைத் தகடு அம்பலம்

குமரி மாவட்டத்தில் தொடரும் கோயில் கொள்ளைகள்!

- பத்மனாபபுரம் ராமர் கோயிலில் தங்கம், வெள்ளி நகைகள் திருட்டு! அவற்றின் மதிப்பு ரூ. 16,800.

- கன்னியாகுமரி மாவட்ட கோயில் திருட்டுகள் தொடர்பாக தவறு ஊழியர்கள் ஆறு பேரை சஸ்பெண்டு செய்து தேவசம் போர்டு உத்தரவிட்டுள்ளது!


இப்படிக் கடந்த ஒரு மாத காலமாக, குமரி மாவட்டத்தில் தினசரி ஒரு கோயில் திருட்டு பற்றிய செய்தி வந்தவண்ணமாக இருக்கிறது.

முதலில் குமரி மாவட்டம் திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, வெறு வெட்டப் பூகம் வெம்பியது போல், மாவட்டத்தின் பல கோயில்களில் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், பாத்திரங்கள் திருட்டு நடந்திருப்பது தொடர்கதையாக வந்தவண்ணம் இருக்கின்றன!

● பாலபிரஜாபதி



● அருமனை ஸ்ரீகுமார்



நாகர்கோவிலிலிருந்து 35 கி.மீ. தூரத்திலுள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயில், திருவட்டாறு நதிக்கரையில் அமைந்துள்ளது! ஆதிகேசவப் பெருமாள் பாம்பணை மேல் சயன நிலையில் காட்சியளிக்கிறார். பெருமாளின் நீளம் 22 அடி. அகலம் ஆறடி. பெருமாளுக்கு ரத்தினக் கற்கள் பொருத்தப்பட்ட கிரீடம் அணிவிக்கப்பட்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்த ரத்தினக் கற்களையும் கிரீடத்தின் ஒரு பகுதியையும் தற்போது காணவில்லை!

பெருமாளின் உடல் தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டிருக்கும். அதன் மீது பட்டுத் துணியைப் போர்த்தியிருப்பார்கள். இந்த துணியைப் பெரும்பாலும் பக்தர்கள் முன்னிலையில் எடுப்பதில்லை. இது காலம் காலமாக நடந்து வரும் ஒரு சம்பிரதாயம்.

மேலும், கர்ப்பக்கிரகம் ஒரு நீண்ட அறையாக அமைக்கப்பட்டு, முன்பக்கம் மூன்று கதவுகளைக் கொண்டுள்ளது. முதல் கதவைத் திறந்தால், பெருமாளின் தலைப் பகுதியும், இரண்டாம் கதவைத் திறந்தால், பெருமாளின் உடல் பகுதியும், மூன்றாவது கதவைத் திறந்தால் பெருமாளின் திருவடிப் பகுதியும் தெரியும். இதில், நடுவே அமைந்துள்ள இரண்டாவது கதவு மட்டுமே சாதாரணமாகத் திறந்திருப்பதால், பெருமாளின்

தலையிலுள்ள கிரீடத்தைப் பக்தர்கள் அநேகமாகப் பார்க்கவே முடியாது. இது திருட்டு நடப்பதற்கு மிகவும் வசதியாக வும் போனது. எந்நேரமும் பெருமாளின் திருமேனி பட்டுத் துணியால் போர்த்தப் பட்டிருப்பதால் தங்கத் தகடுகளைத் திருடிக் கொண்டு, மஞ்சள் வண்ணம் பூசப்பட்ட தகரத் தகடுகளைப் போர்த்து வதற்கும் வாய்ப்பாக அமைந்து விட்டது.


இந்தத் திருட்டு தெரியவந்ததும், சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் த க வ ல் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கண்டு கொள்ளவேயில்லை. திருவட்டாறு இந்து முன்னணி சார்பில் கோயில் பிராகாரத்தில் சத்தியாகிரகம் நடத்திய போதும் அதிகாரி கள் உ ரி ய நடவடிக்கை எடுக்கவில்லை! பிறகு அந்தக் கோயில் பூசாரி, கேசவன் போற்றி பாலில் விஷம் கலந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்ட பிறகுதான், அதிகாரிகள் உரிய நடவடிக்கையில் இறங் கினர். உள்ளூர் நகரக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ அப்பன், மற்றும் கோயில் சிப்பந்திகள் உள்பட பன்னிரண்டு பேரைக் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

இந்தக் கோயில் தி ரு ட் டு வெட்ட வெளிச்சமானதும், குமரி மாவட்டத்தி லுள்ள ஏனைய கோயில்களில் உள்ள நகை களை ஆய்வு செய்து சரிபார்க்க வேண்டு மென மீண்டும் மக்கள் கோரிக்கை விடுத் தனர்.

அதன்படி, தஞ்சாவூர், திருச்சி போன்ற வெளிமாவட்டத்தைச் சார்ந்த கோயில் நகை மதிப்பீட்டாளர்களைக் கொண்டு, கு ம ரி மாவட்டத்திலுள்ள கோயில்களின் நகைகள் சரிபார்க்கப்பட்ட பே ா து, ஒவ்வொரு கோயிலிலும் திருட்டு நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது! •

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் கோயில் திருட்டுக்களுக்கு யார் காரணம்...? கன்னியாகுமரி மாவட்ட தேவசம் போர்டின் முன்னாள் உறுப் பினரும், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை யின் செயலாளருமான அருமனை ஜி. ஸ்ரீகுமாரைச் சந்தித்தோம்.

''திருவட்டாறு கோயிலில் திருட்டுப் போனது எவ்வளவு என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இக் கோயிலில் திருட்டு நடந்தது கண்டுபிடிக் கப்பட்டதும், இங்கு வந்த மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும், பத்ம னாபபுரம் உதவிக் கலெக்டரும் ஏனைய அதிகாரிகளும் சேர்ந்து, சுமார் 40 லட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கத் தகடுகள் திருட் டுப் போயிருக்கின்றன என்றனர். ஆனால், அதன் பிறகு நடைபெற்ற மா வ ட் ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், குமரி



• திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயில்

மாவட்ட தேவஸ்தான உதவி ஆணையாளர் வாசகப் பெருமாள், திருவட்டாறு ஆதி கேசவப் பெருமாள் கோயிலிலுள்ள 7,000 கிராம் தங்கத் தகட்டில் 5,305 கிராம் திருட் டுப் போயிருப்பதாகவும் அவற்றின் மதிப்பு 21.22 லட்சம் என்றும் தெரிவித்தார்.

''ஒவ்வொரு கோயிலுக்கும் நகைகள், சொத்துக்கள் போன்ற விவரங்கள் அடங் கிய ஃபைல்கள் தனித்தனியாக இருக்கும். ஆனால், திருவட்டாறு கோயில் நகைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய ஃபைலைக் காணவில்லை என்கிறார்கள். உண்மையான ஃபைல் காணாத போது, திருட்டுப் போன நகைகள் பற்றிய மதிப்பை எப்படிக் கணித்தார்களோ தெரியவில்லை! இன்னும் குழப்பமான விஷயம் என்னவென்றால்... மூன்று மாதத்திற்கு முன்பு ஒரு தந்திரியைக் (பூசாரி) கொண்டு ஆய்வு செய்த போது, எல்லாம் சரியாக இருந்தது என்றார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் நகை களைச் சரிபார்ப்பதற்குக் கூட தேவஸ்தான அதிகாரிகள் உள்ளே (சிலைக்கு அருகே) செல்ல முடியாது! ஒரு தந்திரி மூலம்தானத் திற்குள் சென்று நகைகள் எல்லாம் சரியாக இருக்கின்றன என்றால்... அதிகாரிகளும் அதையே ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பது தான்!

''கோயில்களில் நடைபெறும் திருட் டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு

• சுசீந்திரம் தாணுமாலையன் கோயில்



தூத்துக்குடி

வாசகர்களே....

ஆகஸ்ட் 8 – ம் தேதி சனிக்கிழமையன்று காலை பத்து மணியிலிருந்து மாலை மூன்றரை மணிவரை, தூத்துக்குடியிலுள்ள விசாகா ஹோட்டலில் கல்கி ஆசிரியரையும் ஆசிரியர் குழுவினரையும் நேரில் சந்தித்துப் பேசலாம் ; நகரின் குறை நிறைகளையும் கூறலாம்.

– ஆசிரியர்.

மென்றால், கோயில்களை நன்கு பராமரிப்பதோடு, கோயில் ஊழியர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். ஆண்டுக்கொருமுறை கோயில் நகைகளைச் சரிபார்க்க வேண்டும். ரேஷன் கடைகளில் இயங்கும் பொது விநியோக முறையைக் கண்காணிக்க, அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களை நியமித்திருப்பது போன்று, கோயில் நகைகளை, சொத்துக்களைக் கண்காணிக்கவும் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் குழுவை நியமிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அதிகாரிகள் நேர்மையாகப் பணியாற்ற வேண்டும்!'' என்று முடித்தார், ஸ்ரீகுமார்.

சாமித் தோப்பு வைகுண்ட சுவாமிகள் கோயிலை 160 ஆண்டுகளாகப் பரம்பரையாக நிர்வகித்து வரும் தவத்திரு பால பிரஜாபதி அடிகளாரைச் சந்தித்த போது, ''திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலிருந்து தொடங்கி, குமரி மாவட்டத்திலுள்ள சுமார் 20 கோயில்களில் கோயில் நகைகள் திருடப்பட்டுள்ள செய்தி வெளி நாளிதழ்களில் வெளிவந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது, இந்து அறநிலையத் துறை என்ற ஒன்று அவசியந்தானா என்ற கேள்வி பக்தர்கள் மனதில் எழுந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால், அறநிலையத் துறையின் நிர்வாகச் சீர்கேடுதான் இத்தனைக்கும் காரணம். அறநிலையத் துறை அர்த்தமற்ற ஒன்றாகும். இவர்களால் இந்து அறத்தையும் காப்பாற்ற முடியாது; அறநிலைய ஆஸ்திகளையும் காப்பாற்ற முடியாது!

''இந்து அறநிலையத் துறையின் வழி நிர்வாகம் சரிவர நடக்காத போது, ஆலயங்களைத் தனியாரிடம் ஏன் விடக் கூடாது? ஒரு முன்னுதாரணமாக, திருவட்டாறு ஆதி கேசவப் பெருமாள் கோயில் நிர்வாகத்தினை எம்மிடம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்படைக்கட்டும். நிர்வாகம் பண்ண எந்த வகையிலும் அறநிலையத் துறை எங்களுக்கு நிதி உதவி தர வேண்டாம். அனைத்துச் செலவினங்களையும் நாங்களே நன்கொடை மூலம் சரிக்கட்டிக் கொள்ளுகிறோம். ஆறு கால பூஜையும் திருவிழாக்கள், கோயில் பராமரிப்பு, திருப்பணிகள் அனைத்தும் முறைப்படி குறைவின்றி நடத்திக் காட்டுகிறோம்! அல்லது இந்து ஆலயங்களை அந்தந்த வட்டாரத்தில் வாழக்கூடிய இந்து மக்களை உறுப்பினராகக் கொண்ட சபைகள் அமைத்து, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சர்வ சுதந்திரமான குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையென்றால்... கோயில் திருட்டுக்கள் ஒரு தொடர்கதையாகி விடும்!'' என்றார்.


திருவட்டாறு மக்களைச் சந்தித்து இந்தத் திருட்டு சம்பந்தமாக விசாரித்த போது, பலரும் ''உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் இந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டிருப்பதால், இந்தத் திருட்டு சம்பந்தமான விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்க வேண்டும்!'' என்றனர்.

மேலும், இக் கோயிலுக்குச் சொந்தமான நூறு ஏக்கர் பரப்பளவுள்ள ஆனையடி எஸ்டேட், தற்போது தனியார் கைவசம் உள்ளதாகவும் அதையும் மீட்டுக் கோயிலுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்றனர் உள்ளூர் மக்கள்.

இப்போது திருவட்டாறு ஆதி கேசவப் பெருமாள் கோயில் நகைகளை மீட்கவும் திருடியவர்களைக் கண்டுபிடித்துத் தக்க தண்டனை வழங்கவும் அரசை வலியுறுத்துவதற்காக, 'இந்து முன்னணி போராட்டக் குழு'வை குமரி மாவட்ட இந்து முன்னணி அமைத்திருக்கிறது. மார்க்சிஸ்ட் கட்சி சார்பில், மாவட்டத்திலுள்ள தாலுகா அலுவலகங்கள் முன்பு சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப்பட்டது. திருவட்டாறு மக்களோ புதுமையாக 'ஒப்பாரிப் போராட்டம்' ஒன்றை நடத்தினர். என்ன நடந்து என்ன? திருட்டுப் போனது மீட்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கட்டுரை, புகைப்படங்கள் :

குளச்சல் இப்ராஹீம்



● பாலம் உருவாகிறது...

பிரமிக்க வைக்கும் சாலைப் பணிகள்!

தாம்பரம் எல்லையில் தொடங்கி மாமண்டூரைத் தாண்டி விழுப்புரம் வரை நீண்டு செல்கிறது புதிதாக அமையும் நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலை. இந்தத் திட்டத்தின் செலவு மதிப்பீடு 72.29 கோடி ரூபாய். உலக வங்கியின் கடனுதவியோடு மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம் மூலம் பன்னாட்டு ஒப்பந்த முறைப்படி (GLOBAL TENDER) செயல்படும் முதல் சாலைத் திட்டம் தமிழ்நாட்டிலேயே இதுதான். மத்திய அரசுக்காகத் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை இதைச் செயல்படுத்துகிறது.

சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு 'ஹனி கோம்ப்' பாதுகாப்புக் கட்டப்பட்டதுதான் இந்தத் திட்டத்தின் முதல் கட்டம். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இப்படி ஆயிரத்து ஐந்நூறு மரக் கன்றுகளை நட்டு வைத்தார்கள். இவை புதிதாய் அமையும் நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலையை அணி செய்யும்.

இந்த பிரமிப்பூட்டும் பணியில் மிக முக்கியமானவை இரும்புலியூர், பரனூர், செங்கற்பட்டு ரெயில்வே மேம்பாலங்களும், அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பாலாற்றுப் பாலமும்தான். பாலங்கள் கட்டுமானத்தில்தான் எவ்வளவு சுவையான தகவல்கள்!

முன்காலத்தில் மிகவும் அதிகமான எடையுள்ளது யானைதான் என்பதால், பாலங்களுக்கு யானைகளைத் தாங்குகிற வலிமை இருந்தால் போதும் என்று கட்டப்பட்டன.

ஆனால் இப்போது? யானைகளை விடப் பல மடங்கு எடையுள்ள வாகனங்கள் பாலங்களைக் கடக்க வேண்டியிருப்பதால், அதற்குத் தகுந்தபடி பாலங்கள் உறுதியானவையாக இருக்க வேண்டுமே!



● பாறைகளை உடைத்துப் பாதை...

பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள புதிய பாலம் நடைபாதை வசதியோடு 7.5 மீட்டர் அகலத்தில் உருவாகியுள்ளது. இந்த ஆற்றுப் பாலத்தைக் குறிப்பிட்ட காலத்துக்குச் சற்று முன்னரே நிறைவேற்றித் தந்தது, உத்திரப்பிரதேச அரசு நிறுவனமான 'யு. பி. ஸ்டேட் பிரிட்ஜ் கார்ப்பொரேஷன்'. சர்வதேச அளவில் கூட பாலக் கட்டுமானப் பணியில் புகழ்பெற்ற நிறுவனமாம் இது.



முதல் கட்டமாக பாலத்தின் கண்களை இணைக்கும் பகுதிகளாகத் தட்டையான தூண்களை எழுப்ப வேண்டும். இந்தத் தூண்களைத் தாங்கி நிற்கும் பீடங்களாக அடித்தளம் அ மை க் க வேண்டும். வட்டமான கிணறுகளாக இவற்றைக் கட்டுவார்கள். ஆற்றுத் தரைப் படுகையில் பாறை கிடைக்கும் வரை இந்தக் கிணறு இறங்கியாக வேண்டும். அதன் பிறகு பாறையிலும் அறுபது சென்டி மீட்டர் ஆழம் பெயர்த்துத்தான் 'கிணறை' நிலைப்படுத்துவார்கள். பாறையை வெ டி வைத்துத் தகர்க்கக் கூடாது. அப்படிச் செய்தால் பாறையின் இறுக்கம் தளர்ந்து, வ லி மை குறைந்து விடும் என்பதால் செதுக்கித்தான் ஆக வேண்டும்.

இந்தக் கான்கிரீட் கிணற்றை, கான்கிரீட் கலவை, மணல் அடுக்கு என்று மாற்றி மாற்றி நிரப்பி உறுதியாக்குகிறார்கள். 'மணல் உறுதியா?' என்று கேட்காதீர்கள். கட்டுமானங்களில் நாற்புறமும் அழுத்தப்படும் மணலின் (CONFINED SAND) உறுதி அபாரமானது!

பாலாற்றில் - நிலத்தடி நீர் இருப்பினும் பாலம் கட்டுவது ஒப்புநோக்கச் சிரமம் இல்லை தான். இதுவே காவிரி போன்ற ஓடும் நதிகளாயிருந்தால்? நீருள் மூழ்கித்தான் வேலை செய்தாக வேண்டும். எல்லோரும் செய்ய முடியாது. இதற்கெனத் தேர்ந்த நீர்மூழ்கி வேலையாட்கள் உண்டு. ஆ க் ஸி ஜ ன் இணைப்புக்கள் போன்ற சாதனங்களோடு அதிக பட்சம் ஒரு குழு ஒரு மணி நேரம் தான் நீருக்கு அடியில் இயங்க முடியும்.



...கிணறு
...கலவையால்
...நிரம்புகிறது...

கிணறுகளுக்கு மேல் தட்டையான தூண்கள் அமைத்து, மேலே அவற்றை இணைக்கும் பாலம் உருவாக்கித் தரை போடும் பணிகளில் மனித ஆற்றலை விடப் பல மடங்கு இயந்திர ஆற்றலே வேலையை விரைவாக முடித்து வைக்கிறது. செலவு தான் கோடிக்கணக்கில்! இந்தப் பாலாற்றுப் பாலம் 3.09 கோடி ரூபாய் விழுங்கியிருக்கிறது!

இந்த நெடுஞ்சாலையில் NH-45 என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்திருக்கலாம். NH என்றால் நேஷனல் ஹைவே - தேசிய நெடுஞ்சாலைகளில் இது நெ. 45. இந்தச் சாலையின் புனரமைப்புத் திட்டத்தில் மிகவும் உயரமான பாலம் செங்கற்பட்டு - காஞ்சிபுரம் இருப்புப் பாதைக்கு மேலே அமையும் மேம்பாலம்தான். இதன் உயரம் தரைமட்டத்திலிருந்து பதினான்கு மீட்டர். இதற்கு இருபுறமும் சரிவான சாலை அமைத்துத் தரைமட்டத்தில் உருவாகிவரும் புதிய நெடுஞ்சாலையுடன் இணைக்க வேண்டும். இதற்கு ஆயிரக்கணக்கான லாரி மண்ணைக் கொண்டு வந்து நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மண் நிரப்புவது என்றால் எல்லா மண்ணும் சரிப்பட்டு வருமா? இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏரி மண்தான் வேண்டும். வேளாண்மைக்கு மட்டும்தான் மண் பரிசோதனை என்பதில்லை. சாலை போட, பாலங்கள் போடவும் மண் பரிசோதனை உண்டு! இதற்கென நெடுஞ்சாலைத் துறையில் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் 'மொபைல்' ஆய்வுக் கூடங்களே உண்டு!

ஏரி மண்ணாகு பற்றி அறிய மண் அழுத்தச் சோதனை செய்கிறார்கள். மண் பரப்பும் போதும் 3,000 கன மீட்டருக்கு ஒருமுறை தொடர்ந்து சோதனை செய்து மண்ணின் தரத்தைக் கண்காணிக்கிறார்கள்.

உதாரணமாக மூன்று மீட்டர் உயரம் மண் போடுவதானால் கன செண்டிமீட்டர் 1.44 கிராம் எடை இருக்க வேண்டும். மூன்று மீட்டருக்கு மேற்பட்ட உயரமானால் 1.52 கிராம் என்றெல்லாம் நிர்ணயிக்கப்பட்ட தர விதிகள் உண்டு.

மண்ணின் ஈரப்பதமும் ஒரே சீராக இருக்க வேண்டும். தேவைக்கு மேல் ஈரம் இருப்பின் உலர்த்த பிறகே சமப்படுத்துவார்கள். லாரி லாரியாகக் கொண்டு வந்து கொட்டப்படும் மண்ணை ஒரே சீராக 25 செ.மீ. உயரத்துக்குப் பரப்புவதற்கு ஒரு கருவி. பரப்பிய மண்ணை 15 செ.மீ. உயரமாக அழுத்திப் படிய வைப்பது ஒரு இயந்திரம். இது அதிர்வு முறையில் இயங்குகிறது. இப்படி ஒவ்வோர் அடுக்கு (லேயர்) மண் பரப்பிய பிறகும் தரப் பரிசோதனை. நூறு சதுர மீட்டருக்கு ஒருவராக அமர்ந்து கெட்டிப்பட்டுப் பாறை போல் ஆன தரையை வட்டமாகத் துளையிட்டுச் சோதனை செய்து பார்க்கிறார்கள். சரியான தரத்தில் இந்த அடுக்கு அமைந்திருக்கிறது என்பது உறுதியான பிறகே அடுத்த 'லேயர்' பரப்புவார்கள். ஏதாவது கோளாறு இருந்தால் அதைச் சீர்செய்து விட்டே மேலே தொடர முடியும்.

புதிய நான்கு வழி நெடுஞ்சாலை வழக்கம் போல் செங்கல்பட்டுக்குள் நுழைய முடியாது. அந்த நெரிசலில் சிக்குவதென்றால் இத்தனை செலவும் அகலப்படுத்துதலும் அர்த்தமற்றதாகி விடுமல்லவா? அதற்காக பைபாஸ் சாலை உருவாக்குகிறார்கள்.


இந்தப் புறவழிச் சாலை ஒரு பக்கம் மலைகளை அரணாகக் கொண்டு உருவாகி வருகிறது. மழைக் காலத்தில் நீர் பெருக்கெடுத்துப் பாலாற்றுக்கு ஓடும் பகுதியில், தரை மட்டத்திலிருந்து பன்னிரண்டு மீட்டர் உயர மேடை எழுப்பி, அதன் மேல் சாலை போட வேண்டும். கிட்டத்தட்ட ஓர் அணை கட்டுவது போன்ற முயற்சிதான். இரண்டு மலைகளுக்கு இடையில் தண்ணீர் போக வசதியாக அகன்ற குழாய்களை அமைத்து விட்டு அவற்றின் மேலே சாலையை உயர்த்துகிறார்கள்.

சாலைகளின் பக்கங்களைப் 'புருவம்' என்று சொல்கிறார்கள். போக இரட்டைச் சாலை, வர இரட்டைச் சாலை எனில் இரட்டைச் சாலைகளின் இடையில் 5 மீட்டர் அகலத்தை 'மீடியம்' என்று விட்டு விடுகிறார்கள். இடை மீடியத்தில் போகன்வில்லா போன்ற பூஞ்செடிகளை நெடுகிலும் வளர்க்கப் போகிறார்கள். இப்படிச் செடி மறைப்பு இருப்பது இரவில் எதிரெதிரே வரும் வண்டிகளின் வெளிச்ச இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகத் தான்.

நான்கு வழிப் பாதைகள் முடிவுறும் போது வாகனங்கள் எவ்விதத் தடையுமின்றி நூறு கி.மீ. வேகத்தில் பயணம் செய்து நேரத்தை மிச்சப்படுத்தலாம். பிரயாணத்தின் போது ஓய்வெடுக்க விரும்பும் வாகனங்கள் சாலைகளின் ஓரத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள bay யில் நின்று கொள்ளலாம்.

இன்னும் சில தகவல்கள் :

●● இப்போதெல்லாம் 'தார்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதில்லை. பெட்ரோலியத்தின் இறுதிக் கழிவுக்கு 'பிடுமன்' என்றே சொல்கிறார்கள். சரளை மண்ணுடன் பிடுமன் கலந்துதான் இப்போது சாலைகளின் மேற்புறங்கள் அமைகின்றன. இந்த பிடுமனின் தரம் இடத்துக்கு இடம் மாறுபடுகிறது. தண்ணீர் மாதிரி, பெட்ரோலியமும் இடத்துக்கு இடம் தரமாறு பாடு கொண்டதாக இருக்கிறது. சென்னை 'ரிபைனரி'யில் கிடைக்கும் பிடுமன் இதுபோன்ற



பெரிய திட்டங்களில் அமையும் சாலைகளுக்கு உகந்ததில்லையாம். இந்த நான்கு வழிச் சாலைக்காக பம்பாய் ரிபைனரியிலிருந்தே பெறுகிறார்கள். பிடுமன் நெகிழ்ச்சியில் இயல்பாக ஊசி இறங்குகிற அழுத்தத்தை வைத்துத் தர நிர்ணயம் செய்யப்படுகிறது.

●● அடுத்த ஆண்டு இறுதியில் திட்டப்பணி முழுமையாக நிறைவுறும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆறு கட்டங்களில், மூன்று நிறுவனங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. உ.பி. மாநிலக் கார்ப்பொரேஷன் பாலாற்றுப் பாலம் கட்டியது தவிர, இந்திய பிரிட்டிஷ் கூட்டு நிறுவனமான 'ஆஃப்கான்ஸ் பாலிங்' நிறுவனமும், அட்லாண்டா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனமும் தனித்தனியே இப் பணிகளை நிறைவேற்றுகின்றன.

●● முதன் முறையாக 'தெர்மோ பிளாஸ்டிக் பெயிண்ட்' இந்தச் சாலைகளின் வழிகளைப் பிரித்துக் காட்டப் பட்டையாகப் பூசப்படுகிறது. இது இரவில் ஒளி பட்டு மின்னிப் பிரதிபலிக்கும் இயல்புடையது. செங்கல்பட்டு - விழுப்புரம் பகுதிக்கு மட்டும் இந்தப் பெயிண்டுக்காக இருபத்து நான்கு லட்ச ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். மூன்று ஆண்டுகள் இந்தப் பெயிண்ட் அப்படியே நிற்குமாம்.

●● இந்தச் சாலை அமைப்புப் பணியில், தேவையான கூடுதல் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியிருப்பதால் எத்தனையோ இடையூறுகள், மத உணர்ச்சிகள் எல்லாமும் உண்டு. பொதுப் பணி என்கிற முறையில் யார் மனமும் புண்படாமல் நிறைவேற்றியாக வேண்டும். சிங்கப் பெருமாள் கோவிலில் சாலையோரமாக இத்தனை ஆண்டுகளாய் நின்று கொண்டிருந்த வாகன மண்டபத்தைப் பிரித்து அகற்றி விட்டு, வேறு இடத்தில் புதிதாய் அமைத்துத் தரும் பணி நடைபெறுகிறது. இப்படியே வழிபாட்டுக்கு உரியதாய் இருந்த ஒரு பாம்புப் புற்றையும் இடம் மாற்றியிருக்கிறார்கள்.


●● பாலங்களைப் பழுதுபார்ப்பதற்கென்றே ஒரு பிரும்மாண்டமான இயந்திரம் வந்துள்ளது. ஐந்து தென் மாநிலங்களுக்கும் பொதுவாக உள்ள இந்த BRIDGE INSPECTION UNIT சென்னைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் தயாரான இதன் விலை இரண்டே கால் கோடி ரூபாய். பெட்டிப் பாம்பாய் ஒரு பெரிய சரக்கு லாரி போல் பாலத்தின் மீது வந்து நின்று கொள்ளும் இதன் 'மந்திரக் கைகள்' பிரிந்து அழகாக வளைந்து பாலத்துக்கு அடியில் ஆட்களுடன் போய் எட்டிப் பார்த்து 'என்ன சௌக்கியமா?' என்று விசாரிக்கும். அவ்வளவும் அலுமினியக் குழாய்கள். பத்துப் பதினைந்து பேர் கூட தாராளமாய்ப் பாலத்தின் ஒவ்வொரு கண்ணுக்கு அடியிலும் போய் 'நாடி' பிடித்துப் பார்க்கலாம். ஹைட்ராலிக் சக்தியால் இயங்கும் இது நவீனப் பொறியியல் திறமைகளுக்கு ஒரு சான்று.

– 'கலசை'



கல்கி

1992
ஆகஸ்டு 2
மலர் : 51
இதழ் : 1
ஆங்கீரச
ஆடி 18



தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

ஆண்டவனையும் அரசியலுக்கு இழுக்கிறார்கள்!

பிரதமரை நினைத்துப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. எல்லோருமாக ஒரே சமயத்தில் மனுஷனைப் பாடாதபாடுபடுத்துகிறார்கள். 'உ.பி. அரசைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சி கொண்டு வர வேண்டும்' என்று தேசிய முன்னணி அலற, மறுபக்கம், 'உ.பி. அரசைக் கலைத்தால் நாடு தழுவிய போராட்டம்' என்று பி.ஜே.பி. போர் முரசு கொட்ட, காங்கிரஸுக்குள்ளேயே அர்ஜுன் சிங்கின் பின்பாட்டு பிரதமர் பாட்டோடு இழையாமல், சுருதி மாறி ஒலித்து, நாராசமாய் விளங்க, பாவம், பிரதமர் பாடு திண்டாட்டம்தான். இத்தனைக்கிடையிலும் பொறுமை காத்து, அசம்பாவிதம் எதும் நிகழ்ந்து விடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் அவர் நடந்து கொள்வதும் பாராட்டுக்குரியதுதான்.

உ.பி.யில் ராமர் கோயில் கட்டுவதாக வாக்களித்து, விச்வஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகளின் உதவியுடன் பதவிக்கு வந்துள்ள கல்யாண்சிங், 'கர சேவை'யைத் தடுக்க முடியாமல் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்பதில் வியப்பு ஒன்றுமில்லை. சாதுக்கள் என்று தங்களை வர்ணித்துக் கொள்ளும் மத வெறியர்கள், நீதிமன்ற உத்தரவுகளைக் கூட மதிக்காமல் நடந்து கொள்வதை முதல்வரால் கட்டுப்படுத்த முடியவில்லை. உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற உத்தரவுகளை ஓர் அரசு நிறைவேற்றி வைக்க முடியாமல் விழிக்கிறது என்றால், அந்த அரசுக்கு ஆட்சித் திறனில்லை, வேறு ஒரு தரப்பின் கைப்பாவையாகி விட்டது என்பதே அர்த்தம். அல்லது நீதிமன்றங்களுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தி விட்டது என்பதே பொருள். இந்த நிலையில் அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய மத்திய அரசு முழு அதிகாரமும் உரிமையும் பெற்றுள்ளது.

ஆனால் பிரதமர் இந்த அம்சத்தை மட்டும் பாராமல் பின்விளைவுகளையும் முன்கூட்டியே சிந்திக்கிறார். கலகங்கள், போராட்டங்கள் என்று மதத் தீவிரவாதிகள் ஆரம்பித்தால், நாடு அமைதி இழக்க, மக்களுக்குத்தான் பெரும் கஷ்டம். அதோடு இன்றுள்ள நத்தை வேகப் பொருளாதார முன்னேற்றமும் ஸ்தம்பித்துப் போகும்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் விமானங்களில் "சாதுக்களை" அள்ளிப் போட்டுக் கொண்டு டில்லிக்குக் கொணர்ந்து, கௌரவம் பாராமல் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார் பிரதமர். சாதுக்களும் (?) ஏதோ தலையாட்டி விட்டு வந்துள்ளனர். இதில் நல்லெண்ணத்தை விடவும் சாமர்த்தியமே அதிகம். 'பிரதமரே அழைத்தும் கூட விட்டுக் கொடுக்கவில்லை' என்று பழிசுமத்தப்பட வேண்டாம் என்பதற்காகத்தான், ஒரு கட்டத்தோடு கோயில் கட்டுமானப் பணியைத் தாற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக வாக்களித்திருக்கிறார்கள். சிறிது காலத்துக்குள் மறுபடி 'கரசேவை' என்று ஆரம்பிப்பார்கள். "ரத்தம் சிந்துவோம்; உயிர் கொடுப்போம்; கோயில் கட்டுவோம்!" என்று மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி விடும் இவர்களைக் கடவுளே நம்ப முடியாது என்னும் போது பிரதமர் எம்மாட்டு!

இதற்கெல்லாம் தீர்வு ஒன்றே ஒன்றுதான். உயர்நீதிமன்றத்தில் உள்ள சில வழக்குகளையும் உச்சநீதிமன்றத்துக்கே கொண்டு போக வேண்டும். அங்கே எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக அலசிப் பார்த்து முடிவான பெஞ்சுத் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வோர் அம்சத்திலும் தீர்ப்புகள் துரிதமாக வழங்கப்பட, நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி தீர்ப்பு வழங்கப்பட்டபின், அந்தப் பெரும்பான்மை அல்லது ஏகமனதான தீர்ப்பை மத்திய அரசு அமுல்படுத்த வேண்டும். யாருக்குச் சாதகம், யாருக்கு பாதகம் என்று பாராமல் அமுல்படுத்த வேண்டும். தீர்ப்பைச் செயல்படுத்த மாநில அரசு ஒத்துழைக்காது போனால் அதனை 'டிஸ்மிஸ்' செய்யவும் தயங்கக் கூடாது.

இந்த ரீதியில்தான் பிரதமர் சிந்தித்துச் செயல்பட்டு வருவதாகத் தெரிகிறது. முக்கியமான விஷயம், வழக்குகளை இழுத்தடிக்காமல் முன்னுரிமை தந்து முடிவான தீர்ப்புகளை வழங்குவதே. எப்படியும் ஒரு தரப்புக்கு ஏமாற்றம் ஏற்படத்தான் செய்யும். அதற்காக நாட்டையும் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது.


நான்தான் காசி பண்றேனா? புதுசா வர்றவர்கிட்டே நீட்டுங்களேன்!
ஐயோ! வந்ததும் வராததுமா எதுக்கு அபசகுனமா? அவர் கிட்டேயே கையெழுத்து வாங்கித் தாங்களேன்!
உ.பி. அரசு டிஸ்மிஸ்
சர்மா
எனக்கு மட்டும் எதுக்குக் கெட்ட பேரு? பேசிப் பார்க்கறேன், நடக்கறது நடக்கட்டும்!
பிரதமர்
வைரயா! கரி பூசிட்டேன்!
ஐயய்யோ... என் மூஞ்சியையும் பூசிக்கிட்டேனே...!
ஏம்மா, சசிகலா... கிருஷ்ணமூர்த்தி காசி கடுதாசி குடுத்திட்டாராம்... சிதம்பரம் 'குட்பை' சொல்லிட்டாராம்... என்னமோ தார்மீகப் பொறுப்பு ஏற்றுக்கிட்டாங்களாம்... அப்படின்னா என்ன? உனக்காவது தெரியுமா?

கல்கி பொன்விழா!
உங்கள் வீட்டுத் திருவிழா!

அன்புடையீர்,
வணக்கம்.

ஸ்ரீ சதாசிவம் - ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
தம்பதியின் நல்லாசிகளோடு,

கல்கி

வார இதழின்

பொன் விழா

வருகிற ஆகஸ்டு 1உ சென்னை, தேனாம்பேட்டை,
காமராஜர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

குடியரசுத் தலைவர் மேதகு
ஸ்ரீ ஆர். வேங்கடராமன் அவர்கள்
தலைமை வகித்துச் சிறப்பிக்கிறார். தாங்கள்
அவசியம் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்து எங்களை
மகிழ்விக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
வி. வைத்தியநாதன் (சேர்மன்)
கி. ராஜேந்திரன் (ஆசிரியர், கல்கி)
வி. முரளி (டைரக்டர்)
பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்

நிகழ்ச்சி நிரல்

காலை

10:00 : நாதஸ்வரம் : ஸ்ரீ ஏ. கே. மதுரை குழுவினர்
10:30 : இறைவணக்கம் : ஸ்ரீமதி சுதா ரகுநாதன்
10:35 : பிரசாதங்கள் ஏற்று வணங்குதல்.
10:40 : வரவேற்புரை : ஸ்ரீ கி. ராஜேந்திரன் (ஆசிரியர், கல்கி)
10:50 : மாண்புமிகு நீதிபதி. மு. மு. இஸ்மாயில் தலைமை ஏற்று, கல்கி பொன் விழா இலக்கியப் போட்டிகளில் பரிசு பெற்றோரைக் கௌரவிக்கிறார்.
11:30 : கல்கி பொன் விழா சிறப்புத் தபால் உறையினை தமிழ்நாடு, முதன்மை அஞ்சல் துறைத் தலைவர், ஸ்ரீ பி. பார்த்தசாரதி வெளியிட, சென்னை நகர ஷெரீப் ஸ்ரீ சுரேஷ் கிருஷ்ணா பெறுகிறார்.

12:00 முதல் 1:00 வரை
பட்டிமன்றம்
"நமது நாட்டின் எதிர்காலம்"
திரு சாலமன் பாப்பையா தலைமை வகித்து நடத்துகிறார்

பொன் விழா நிகழ்ச்சி

மாலை	5:30	:	குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைப்பவர் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இறைவணக்கம் : ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி
வரவேற்புரை		:	ஸ்ரீ வி. வைத்தியநாதன், (சேர்மன், பாரதன் பப்ளிகேஷன்ஸ்)
வாழ்த்து மடல்கள் வாசிப்பவர்		:	ஸ்ரீ கி. ராஜேந்திரன் (ஆசிரியர், கல்கி)
தலைமையுரை		:	குடியரசுத் தலைவர் மேதகு ஸ்ரீ ஆர். வெங்கடராமன்
கல்கி பொன்விழா மலர் வெளியீடு		:	முதல் பிரதியை வழங்குபவர் ஸ்ரீ ஜி. கே. சுந்தரம் சேர்மன், லக்ஷ்மி மில்ஸ், கோயமுத்தூர். பெறுபவர் : ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணன் தலைவர், இந்தியன் வங்கி.
வாழ்த்துரைகள்		:	ஸ்ரீ எம். வி. அருணாசலம் சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் ஸ்ரீ ம. பொ. சிவஞானம் ஸ்ரீமதி சிவசங்கரி ஸ்ரீ 'சோ' ராமஸ்வாமி ஸ்ரீ கே. பாலசந்தர் ஸ்ரீ மீ. ப. சோமசுந்தரம் (சோமு)
நன்றியுரை		:	ஸ்ரீ வி. முரளி, (டைரக்டர், பாரதன் பப்ளிகேஷன்ஸ்)
	7:30	:	தேசிய கீதம்
	7:45	:	பூர்ணம் நியூ தியேட்டர் வழங்கும் அமரர் கல்கி எழுதிய 'கமலாவுக்குக் கல்யாணம்' நாடக அமைப்பு : ஸ்ரீ பூர்ணம் விசுவநாதன்.

இணைப்புரை : கவியரசு திரு வைரமுத்து.

கல்கி பொன்விழா சிறப்புத் தபால் உறை

கல்கி பொன் விழாவையொட்டி அமரர் கல்கி அவர்களின் திருவுருவப் படத்துடன் சிறப்புத் தபால் உறை தயாராகியுள்ளது. விழாவில் வெளியிடப் பெறும் இந்த அழகிய தபால் உறை, ஒரு ரூபாய் ஸ்டாம்பு உள்பட மூன்று ரூபாய்க்குக் கிடைக்கும். தபால் துறையினர் சிறப்பு முத்திரையிட்டுத் தருவார்கள். அந்தச் சிறப்பு முத்திரையில் கல்கியின் காவல் தெய்வமான "கல்கி விநாயகர்" காட்சியளிக்கிறார். விழா அரங்கத்திலோ அல்லது சென்னை அண்ணா சாலை தபால் நிலையத்திலோ ஆகஸ்டு 1உ பெற்றுக் கொள்ளலாம். கல்கி பொன் விழா ஞாபகார்த்தப் பொக்கிஷமாக வைத்திருந்து போற்றிப் பாதுகாக்கலாம். அல்லது, கல்கி பொன் விழாவுக்கு நீங்கள் வந்திருந்ததை நண்பர்களுக்கு அங்கேயே கடிதம் எழுதித் தெரிவிக்கவும் இந்தத் தபால் உறையை நீங்கள் பயன்படுத்தலாம்.



● வையவன்



● எம். எஸ். ஜெயராமன்



● மு. மேத்தா



● சிவசங்கரி



● மாலன்



● பேராசிரியர் சந்திரசேகரன்



● விக்ரமன்

கல்கி பொன்விழா நாவல் போட்டி முடிவுகள்

நடுவர்கள் : நான்கு வகை நாவல்களுக்கும் நான்கு நடுவர் குழு அமைக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவிலும் கல்கி ஆசிரியர் தவிர பின்வருவோர் பங்கேற்றனர்.

சமூக நாவல் : சிவசங்கரி; எம். எஸ். உதயமூர்த்தி.

விஞ்ஞான நாவல் : எம். எஸ். ஜெயராமன், மாலன்.

மர்ம நாவல் : பேராசிரியர் சந்திரசேகரன், வையவன்.

சரித்திர நாவல் : மு. மேத்தா, விக்ரமன்.

இவர்களில் எம். எஸ். உதயமூர்த்தி மட்டும் ஒரு கூட்ட ரயில் தடம் புரண்டதால் குறிப்பிட்ட தினத்தில் சென்னை திரும்ப முடியாமல் போகக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மற்ற அனைவரும் 12.7.92 அன்றும் 19.7.92 அன்றும் கூடி விவாதித்துப் பின் வரும் நாவல்களைப் பரிசுக்குரியவை என்று தீர்மானித்தனர்.

சமூக நாவல் : (பரிசுத் தொகை ரூ 10,000/-)

முற்றுகை

எழுதியவர் :

மேலாண்மை பொன்னுச்சாமி,

மேலாண்மறை நாடு,

காமராஜர் (மாவ) 626 127.

மர்ம நாவல் : (பரிசுத் தொகை : ரூ 5000/-)

நரகமான நகரம்

எழுதியவர் : **பெனிட்டோ குமார்,**

அச்சம்பாடு அஞ்சல்,வள்ளியூர் (வழி),

நெல்லை (மாவ) 627 117.

விஞ்ஞான நாவல் : (பரிசுத் தொகை ரூ 5000/-)

ஆத்மாவுக்கு ஆபத்து!

எழுதியவர் :

ஆர். சேகர் (நவீன சாஸ்திரி)

119 B, பிளாக் - 6,

நெய்வேலி - 607 803.

சரித்திர நாவல் : (பரிசுத் தொகை ரூ 20,000/-)

பின்வரும் இரண்டு நாவல்களுமே சமமான அளவில் பரிசுக்குரியவை என்று நடுவர்கள் தீர்மானித்ததால் பரிசுத் தொகையான ரூ 20,000/- இவற்றை எழுதியவர்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பாண்டியன் மகள்

எழுதியவர் :

இரா. ஷண்முகராஜன் (விஷ்வக்சேனன்)

SP4, 5வது அவென்யூ, அசோக் நகர்,

சென்னை - 600 083.

மணிக்கொடி

எழுதியவர் : **ஜோதிர்லதா கிரிஜா,**

830, சிண்டிகேட் வங்கி ஊழியர் குடியிருப்பு, 9வது தெரு,

அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம்,

சென்னை - 600 101

பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்கள் பற்றிச் சம்பந்தப்பட்ட நாவலாசிரியர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

பரிசு பெற்ற சமூக நாவல் இந்த இதழில் ஆரம்பமாகிறது.

பரிசு பெற்ற இதர நாவல்கள் கூடிய விரைவில் கல்கியில் பிரசுரமாகும்.

நடுவர்களாக விளங்கி ஒத்துழைத்தவர்களுக்கும் போட்டியில் பங்கேற்ற ஏராளமான நாவலாசிரியர்களுக்கும் நன்றி.

– ஆசிரியர்.

புகைப்படங்கள் : **யோகா**

சார்மினார் சானல்

அமெரிக்கா வந்த வேற்று கிரக மனிதன்!



● வேற்று கிரக மனிதன்



● அந்த மனிதன் வந்த விண்கலம்

சென்ற ஆண்டு ஆகஸ்ட் 12 - ம் தேதி பசிபிக் சமுத்திரத்திலிருந்த ஓர் அமெரிக்க கடற்படைக் கப்பல் தளத்தில் ஒரு விண்வெளிக் கப்பல் வந்திறங்கியிருக்கிறது. புருவமற்ற, பூனைக்கண் உடைய ஒருவனைக் கப்பல் படையினர் பிடித்திருக்கிறார்கள். மூன்று நான்கு வயதுச் சிறுவனைப் போல காணப்படும் அவன், தன் வயது ஐநூறு என்கிறான்.

அந்த விண்வெளிக்கலமும், கிரகவாசியும் வாஷிங்டனில் ரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாக சி.ஐ.ஏ. உளவு ஸ்தாபனத்தைச் சார்ந்த ஒருவர் போட்டோக்களுடன் வெளியிட்டிருக்கிறார். சி.ஐ.ஏ. ஏஜண்டுகள் பலர் அவனுடன் பேசி இருக்கிறார்களாம். புஷ் கூட பேசியதாகச் செய்தி. பல மொழிகளை கிரகித்துக் கொள்கிற சக்தி பெற்றிருக்கிறான்.

விஞ்ஞானிகள் அந்த வேற்றுக் கிரகவாசியை ஆராய்ந்து வருகிறார்கள். வேற்று கிரகத்திற்குப் பயணம் செய்யக் கூடிய சக்தி வாய்ந்த விண்வெளிக் கலத்தை உருவாக்கும் முயற்சிக்கு அந்த கிரகவாசியின் தகவல்கள் பயன்படுமா என்று பார்க்கிறார்கள்.

ஏன்ரோமெடா கேலாக்ஸியைச் சார்ந்த எல்வார் என்ற கிரகத்தைச் சேர்ந்தவன் என்று அவன் சொல்கிறான். ஐக்யூ நானூறைத் தாண்டுகிறது. அதி மேதாவியாகத் தென்படுகிறான். அவனுடைய உணவு சாதாரணமாகவே இருக்கிறது. கறுப்பு பெரி பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறான். ஆட்டுப்பால் குடிக்கிறான்.

அவன் வந்த விண்வெளிக்கலத்தை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

நவம்பரில் நடக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது, புஷ் இந்த கிரகவாசியை வெளிக் கொணர்ந்து பரபரப்பாக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சி.ஐ.ஏ.வோ, வெள்ளை மாளிகை அதிகாரிகளோ இச் செய்தியை மறுத்து இது வரை எதுவும் கூறாததாலேயே உண்மையாயிருக்கும் என்று பலர் கருதுகிறார்கள்.

செய்தியை நம்புகிறோமோ இல்லையோ இங்கு தெலுங்குப் பத்திரிகைகள் பலவற்றில் இந்தச் செய்தியும் படங்களும் வெளி வந்து கொண்டிருப்பது என்னவோ உண்மை.

● விசாகப்பட்டினத்து கிராமமொன்றில் ஜிங்க் தொழிற்சாலையொன்று உள்ளது. அந்த கிராமத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் சுகாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த கிராமங்களில் மரங்களேயில்லை. பறவைகளும், மாடுகளும் உயிர் வாழ்வதில்லை. ஒருவராவது ஊனமில்லாத குடும்பம் இல்லை. எல்லாவற்றுக்கும் அந்தத் தொழிற்சாலைதான் காரணம் என்கிறார்கள்.

● தெலுங்கானா மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பு, முன்னுரிமை தர வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் எழுந்ததுதான், ''தெ லு ங் கா னா அமைப்பு''. 1967 - ல் இதுகுறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான ம க் க ள் உயிரிழந்தனர். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், இப்போது இவ்வமைப்பை புனருத்தாரணம் செய்திருக்கிறார்கள். கட்சி வேறுபாடு இன்றி, அமைப்பின் சமீப கூட்டமொன்றுக்கு இருபது எம்.எல்.ஏக்களும், நான்கு எம்.பிக்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் கட்சியினர்! அரசு திகைப்புடன் பார்க்கிறது!

● நகைச்சுவைப் படங்களுக்கு எப்போதும் இங்கே மவுசு உண்டு. ''ஜம்பலக் கிடிபம்பா'' சக்கைப் போடு போடுகிறது. அல்லி ராஜ்யம்! ராமலட்சுமி என்ற பெண் ஆண் ஆதிக்கத்தை வெறுக்கிறாள். ஆண்களை அடக்க அவளுக்கு ஒரு திரவம் கிடைக்கிறது. குடிநீர் வினியோக டாங்கில் அதைக் கலந்துவிடுகிறாள். அதைக் குடித்ததால் ஆண்கள் மங்கல சூத்திரம் அணிகிறார்கள்; பெண்கள் குடிக்கிறார்கள்; ஆண்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். பிரசவ வலி கூட ஆண்களுக்கே! இதில் ஒரு போலீஸ் அதிகாரியும் மாட்டிக் கொள்கிறார். ஆயினும் அதிலிருந்து அவர் மீண்டு, நீரைச் சுத்தமாக்குகிறார். பெண்களின் மகோன்னத ஆதரவு இப்படத்திற்கு. இருக்காதா பின்னே, அவர்களின் உள் மன ஆசைகள் நிறைவேறுகின்றனவே!

- அப்பன்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(புதுவை அரசு நிறுவனம்)

புதுச்சேரி - 605 001

கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம்

தமிழ்க் கவிஞர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஓர் வேண்டுகோள்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுவை அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் தன்னாட்சி ஆய்வு மையமாகும். இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டமும் ஒன்றாகும். இருபதாம் நூற்றாண்டில் வெளியாகியுள்ள எல்லா வகையான தமிழ்க் கவிதைகளையும் திரட்டி, கணிப்பொறியின் துணை கொண்டு நிரல்படுத்திப் பாதுகாத்தல், சிறந்த மரபுக்கவிதைகளையும், புதுக் கவிதைகளையும் பொருள் மற்றும் வடிவ அடிப்படையில் வகுத்து ஒரு தெளிவான புதிய வடிவ-உள்ளடக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் தொகை நூல்களாக வெளியிடுதல் முதலான இலக்குகளைக் கருத்தில் கொண்டு கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்தினைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் இருபதாம் நூற்றாண்டில், இந்தியா மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலான நாடுகளில் வெளியாகியுள்ள எல்லாத் தமிழ்க்கவிதைகளையும் திரட்டித் தொகுக்கும் இறுதிக்கட்டப் பணியில் மேற்படி ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான செய்திக்குறிப்பு ஏற்கெனவே நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், வானொலி முதலான மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக வெளிவந்துள்ளது. இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வானொலி, செய்தித் தாள்கள் வாயிலாகத் தமிழ்கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம் தொடர்பான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நாம் இதுவரை வெளியிட்டுள்ள கவிதைகளையும், தம்மிடம் நூல்வடிவில் உள்ள கவிதைகளையும் அருள்கூர்ந்து நிறுவனம் மேற்கொண்டுள்ள கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்திற்கு வழங்குமாறு புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்க் கவிஞர்களை வேண்டிக்கொள்கிறது. அவ்வப்போது வெளியாகி, தொகுக்கப் பெறாமல் உள்ள கவிதைகளைத் தனித்தாளில் எழுதியோ, ஒளிப்படப்பிரதியாகவோ கவிஞர் பெயர், வெளியான இதழ், ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிட்டு நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கலாம். இந்த நூற்றாண்டில் வெளியான/வெளியாகிக் கொண்டிருக்கும் ஏராளமான தமிழ்க் கவிதைகளும், கவிதைத் தொகுதிகளும் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த நூற்றாண்டின் எந்த ஒரு தமிழ்க்கவிதையும் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்திலிருந்து விடுபட்டுவிடக் கூடாது என்பதில் மேற்படி நிறுவனம் கருத்தாகவும் கவனமாகவும் இருந்துவருகிறது. ஆயினும், தமிழ்க்கவிஞர்களின் ஒத்துழைப்பின்றி கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே இந்த அறிவிப்பினை இறுதி வாய்ப்பாகக் கருதி தங்கள் கவிதைகளையும், கவிதைத் தொகுதிகளையும் **இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 19, சின்ன சுப்புராயப்பிள்ளை வீதி, புதுச்சேரி -605 001 (இந்தியா)** என்ற முகவரிக்கு விரைந்து அனுப்புமாறு உலகெங்கிலுமுள்ள தமிழ்க் கவிஞர்களை வேண்டிக் கொள்கிறோம்.

இயக்குநர்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

பொன்விழா
நாவல் போட்டியில்
ரூ.10,000
முதல் பரிசு

பெறும் சமூக நாவல்

முற்றுகை

அருந்ததியின் ஸ்கூட்டர் வேப்பமர நிழலில் வந்து நின்றது. வண்டியின் மூச்சையடக்கினாள். நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு உட்கார வைத்தாள்.

நழுவிக் கொண்டு ஓடுகிற பாலியஸ்டர் வேட்டியை இடது கையால் கொத்தாகப் பற்றிக் கொண்டு நிமிர்ந்தாள்.

கண்ணாடியைக் கழற்றியவுடன், சாயங்கால வெய்யில் கண்ணைன்று தாக்க, கண்களை இடுக்கினாள்.

ஸ்கூட்டரின் சப்தம் கேட்டு, ஒற்றைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் ரத்னம். அவள் கண்களில் வியப்பு. முகத்தில் மலர்ச்சி.

இரும்புக் கேட்டைத் திறந்து கொண்டு நுழைந்தாள்.

''என்ன இது, ஆச்சர்யமாயிருக்கே?''

''ம்...''

''சாயங்காலமே வீட்டுக்கா? என்னடியம்மா இது, மழை கொ வரப் போகுதா?''

''ஏன், வரக் கூடாதா?''

மேலாண்மை பொன்னுச்சாமி

அவள் மீது மோதிக் கொண்டு, திறந்திருந்த ஒற்றைக் கதவுக்குள் நுழைந்து, உட்புறமாகச் சிரித்தாள்.

குப்பென்று வியர்க்கிறது. உடம்பெல்லாம் ஒரே நசநசப்பு. ஷர்ட்டைக் கழற்றி விட்டு, நடு ஹாலில் மின்விசிறியைத் தட்டி விட்டு, நாலுக்கு உயர்ந்தினாள்.

இரைச்சலுடன் அறையெங்கும் பரவுகிற காற்று.

நெருங்கி நின்ற ரத்னத்தின் கண்களில் இன்னும் ஆச்சர்யம். தங்கி நிற்கிற கேள்விக் குறி.

காலையில் நீப் பெட்டியாபீஸுக்குப் போனால்... மதியச் சாப்பாட்டுக்கு வருவது நிச்சயமில்லை. வந்தால்... உண்டு. வராவிட்டாலும் அவ்வளவுதான்.



அப்புறம் ஆளை ராத்திரி பத்து மணிக்கும் மேல் ஓர் அகால நேரத்தில்தான் எதிர்பார்க்கலாம். முழுக்க வேலை, வேலை, வேலைகள்தான்.

அப்படி 'வேலை, வேலை' என்று கிடக்கிற ஆள், சாயங்கால அதிசயமாக இப்படி வந்து மின்னினால், ஆச்சரியமாக இருக்காதா, என்ன?

அவள் கண்களைப் பார்த்தான், அருஞ்கனை. சாதாரணமாய்ச் சிரித்தான். அவள் வியப்புக்கு பதில் சொல்வதைப் போலச் சொன்னான்.

''நம்ம தீப்பெட்டிக்கு பீகார்லே ஆர்டர் பிடிக்கிற முத்துச்சாமியைப் பார்க்க வேண்டியிருந்துச்சு. நேத்துத்தான் வந்துருக்கான் அவன். அவனைப் பாத்துட்டுப் போற வழி தானேன்னு, இங்கே உன்னைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''இருங்க... ஹார்லிக்ஸ் போட்டுத் தாரேன்.''

''வேண்டாம் ரத்னம், இப்பத்தான் காப்பி குடிச்சேன்.''

''பரவாலே. எங்கையாலே போட்டுக் குடுத்த மாதிரி இருக்குமா?''

துள்ளலுடன் உள்ளே சென்றவளைப் பார்த்தான். ''சரி... கொண்டா'' என்று உற்சாகமாகச் சொல்வது போலப் பாவனை செய்தான்.

அவளது அகலமான முதுகைப் பார்த்தான். ஃபுல்வாயில் ஜாக்கட்டையும், ப்ராவையும் மீறித் திமிறிக் கொண்டு, கறுப்புச் சதை மடிப்புகள்...

கேலியாக உதட்டைப் பிதுக்கிக் கொண்டான். ரகசியமாகத் தோளைக் குலுக்கிக்



கொண்டான். 'கருமுண்டம்...'

மனசுக்குள் வெறுப்போடு ஓ டு கி ற நினைவுகள். சோபாவின் முதுகில் கிடந்த ஷர்ட்டை எடுத்து, ஹாங்கரில் மாட்டினான்.

சுவரில் பெரிய அகலமான புகைப்படத்தில், இவனது மாமா. ரத்னத்தின் அப்பா. சந்தன மாலைக்குள் அமரராகி இருந்த மாமாவுக்கு மீசையில்லாத முகம். அடர்த்தியான நரைத்த புருவம். காது மடல்களில் சிலிர்த்துக் கொண்டு ரோமக் கற்றை. காலர் இல்லாத கதர்ச் சட்டை. தலைவழியாக மாட்டுகிற சட்டை. கழுத்துக்குக் கீழே சட்டையில் தங்க ஊக்குகளும், பித்தான்களும்.

மாமாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். மனசுக்குள் முட்டி மோதுகிற முரண்பாடான நினைவுகள். மரியாதை உணர்ச்சியின் ஆழத்தில், வெறுப்பான கைப்புணர்ச்சியும்...

...நீலநிறத்தில் மு ர ட் டு அழுக்குத் துணியை இடுப்பில் சுற்றிக் கொண்டு கந்தகக் கலவைக்குள் கிடந்தவன். இடுப்புயர அடுப்பில் எரிகிற 'தகதகா' நெருப்புச் சீறல். கனத்த குச்சிக் கட்டைகளைத் தூக்கித் தூக்கி, மருந்து முக்கி முக்கி எடுத்தவன். முக்கி எடுக்கிறபோதெல்லாம் குபீரென்று எழுகிற தீயின் அனலில் வெந்தவன்.

வெறும் முந்நூற்றைம்பது ரூபாய் மாசக் கூலியாகக் கந்தகத்திலும் நெருப்பிலும் வெந்து கிடந்த போர்மேன் அருஞ்சுனையை... இந்தக் கடல் மாதிரியான தீப்பெட்டி ஆலைக்கே முதலாளியாக மாற்றிய மாமா.

இவன் அந்தஸ்தை இவனே நம்ப முடியாத அளவுக்கு உயரத்தில் தூக்கி நிறுத்தியவர். இவனது தலைஎழுத்தைத் தலைகீழாகப் புரட்டி எழுதியவர்.

'வாடா, போடா' என்று சகஜமாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்த சக தொழிலாளிகளையெல்லாம் 'முதலாளி' என்று கூப்பிட முடியாமல் திணறிப் போகச் செய்தவர், மாமா.

அதற்கும் ஒரு விலை தர வேண்டியிருந்தான் அருஞ்சுனை. அதற்கான விலையே அருஞ்சுனைதான். கரிக்கட்டையாக இருந்த ரத்னத்திடம் புருஷ உத்யோகம்.

முதலாளி, தன் மகளை ஒரு கூலிக்காரனுக்கு ஏன் தந்தார்? அதுவும் தன் வேலைக்காரனுக்கு. ரத்னம் கறுப்பு என்பது மட்டும் தான் காரணமா? கறுப்பு கசக்கவா செய்யும்? ரத்னம், ஊசிப்போன பலகாரமா? கெட்டுப் போன தின்பண்டமா? யாரும் பார்த்தால் மூக்கைச் சுளித்து அருவருக்கிற பொருளாகி விட்டாளா?

இப்படியெல்லாம்... சந்தேகப்பட்ட அருஞ்சுனையை ஆலை முதலாளி என்கிற கவர்ச்சி இழுத்தது. சந்தேகங்களை ஜீரணித்துக் கொண்டது. கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அந்தஸ்தும், உரிமையும், பணவசதியும்...

இப்போது... சொத்து சுகம் முழுக்க இவள் பெயரில். இவளிடம் இவனுக்குப் புருஷ பதவி.

இவனையும் ஏமாற்றிக் கொண்டு, அவளையும் ஏமாற்றி, பொய்யாகச் சிரித்து, போலியாக மயங்கி... அவளைப் புல்லரிக்கச் செய்து...

கசப்பான சுமையாக மனசை அழுத்துகிற வதைக்கிற- கணவன் உத்யோகம்.

மாமாவைப் பார்த்தான்.

'இவர்... ஒரு நாதியற்ற ஏழையைப் பணக்கார வாழ்க்கையில் ஏற்றி வைத்து வாழ்வு தந்தவரா, அல்லது... நாதியற்ற ஓர் ஏழையின் இயலாமையையும், சபலத்தையும் பயன்படுத்தி, தன் கெட்டழிந்த மகளின் எதிர்காலத்துக்கு வேலியாக்கிக் கொண்ட சுயநலக்காரரா?'

''என்னங்க'' என்ற சப்தம் கே ட் டு சோபாவுக்கு வந்தான். ஒரு தட்டில் ரெண்டு பஜ்ஜிகள், நடுவில் சில பிஸ்கட்டுகள்.

''இ தை க் கொறிச்சுக்கிட்டிருங்க. இதோ வந்துர்றேன்.''

டி.வியைத் தட்டி விட்டாள். சாயங்கால யு.ஜி.ஸி. யில் யாரோ பேராசிரியர் பேட்டி கொடுத்தார்.

''ரத்னம்.''

''என்னங்க?''

''நா ஆபீஸுக்குப் போகணும்மா. தலைக்கு மேலே வேலை கிடக்கு.''

''கொஞ்சம் இருங்க. நீங்க இருக்கிறப்பவே குளிச்சிடுறேன்ங்க. ஒரு செகண்ட்.''

''நீ அப்புறமா குளிச்சுக்கோ.''

''புருஷன் போன பெறகு பொம்பளை குளிக்கக் கூடாதுங்க. அது ஆகாது.''

''நா ஒண்ணும் வெளியூர் போகலியே. ஆபீஸுக்குத்தானே?''

''நீங்க எப்போ வெளியூரு போவீங்கன்னு உங்களுக்கே தெரியாதே. ஒரு போன்



ஹிட்லரின் 50வது பிறந்த நாளுக்கு (1939 - ல்) ஒரு கிலோட்டினும் (Guillotine) ஒரு பியானோவும் பரிசுகளாக அளிக்கப்பட்டன! பின் நாட்களில் இவை ஹாம்பர்கில் இருந்த கலைப்பொருள் விற்பனை மற்றும் ஏலம் விடும் நிறுவனத்திலிருந்து களவாடப்பட்டன. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இவற்றைத் திருடிச் சென்று விற்க முயன்ற இருவர் மூன்று வருட இடைவெளிக்குப் பின் மாட்டிக் கொண்டனர்.

நன்றி : பிசினஸ் இந்தியா - தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்

வந்துட்டா... மதுரையிலே போய் நிப்பீக.''

கொஞ்சலும் சிரிப்புமாய்க் குலுங்கிவாள். உள்ளுக்கும் வெளியுமாய் ஓடிப் பரபரத்தாள். கன்டெலியின் பரபரப்பில் ஒரு யானை உலவுவதைப் போல... விநோதமாய் அவள்.

மனைவியின் பின்னாலேயே பார்வை ஓடிய அருந்கனைக்குள்... 'இப்படிக் குழந்தையாய் ஓடித் திரிகிற இந்தக் கள்ளமில்லாத பெண்... ஊசிப் போன பலகாரமாகவா இருப்பாள்? ஊஹூம்...'

தண்ணீர் ஒரு கிளாஸிலும் - ஹார்லிக்ஸ் ஒரு கிளாஸிலும் கொண்டு வந்து வைத்தாள். அவசரமாய் பாத்ரூமுக்குள் ஓடினாள்.

கறுப்பு. கவர்ச்சியில்லாத கறுப்பு. கசிந்தோடுகிற தார் எண்ணெயில் வெள்ளைப் பவுடர் தூவி வைத்த மாதிரி ஒரு நிறம். சற்றே கனத்து உருண்ட கைகள். பூசிணாத் போல பருத்த உடம்பு. நீளமில்லாத கழுத்தின் மேல் உட்கார்ந்திருக்கிற தலை. உப்பு மூட்டையின் மேல் தேங்காயை வைத்த மாதிரி, ஒரு விநோதத் தோற்றம்.

''ரோட்டிலே ஆயிரத்தெட்டுப் பொண்ணுக கண்ணுலே தட்டுப்படத்தான் செய்யுதுக. ஆனா, ஒங்கிட்டேயிருக்கிற ஒரு அழகை - ஒரு கவர்ச்சியை - வேற எந்தப் பொண்ணுககிட்டேயும் நா பாக்கலே.''

அவள் முகத்தில் பெருமிதம் பொங்கி வழியும். நம்பாதவளைப் போலப் பொய்யாகச் சிணுங்குவாள்.

''நீங்க பொய் சொல்றீக.''

''ஒங்கிட்டே நா எதுக்குப் பொய் சொல்லணும்? உண்மையைச் சொன்னா... கழுத்தைச் சீவிருவியா?''

அவ்வளவுதான். அப்படியே நம்பி விடுவாள். ஒரு குழந்தையைப் போல குதூகலிப்பாள். குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பாள். அந்த நாணச் சிரிப்பிலும், உதட்டைக் கிழிப்பது போல அ ந் த எத்துப்பல் வெளிப்படும்...

இப்படியே... பொய்யும் புளுகுமாய், போலியாய் நடித்து நடித்து... நடிப்பே வாழ்க்கையென எட்டு வ ரு ஷ ம் ஓடிப் போய் விட்டது.

நினைத்துப் பார்த்தால்... சலிப்பாக இருக்கிறது.

உள்ளுக்குள் புதைத்து அமுக்கப்பட்ட ரசனை உணர்ச்சிகள்... அடக்கி வைக்கப் பட்ட அழகுணர்ச்சிகள்... மனசுக்குப் பிடித்தமான வாழ்வுக்காக ஏங்கித் தவிக்கிற வேட்கை..

எல்லாமே உள்ளுக்குள் கொதிநீராகத் தளதளக்கிறது. நீராவி இரைச்சலுடன் பாம்புச் சீறலாய்ச் சீறுகிறது. எப்போதாவது மூடியைத் தூக்கியெறிந்து விட்டுப் பொங்கி வழிந்து விடுமோ...

எங்கள் குடும்பம் பெரிசு!



மந்திரி சபையில் முதல் இடம் மட்டுமல்ல; பெரிய குடும்பம் என்று பார்த்தாலும் முதலிடம் பிரதமருக்குத்தான். எட்டுக் குழந்தைகள். பெட்ரோலியம் மந்திரி சங்கரானந்திற்கும் எட்டுக் குழந்தைகள்தான்.

பொடேதார், ஜாகர், கல்பநாத் ராய், பால்கரெட்டி, மார்கரெட் ஆல்வா முதலிய மந்திரிகளுக்கு ஐந்து குழந்தைகள்!

மந்திரி சபையில் பன்னிரண்டு பேர், ''நாம் இருவர்; நமக்கிருவர்'', பட்டத்தைப் பெறுகிறார்கள்.

ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்
தகவல் : என். பங்கஜம்

நாசியைத் தாக்குகிற சுகந்த வாசனை. ரத்னம்தான். புதிதாக உடுத்திய ஸாரியில் சலவை மடிப்புகள். சலவை மணம். இடது தோளின் வழியாக மார்பில் வழிந்த ஈரக் கூந்தலைத் துவட்டிக் கொண்டே வந்தாள்.

முகத்தில் திட்டுத் தி ட் ட ா க மஞ்சள். மலரைக் குடைந்து நெருடுகிற சோப்பு மணம். கண்களை உறுத்துகிற குங்குமம். அவளது கண்களில் ஒரு மோகனப் புன்னகை. குதூகல மின்னல்.

தனது வேண்டுகோளுக்குச் செவி கொடுத்து- மனம் கொடுத்து - உட்கார்ந்திருக்கிற கணவனின் அன்பை நினைத்து மனசுக்குள் ஒரு குழைவு.

இவனுள் ஒரு மன அயற்சி. ரகசியமாகக் கசிந்த ஆயாசப் பெருமூச்சு.

அவள் இப்படி... குளித்து முடித்து சுகந்தச் சிரிப்புடன் இவன் முன்பு வந்து நிற்கிறாள் என்றால், அது ஒரு சங்கேதப் பாஷை. ஒரு சமிக்ஞை.

மீண்டும் ஒரு பாரமாய் வந்து அழுந்துகிற அயற்சி. அருந்கனை உள்ளுக்குள் சலித்தான். நீளமாய்ப் பெருமூச்சு விட்டான், ஏக்கப் பெருமூச்சு போன்ற பாவனையில்.

''முடிச்சாச்சா?''

''ம்''

வாஷ்பேசினில் முகத்தைக் கழுவினான். துடைத்தான். பவுடரை அப்பிக் கொண்டான். தலையை வாரிக் கொண்டான். திரும்பினான். திரும்பச் செய்கிற போதையான நறுமணம்.

மல்லிகைச் சரத்துடன் ரத்னம். உதட்டில் மல்லிகை வாசமாய் ஒரு சிரிப்பு. சிரிப்பின் அந்த மெல்லிய வெடிப்பில், மனசுக்குள் சத்தமாய் வந்து உரசுகிற சலங்கைச் சொற்கள்.

கண்களின் ஆழத்திலும் அதே சிரிப்பு. மனசைச் சுண்டி இழுக்கிற மௌன அழைப்பு.

ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டான்.

''பொறப்பட்டாச்சா?''

''ஆமா ரத்னம். நீ தந்த ஹார்லிக்ஸ் நைட் வரைக்கும் தாக்குப்பிடிக்கும்.''

பாராட்டின் குளிர்ச்சி தாங்காமல் பனிப் புல்லாகச் சிலிர்த்தாள்.

''சாப்பிட வந்துருங்க.''

''வேலைகள் எப்படி அமையுதோ!''

''அதெல்லாம் முடியாது. இன்னிக்கு நீங்க கட்டாயம் வர்றீங்க. நீங்க வந்த பிறகு தான் நா சாப்பிடுறேன்.''

ரத்னத்தின் சர்க்கரைப் பாகான கெஞ்சல், அவன் செவியில் விழுந்தது. மனசுக்குள் இறங்க மறுத்தது.

இறங்கி விட்ட மாதிரி கிளுகிளுத்தான். அவளது வலது கன்னத்தை மெல்லக் கிள்ளினான்.

''அல்வாத்துண்டு!'' குறும்பாகக் கண்ணடித்தான்.

''ச்சீய்... போங்க'' என்று அவள் சிணுங்கலுடன் கண்டித்தாள்.

செருப்பை மாட்டிக் கொண்டான்.

''வரட்டா?''

வெளியே வந்தான். இவர்களைப் பரிகாசம் செய்வதைப் போல இரும்புக் கதவு கிறீச்சிட்டது.

அவள் வாசலிலேயே நின்றாள். இவன் ஸ்கூட்டர் அருகில் வந்தான். வண்டியை நகர்த்தி, உயிர்ப்பித்தான். மனம் நிறைந்து புன்னகை செய்த ரத்னத்திடம் கையாட்டி விட்டுப் புறப்பட்டான். சறுக்கிக் கொண்டு சீறிய ஸ்கூட்டரில் வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

இரவில் இவளைச் சந்தித்தேயாக வேண்டிய கட்டாயம்.

வீணான சந்தோஷம். வெற்றிக் கனி பறிப்பது போன்ற எந்த விளைவும் நிகழ்த்த முடியாத பூஜ்ய சந்தோஷம். மழலைச் சத்தம் உண்டாக்க முடியாத மலட்டுச் சந்தோஷம்... ச்சே!

மூச்சு முட்டுகிற சலிப்பு. மனசைத் திணறடிக்கிற இழப்புணர்வு. காறித் துப்பினான். மனசின் கனம் பாதியாகக் குறைந்தது போல் இருந்தது.

மிச்சம் மீதியிருந்த கசப்புகளை மறக்கடிப்பதற்காக, தீப்பெட்டியாபீஸ் வேலைகளைப் பற்றி வலிய யோசித்தான். ஒரு விடுதலை வேண்டும்!

உ.பி.க்கு இன்றைக்கு பண்டல் லோடு ஏற்றியாகணும். ஆர்டர் பிடித்த அய்யாச்சாமி நேற்றே 'கால்' போட்டுக் கத்தினான், 'ஏன் லேட்' என்று.

லாரி ரெடி. சரக்கும் ரெடி. அநேகமாக லோடு பண்ணி முடித்திருப்பார்கள். இன்று ராத்திரியில் எப்படியும் லாரியை நகர்த்தி விட்டாகணும்.

வறண்ட காற்றாக வீசிக் கொண்டிருந்த நினைவுகளுக்கு மத்தியில், திடுதிப்பென்று ஒரு குளிர்த் தென்றல். பனித்துளி விலகாத பசுஞ்சோலைக்குள் நுழைந்து விட்ட மாதிரி, மனசுக்குள் சிலிர்ப்புகளோடு ஓடுகிற ஒரு பரவச உணர்ச்சி.

சொர்ணம் வேலை முடிந்து போயிருப்பாளா? போயிருக்க மாட்டாள். அவள் அஞ்சரை மணிக்குத்தானே புறப்படுவாள்? அட... இன்றைக்கு முழுவதும் அவளை ஒரு தடவை கூட கண்ணால் பார்க்கவில்லையே...

சொர்ணம்! அவளுக்கு மட்டும் பெயர் என்னமாய்ப் பொருந்தியிருக்கிறது. அவளுக்கென்றே அந்தப் பெயர் பிறந்த மாதிரி. சொர்ணத் தங்கமாய் நிறம். 'மண்வாசனை' ரேவதி மாதிரி... சின்னக் கிளி. கைக்குள் அடங்கக்கூடிய பூப்போன்ற - மென்மைப் புறா.

அவளைப் பார்த்தாலே போதுமே! மனசு நிறைந்து ததும்புமே. அட அட அடா...

அவள் நிமிர்ந்து பார்க்க வேண்டுமே! ம்ஹூம்! ஏறிட்டே பார்க்க மாட்டாள். அவளுக்கு வேலையிலேயே முழுக் கவனம்.

படு சுறுசுறுப்பு.

பசையை விரல் எந்நேரம் தொடும், அட்டையை எந்நேரம் மடிக்கும், எப்போது இழுவும், எப்படி மடித்து எறிவாள்? என்பதைப் பார்க்கவே முடியாது. அத்தனை வேகம், அத்தனை சுழற்சி.

வசதியாகக் கிராமத்தில் ஓகோவென்று ஒரு காலத்தில் வாழ்ந்து, நொறுங்கிப் போன ஒரு பெரிய விவசாயக் குடும்பத்தின் கடைசிக் கொழுந்து. நொடித்துப் போய் தூசிக் காடாகிப் போன அந்தச் சிதைவுகளின் கடைசியான ஜீவமிச்சம்.

வாழ்ந்து கெட்ட குடும்பத்தின் மிச்சமாயிருந்தாலும்... மண்டைக் கனத்திற்குக் குறைவில்லை. கூலிக்குப் பசை ஒட்டிப் பிழைக்கிற யதார்த்தத்திலும், பழைய 'பசையான' காலத்துக் கர்வம் இன்னும் அப்படியே இருக்கிறது.

அவள் கர்வப்படுவதில் நியாயம் இருக்கிறது.

அந்த அழகு... அந்தச் சின்ன உருவம்... கச்சிதமான வடிவ அமைப்புகளோடு கடைந்தெடுத்த மாதிரியான தேகக்கட்டு, சொர்ணத் தங்கமாய் நிறம்.

அவள் கர்வப்படலாம்.

அவனுக்குள் உப்பாங்காற்று குளிர்ச்சியாக வீசியது.

(தொடரும்)

மருத்துவக்கருவிகளில் மகத்தான முன்னேற்றம்



● மேக்ஸிலோ ஃபேஷியல் டயக்னாஸ்டிக் எக்ஸ்ரே...

சுஜாதாவுக்கு இப்போது வயது பத்தொன்பது ஆகிறது. பன்னிரண்டாவது வயதில், பற்கள் கோணல்மாணலாக இருந்ததைக் கவனித்து விட்டு, பற்கள் வரிசையை மட்டும் சீர்படுத்த முடிந்தது. ஐந்து வருட வளர்ச்சிக்குப் பிறகு, கீழ்த் தாடை மட்டும் சற்றுப் பெரிதாக இருக்கிற மாதிரி தோன்றவே, சுஜாதாவுக்கும் சரி, அவள் பெற்றோருக்கும் சரி, அதையும் சரிசெய்து விட முடியாதா என்ற ஆதங்கம் தோன்றியது.

''என்ன செய்வது என்று கேட்க என்னிடம் வந்தாள் சுஜாதா, அவள் பெற்றோருடன். அறுவைச் சிகிச்சை மூலம் இதைச் சரிசெய்து விடலாம், கவலையே வேண்டாம் என்று அவர்களிடம் அடித்துச் சொன்னேன். அப்படி தைரியமாகச் சொல்லக் காரணம் உண்டு. இதற்கான முன் முயற்சிகளில் இறங்குமுன், தேவையான எக்ஸ்ரே படங்கள் எடுத்துக்கப. இப்போது தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக மேக்ஸிலோ ஃபேஷியல் டயக்னாஸ்டிக் எக்ஸ்ரே கருவி இங்கே இருப்பதுதான்'' என்றார் மலர் ஹாஸ்பிடலைச் சேர்ந்த டாக்டர் ஜெயந்தி பார்த்தசாரதி.

''அதிலும் இதற்கான கரெக்ஷன் முறையை நான் என்னுடைய கம்ப்யூட்டரில் புரோகிராம் செய்து வைத்திருக்கிறேன். அறுவைச் சிகிச்சை செய்து முடித்த பின், கீழ்த்தாடை முகத்துக்குப் பொருத்தமான அளவுக்குக் குறைக்கப்பட்டு, முகமும் திருத்தமாக ஆகிவிட்டது அந்தப் பெண்ணுக்கு'' என்றார் டாக்டர் ஜெயந்தி.

● டாக்டர் ராமமூர்த்தி



● டாக்டர் ஜெயந்தி பார்த்தசாரதி



இந்தப் புதிய முறை பற்றி, இவர் சென்ற ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற உலகப் பல் மருத்துவர் மாநாட்டில் உரையாற்றிய போது, பாராட்டுக்கள் நிறையவே குவிந்தன.

''இப்படி மறுபடியும் தாடையை வெட்டிச் சேர்க்கும் போது, முகத்தில் அறுவையின் வடு பெரிதாகத் தெரியாதா?''

''தெரியாது. அடிப் பாகத்தில் அழகாகத் தைத்து விடுவார்கள்.

''இந்தப் புதுக் கருவி, எந்தவிதத்தில் மாறுபட்டது?''

''சாதாரண எக்ஸ்ரேயில் ஒரு பல், இரண்டு பல்தான் தெரியும். இதில் கண்ணுக்குக் கீழே எலும்பின் முழு வடிவமும் தெரியும். அதுவும் பற்கள் வரிசையுடன் நன்றாகத் தெரியும்.

''முகத்தில் அடிபட்டால், தாடை முறிவு இருக்கிறபட்சத்தில் வெகு எளிதாகக் காண்பித்து விடும். சாதாரண எக்ஸ்ரேயில், தலைப் பகுதியை எடுக்கும் போது 'ஓவர்லேப்' எனப்படும் ஒன்றன் மீது ஒன்றான அமைப்பு தெரியும். இதில் ஓவர் லேப் இருக்காது என்பது மட்டுமல்ல, வடிவம் பூரணமாகத் தெரியும். முன்பெல்லாம் சாதாரணமாக மூன்று, நான்கு வியூ எடுக்க வேண்டும் என்றால், இதில் ஒரே ஒரு எக்ஸ்ரே வியூ எடுத்தால் போதும். வேறு எந்தப் படத்தில் எடுத்தாலும் தாடை இவ்வளவு துல்லியமாகத் தெரியாது. அது மட்டுமல்ல, படம் எடுப்பதும் கூட படு சிரமம். முக்கியமாக எந்த இடத்தில் முறிவு ஏற்பட்டிருக்கிறதோ அதையே தவற விடும் வாய்ப்பும் பாதியில் உண்டு. இதில் அந்தப் பேச்சே இல்லை!

''தாடையில் ட்யூமர் (கட்டி) இருந்தால், எதில் ஆரம்பித்து எதுவரை பரவியிருக்கிறது என்பதையும் இந்தக் கருவியில் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். அதற்கு ஏற்ற முழுச் சிகிச்சை முறையையும் முன்னதாகத் திட்டமிட அது உதவும். அரைகுறைச் சிகிச்சையாக இராது.

''நோய்த் தொற்று (இன்ஃபெக்ஷன்) காரணமாகவோ, முறிவு (ஃப்ராக்சர்) காரணமாகவோ, வாயையே திறக்க முடியாத நிலையில், நோயாளிக்கு எவ்விதத் தொல்லையும் அளிக்காமல், அதாவது வாயைத் திறக்கச் செய்யாமலே இதில் எக்ஸ்-ரே எடுத்து விட முடியும்'' என்றார் டாக்டர் ஜெயந்தி பார்த்தசாரதி.

தலையை மட்டும் நிலையாக வைத்து, கேமிரா சுற்றி வந்து சுழலும் போது, எக்ஸ்ரே முகத்தின் முழுப் பகுதியையும் படம் எடுத்து விடுகிறது.

''நோயாளிக்குப் பாதிப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று கண்டறிய உதவும் கம்ப்யூட்டர் புரோகிராம் ஒன்றை நானே உருவாக்கியிருக்கிறேன். இதனால் ரேடியோகிராஃபிக் மற்றும் போட்டோகிராஃபிக் வடிவம் இணைந்து (டூ-இன்-ஒன்) கிடைத்து விடுகிறது. இப்படி கம்ப்யூட்டர் இணைந்த முறை, இந்தியாவிலேயே இங்கேதான் முதல் முறையாகச் செயல்படத் தொடங்கி இருக்கிறது!'' என்றார் டாக்டர் ஜெயந்தி பார்த்தசாரதி.

அறுவைச் சிகிச்சை முடிந்த பின் நோயாளி எப்படிக் காட்சியளிப்பார் என்பதையும் முன்கூட்டியே அறிய முடியுமாம். இந்தியாவுக்கு வெளியே சில நாடுகளில் இந்த வசதி இருக்கிறது. ஆனால் அவை மேற்கத்தியவர்களின் முக வடிவ அமைப்புக்கு மட்டுமே ஏற்றவை. இந்திய, முக அமைப்புக்கள் மாறுபட்டவையாயிற்றே.

''சும்மா கேமரா இந்தியாவில் சில பிரம்மாண்ட மருத்துவமனைகளில் இருக்கலாம். ஆனாலும் கூட இங்கே இருப்பது ஆசியாவிலேயே முதலாவது!'' என்கிறார் டாக்டர் திருமூர்த்தி. மலர் மருத்துவமனையின், மாக்னடிக் ரிசோனன்ஸ் இமேஜிங் எனப்படும் MRI பிரிவில் பணியாற்றுகிறார் இவர்.

இதனுடன் இணைந்த ஜுகான் கம்ப்யூட்டர், பிரச்னைக்குட்பட்ட பிரதேசத்தை மிகத் துல்லியமாகக் கண்டுபிடிக்க உதவுகிறது. மிக மிகச் சிறிய பாகத்தைக் கூட, எளிதாகத் தனிப்படுத்தி, விரிவுபடுத்திக் காண்பிக்கிறது என்பது இதன் சிறப்பு.

இரண்டு டைமென்ஷன் தோற்றத்தில் பார்க்கையில் சில உட்பகுதிகளைப் பார்க்க முடியாமல் போய் விடுகிறது, இல்லையா? இதில் அந்த வம்பே இல்லை.

''சி.டி. ஸ்கானில் ரொட்டியை வெட்டிப் பார்க்கிற மாதிரியான வெளித் தோற்றம் தெரிகிற அளவே இதிலும் செய்கிறோம். ஆனால் அது வெளிக் கட்டமைப்பை மட்டுமே காண்பிக்கிறது. இதில் உள்ளே என்ன நிகழ்கிறது என்பதை அப்படியே



தண்ணீரையும் நாம் குடிக்கிறோம்; பாலையும் குடிக்கிறோம்.

ஆனால், எதையும் 'குடி' என்று அழைப்பதில்லை.

மதுவை மட்டும் 'குடி' என்கிறோம்.
ஏன்?
இது ஒன்றுதான், உயிரைக் குடிக்கிறது.
சொன்னவர் : கவிஞர் கண்ணதாசன்
தகவல் : எஸ். முகம்மது யூசுப்

படம்பிடித்துக் காண்பிக்கிறது!" என்றார் டாக்டர் திருமூர்த்தி.

"உதாரணமாக?"

"இதயத்தின் இயக்கம் எப்படி இருக்கிறது என்று பார்க்க முடியும். அதன் திறன் என்ன என்று பார்த்து விட முடியும். ஹார்ட் அட்டாக் வருமா வராதா என்பதைக் கூட அறிந்து கொள்ள முடியும்! புற்றுநோயின் தாக்கம் எத்தனை என்று அறியலாம். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டிருந்தால், அவருக்குள் எந்த அளவுக்கு அது வேலை செய்கிறது என்று அறிய முடியும்!" என்றார் டாக்டர் திருமூர்த்தி.

மூளை எப்படி இயங்குகிறது, எங்கே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கண்டு பிடிக்க, மலர் ஹாஸ்பிடல் தருவித்திருக்கும் இன்னொரு அதிநவீனக் கருவி பிரெயின் அட்லாஸ் மெஷின். அமெரிக்கக் கருவி.

தலையில் குல்லாய் போலத் தொப்பி ஒன்றை மாட்டி விட்டு, அதனுடன் சேர்ந்த ஒயர்களைக் கருவியோடு இணைத்து விட்டால், 20-25 நிமிடங்களில் நோயாளியின், மூளைத் திறன் அல்லது குறைபாடு பற்றிய ரெக்கார்டு ரெடி! (ஆனால் தொப்பியை மாட்டிக் கொள்ளுமுன் ஒருவித ஜெல்லியையும் தலையில் தேய்த்து விடுவதால், சோதனை முடிந்ததும் ஒருமுறை நன்றாகத் தலைமுழுக வேண்டியிருக்கும்!)

சாதாரணமாக EEG எனப்படும் (எலக்ட்ரோ என்கஃபலோ கிராஃப்) கருவி, காகிதத்தில் கோடுகளாகத் தெரியும் வரை படம் மட்டுமே தரும். இதில் அப்படி அல்ல. வண்ணப்படங்களாகவே தந்து விடும்.

இதில் 'டிஸ்க்'கில் மூளை தரும் எல்லா சமிக்ஞைகளையும் அப்படியே பதிவுசெய்து பத்திரப்படுத்தி விட முடியும்.

"இதை மூளை சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு மட்டும்தான் பயன்படுத்த முடியுமா?"

"இல்லை. காது-மூக்கு-தொண்டை, கண்கள், நரம்பியல் என்று பல பரிசோதனைகளுக்கும் இது பயன்படும். விநோதமான போக்கு உள்ள நோயாளி ஒருவரைத் தேர்ந்தெடுத்து இந்தப் பரிசோதனைக்கு அவரை உட்படுத்தினால், 'பிரெயின் மேப்பிங்' அப்படியே படங்களாகத் தந்து விடுகிறது. உள்ளே உள்ளது உள்ளபடி காண்பிக்கும் திறன் இந்தக் கருவிக்கு இருக்கிறது!" என்கிறார் டாக்டர் ராமமூர்த்தி.

இந்தக் கருவியை அமெரிக்காவில் வைத்துக் கொண்டு, மூளையின் சகல அம்சங்களையும் அலசி ஆராய்ந்து, சொல்லுகிறார்களாம் மருத்துவர்கள்!

பேட்டி, கட்டுரை : சாருகேசி

வண்ணப்படங்கள் :
குமாரி காமேசுவரி

நான் ஒரு பயங்கரவாதி

நான் ஒரு பயங்கரவாதி!

பி.பி.எம். இயக்கத்தைச் சேர்ந்தவன்.

நீங்கள் அக்கிரமங்கள் என்று நினைப்பது எனக்கு அக்கிரமங்கள் அல்ல.

நீங்கள் பாபம் என்று நினைப்பது எனக்குப் பாபம் அல்ல.

எத்தனையோ தீக் காரியங்களைச் செய்து விட்டேன்!

இரண்டு கொலையும் கூட!

இதோ இன்னொரு கொடுஞ்செயல் செய்யத் தயாராயிருக்கிறேன்! எனக்கு சிக்னல் வர வேண்டும். காத்திருக்கிறேன்.

அதற்குள் சிட்டியை ஒரு 'கிஸ்' கொடுத்து, அவனிடம் விடைபெற வேண்டும்.

சிட்டி எனது ஒரே பையன்! ஆறு வயது! உயர்ந்த ஐ க்யூ! அரை நொடி சும்மா இரான். எப்போதும் துறுதுறு!

அவனது 'கண்டுபிடிப்பு' மனப் பான்மை எனக்கு ஒரு வருடம் முன்னால் தெரிய, அவன் மீது எனக்குப் பெரிய சுவா ரஸ்யம்.

அவனை இஷ்டப்படி வீட்டுக்குள் வளைய விட்டு, அவனது அந்தக் 'கண்டு பிடிப்பு' அறிவு அவ்வப்போது வெளிவரு வதைக் கவனிப்பதில் ஒரே குஷி!

மணி 7:30.

ஃபோன்!

உத்தரவு வந்தது. 'கிளம்பு'.

தாவி எழுந்தேன். ''டேய்! சிட்டி! டேய் சிட்டி!'' என்று கத்தினேன்.

ராதா என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

ஓ! சிட்டி கட்டிடத்தனத்துக்குப் போயிருக்கிறானா! போகட்டும்.

''வரேன் ராதா! அரைமணியில் வந்து விடுவேன்'' என்றேன். 'சரி' என்றாள்.

அவளுக்கு என் ரகசிய வாழ்க்கை தெரியாது. ரொம்ப நல்லவள்.

வாசலை நோக்கித் தாவினேன். வராந்தா முனைக்கு வர, திடீரென்று டப் டப் என்று சப்தங்கள். ஏதோ கடும் சப்தங்கள்.

சட்டென்று நிற்க, சிட்டியின் பொம்மை ரொபாட் வெளிச்சங்களைக் கக்கி என்னைச் சுட்டவாறு வந்தது.

அதன் வேகத்துக்கு விலகி, படிகளில் தாவி, தோட்டத்தின் நடுவே நடந்தேன்.

மை இருட்டு! உலகம் என் தோட்டத் தோடு முடிந்திருந்தது.

வேகமாக நடக்க, திடீ ரென்று ''யார் அங்கே?'' என்று அதட்டும் குரல்! ஒரு கணம் குடல் எகிறியது.

அடுத்த கணம் ''நில்லு! போகாதே!'' என்று உத்தரவு வெடித்தது.

அதை அடுத்து மினியேச்சர் ஏ. கே. 47 வெடிப்புகள்.

எல்லாம் என் கட்டியின் கட்டித் தனக் காரியங்கள்!

ஒரு கயிற்றைக் கட்டி, டேப்ரிக்கார் டரை இயங்க வைத்து, பொம் மைத் துப்பாக்கி



யையும் இ ய ங் க வைத்து ரகளை பண்ணி விட்டான்.

காரேஜை அடைந்தேன்.

நான்கு நாட்களுக்கு முன் திருடிய கார். மனைவி ராதாவிற்குத் தெரியாது. என்னை இன்னும் யோக்கியனாகத்தான் நினைத்திருக்கிறாள்.

காரில் பல கோளாறுகள். பின்னால் டிக்கி சரியில்லை! முன்னால் பானெட் லொட லொட. எதைப் பற்றியும் கவலை இல்லை.



காரைக் கிளப்பினேன்.

விளக்கை ஏற்றினேன்.

வெளியே வந்தேன்.

சாலை சர்வ வெறிச்!

ஒரு ஜீவன் இல்லை.

சீறிக் கொண்டு ஓட்டினேன்.

வெளி நகரை அடைந்து இன்னும் ஓட்டினேன்.

பதினெட்டாவது நிமிடத்தில் தலைவர் ரோ முன்னால் அட்டென்ஷனில் நின்றேன்.

சுற்றி வர வெற்று பூமியும், சில்லறைத் தாவரங்களும்.

என்னை ஒரு அலட்சிய வீச்சில் பார்த்தார்.

முகத்தில் உணர்ச்சியைக் காட்டவில்லை. இரும்பு போல் 'தேரம்' தொங்கியது.

ரோவுக்கு எந்த மனித உணர்ச்சியும் பிடிக்காது. நாமும் காட்டக் கூடாது.

- இந்தா வீ!

- பாலைவனத்தில் வறட்சியில் காய்ந்து போன குரல் வந்தது.

- எஸ். பாஸ்!

- இன்னும் அந்த நிமிஷத்திலே துரோகி மாணிக்கம் இந்தப் பக்கம் வருவான். மடக்கணும்.

- எஸ் பாஸ்!

- அவனைக் குளோஸ் பண்றோம்! இந்தக் கார்லே (என் புதுத் திருட்டுக் காரைக் காண்பித்து) ஏத்தறோம். டிரைவர் சீட்லே!

- எஸ் பாஸ்!

- கொஞ்சம் தள்ளிட்டுப் பற்ற வைக்கிறோம். எரிக்கிறோம்.

- கார்லேயா?

- ஆமாம்.

- ஆளை எரிச்சுட்டோம்னா தடயம் எதுவும் கிடைக்காது! நிம்மதியாகத் தூங்கலாம். ஓகே!

- எஸ் பாஸ்!

'ஹோ'வென்று நிசப்தப் பிரதேசம்.

இருபுறமும் சாலையின் தளுக்கான வளைசல்கள்! ஓரங்களில் புளிய மரங்கள்.

மண்ணுக்கு வடுக்கள் போல் அங்கங்கே முண்டாம் பாறைகள்.

ஒரு கொடிய வேலைக்குச் சரியான இடம்.

சாலை வளைவுகளில் ஒதுங்கினோம். எங்கள் மூச்சு

புஷ்பா தங்கதுரை



●● பார்சிலோனாவில் ஏற்கெனவே ஒலிம்பிக் பந்தயங்கள் நடத்தப் பெருமுயற்சிகள் எடுத்துக் கொள்ளப் பட்டு, பலனில்லாமல் போயிருக்கின்றன. 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வேண்டி 1929 ஆம் ஆண்டிலேயே 55,000 பேர் அமரக் கூடிய அப்போதைய ஐரோப்பாவின் மிகப் பெரிய விளையாட்டரங்கைக் கட்டியது பார்சிலோனா. ஆனால் ஸ்பெயின் மன்னர் பதின்மூன்றாவது அல்போன்சா நாடு கடத்தப்பட்ட குழப்பத்தினால், பெர்லினுக்கு அந்த சான்ஸ் கிடைத்தது. ஹிட்லர் தலைமையில் போட்டியில் பங்கேற்க விரும்பாமல் புறக்கணித்த பாசிச எதிர்ப்பு நாடுகள் பார்சிலோனாவில் போட்டி ஒலிம்பிக்கை நடத்த எண்ணின. நிகழ்ச்சிகள் துவங்கும் ஜூலை 19, 1936 ஆம் ஆண்டு, அன்று உள்நாட்டுப் போர் வெடித்ததால் பங்கேற்க வந்த வீரர்கள் திரும்பிப் போக வேண்டியதாயிற்று. பிறகு 1972 ஆம் ஆண்டு நடத்த எண்ணிய போது மாட்ரிட்டிலும், பார்சிலோனாவிலும் இரண்டாகப் பிரித்து நடத்த வேண்டும் என்றார் ஸ்பெயின் அதிபர். அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் இம்முறையும் ஜெர்மனியின் நகரமான மியூனிக்குக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

- நாமக்கல் இரமேஷ்குமார்

"உங்களுக்கு மந்திரி பதவி கிடைச்சதும் முதல்லே என்ன நினைச்சீங்க?"

"எத்தனை நாளைக்கு நிலைக்குமோன்னுதான்!"

- கவி. ரவி



கள் கூட நின்றன. அந்த நிசப்தம் கல்லாக எங்கும் தெறித்தது.

ஐந்து தாண்டி இருபத்தெட்டு விநாடிகள் துள்ளின.

விர்ர்ர் என்று விமானச் சத்தம்!

அதற்கு இசைய ரஸ்தா உய்ய்ய் என்றது.

சில்ல விநாடிகளுக்குள் ஒரு தண்டுக் குழல் வெளிச்சத்தை நீட்டி விட்டுக் கொண்டு, அம்பாசிடர் ஒன்று மின்னல் மோகினியாகப் பறந்து வந்தது.

ரோவைக் கூர்ந்து கவனித்தேன். நெஞ்சு திக்திக் என்றது!

ரோவின் கை தூக்கியது! அதில் அடங்கியிருந்த சின்ன டார்ச் நீல விளக்கை உமிழ்ந்தது.

அப்போது திடீரென்று ஒரு கார் மறைவிலிருந்து உதித்துக் கிளம்பியது.

அதன் 'படக்' தோற்றமும், 'கருக்' வேகமும் ஆச்சரியமாக இருந்தது.

கண்ணைத் திறக்குமுன் அம்பாசிடர் முன்னால் அந்த மார்மக்கார் பாய்ந்து ஓடியது.

'ரோ' உடன் என் காருக்குள் ஏறித் தாவினார்.

நான் என் காரை விர் என்று விரட்டினேன்.

எதிர்பார்த்ததை விட, சீக்கிரத்தில் அந்தக் கார்களை அடைந்தேன்.

அடுத்த கணம் எங்கள் கண்கள் பிதுங்கின!

மார்மக்கார் சாலையின் குறுக்கே நின்று அந்த அம்பாசிடரை நிறுத்தியது.

அடுத்த கணம் அம்பாசிடரிலிருந்து (துரோகி) மாணிக்கம் இறங்க, மார்மக் காரில் இருந்த எங்கள் ஆசாமி கீழே குதித்து வந்து அவனை மடக்க ஆரம்பித்தான்! அங்கே ரோஷமான கும் கும் நடந்தது. சில நிமிடங்கள் நீடித்தது.

எங்களது காளப்பன் களைத்து விட்ட நேரம்! 'ரோ' என்னைப் பார்க்க, நான் காற்றில் எகிறி மேலே மேலே பல அடிகள் போய் விட்டு, பிறகு தொபீர் என்று மாணிக்கத்தின் மீது விழுந்தேன்.

என் உறுப்புகள் ரொம்ப உச்சமாக இயக்கம் செய்தன.

எந்தக் கை மாணிக்கத்தின் மீது வீசி அடித்தது என்று தெரியவில்லை.

அவ்வளவு துரிதத்தில் என் கைகள் இயங்கின.

ஏற்கெனவே மாணிக்கம் ஓய்ந்திருந்தான்.

என் புதிய வேகம் அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

சிறிது நேரம் எதிர்த்துப் பார்த்தான். பிறகு பொசுக்கென்று ஒரு அவிழ்ந்த வேட்டி போல் கீழே உதிர்ந்து விட்டான்.

வித்தியாசமான விளம்பரங்கள்!

●● 'டிரிப்யூன்' பத்திரிகையில் வந்த விளம்பரம் : "என்னை மிகவும் 'அக்கறையோடு' கவனித்து, எனது சமீபத்திய சாவுக்குக் காரணமான எனது ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்."



●● 'ஸ்டார் கெஜட்டில்' வந்த மரண விளம்பரத்தில் : "தயவு செய்து என் கல்லறை மீது பூக்களைத் தூவாதீர்கள். மலர்கள் என்றால் எனக்கு அலர்ஜி."

●● நியூயார்க் டைம்ஸில் வெளிவந்த விளம்பரம் : "இன்று நடைபெறுவதாக இருந்த 'அமைதிக் கூட்டம்' கலந்து கொள்ளும் பேச்சாளர்களிடையே ஏற்பட்ட மோதலினால் ஒத்திப் போடப் பட்டுள்ளது."

●● பாரிசில் ஒரு கடை விளம்பர போர்டில் எழுதப்பட்டிருந்த வாசகம் : "இங்கு சகல விதமான வாக்குவம் கிளீனர்களும் குறித்த நேரத்தில் பழுது பார்த்துத் தரப்படும், சிறந்த முறையில்." அதனை அடுத்து கீழே எழுதப் பட்டிருந்த மற்றொரு வாசகம் : "வாக்குவம் கிளீனர் ரிப்பேர் செய்யக் கைதேர்ந்த மெக்கானிக் தேவை. உடனே அணுகவும்."

தகவல் :
நாமக்கல் இரமேஷ்குமார்

பின்னர் தலைவர் என் முதுகில் இரண்டு ஷொட்டு கொடுத்தார்.

கவர்க்கத்தை அடைந்த குளிர்ச்சி எனக்கு.

"ம்! மேலே...நடத்து!" என்று சொல்ல,

மாணிக்கத்தின் உடம்பை அள்ளினேன்! மூக்கிலும் வாயிலும் ரத்தம் ஒழுகின.

என் திருட்டுக் காரின் டிரைவர் சீட்டில் ஏற்றி உட்கார்த்தினேன்.

உயிர் பிரிந்திருக்க வேண்டும்.

நான் உட்கார்த்திய நிலையில் அப்படியே அவன் உடல் அமர்ந்தது.

அடுத்து எங்கள் குழுவின் நிபுணர்கள் வந்து காரில் சில மாற்றங்கள் செய்தார்கள்.

ஒருவன் காரைக் கிளப்பினான்.

வேகம் எடுத்ததும், கதவை ஓங்கிச் சாத்தியவாறு கீழே குதித்தான்.

கார் வேகம் எடுத்தது.

எதிரே இருந்த பாறையில் போய் இடித்தது.

உடனே தீப்பிடித்தது.

"ஐடியா தலைவரே!" என்றேன் நான்.

'ரோ' தம்மை அந்துமீறி வந்த மகிழ்ச்சியில் என்னைப் பார்த்தார்.

- பார்த்தியா! கொலை தெரியாம இருக்கத்தான் இந்த தீப்பிடிக்கிற ஏற்பாடு செஞ்சேன். அத்தனையும் கட்டுச் சாம்பலாயிடும்! சலிச்சு எடுத்தாக் கூட ஒரு சின்னத் தடயம் கிடைக்காது. அப்படி செய் தாச்சு. எப்படி?

தீப்பிடித்த காரின் அருகில் வந்தோம்.

"எச்சரிக்கை! டாங்க் வெடிச்சு பெட்ரோல் இங்கே தீயோடு விழும்" என்றார் ரோ!

திமுதிமுவென்று கார் எரிந்தது. காற்று விலக்கும் போது, காரின் உட்புறம் தெரிய, சீட்டில் அந்தச் சடலம் நெளிவது தெரிந்தது.

உயிர் இருக்கிறதா?

எனக்கு அந்தப் புலம்பல் நன்றாகக் கேட்டது. அது தீனக்குரல்தான். எரியும் நெருப்புத் தாங்காமல் முறையிடும் குரல் தான்.

"தலைவரே! மாணிக்கம் குரல் கொடுக்கிறான்!" என்றேன்.

"சீ! பைத்தியம். அது வேறு என்னவோ சப்தம்."

திரும்பவும் கேட்டேன். "அது குரல் தான்! அலறும் குரல்." தலைவரிடம் சொன்னேன்.

"இந்தா கம்மா இரு! அது என்னவோ சப்தம் பேசாம இரு."

நெருப்பு வியாபகம் பெரிதாகிக் குமுறும் பிரம்மாண்ட உருண்டைகளாகத் தீப்புகை மேலே நோக்கி எழுந்தது.

அப்படியும் எனக்குப் பிரமை நீங்கவில்லை. ஏதோ அலறும் சப்தம். துடிக்கும் சப்தம். டி....டி....டி... என்பது போல் கேட்டது.

பின்னர் தலைவர் சைகை கொடுக்க, எல்லோரும் ஓட்டமாக ஓடி அவரவர் கார்களுக்கு விரைந்தோம். நான் காளப்பன் காரில் ஏறினேன்.




"ஏம்மா, டீ. வி. யிலே செய்தி வாசிக்க சான்ஸ் கேட்டு வர்றியே, அதுக்கான தகுதி உன்னிடம் என்ன இருக்கு?"

"முப்பத்திரண்டு பாலியஸ்டர் சாரி, இருபது கைத்தறிச் சேலை, பதினேழு பட்டுப் புடைவை, என்கிட்டே இருக்கே!"

- கு. அருணாசலம்

"எங்களுக்கு இல்லை வித்தியாசம்!"

டெல்லியிலுள்ள ஒரு கல்லூரியின் மாணவர்களுக்கும் பார்வையிழந்தோர் பள்ளி மாணவர்களுக்குமிடையே சமீபத்தில் ஒரு கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. சிறு வெண்கலக் குண்டுகளால் நிரப்பப்பட்டு, ஒலி எழுப்பியபடி காற்றில் பறக்கும் விசேஷப் பந்தும், அடிபட்டால் விசில் ஒலி எழுப்பும் ஸ்டம்ப்களும் பயன்படுத்தப்பட்டன. பிற புலன்களின் கூரிய ஆற்றலால் பார்வையற்றோர் அணியே முன்னணியில் நின்றது. இதற்குள் இருட்டத் தொடங்கவே, கல்லூரி அணியினர் ஆட்டத்தை நிறுத்த விரும்பினர். "எங்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை. உங்களுக்குச் சிரமமாக இருந்தால் தாராளமாக நிறுத்தி விடலாம்" என்றார் பார்வையிழந்தோர் அணித் தலைவர்!



- அ. ஷண்முகசுந்தரம்

எல்லாரும் திரும்ப ஆரம்பித்தோம்.

வீட்டில் இறங்கும் போது (12:30) "காளப்பா! உனக்கு அந்த அலறும் சத்தம் கேட்கல்லே!" என்றேன்.

"ஆ ஆ ஆ" என்று பலமாகச் சிரித்தான் காளப்பன்.

"உனக்குக் கொலை பயம் இன்னும் போகல்லை. இதான் இந்தப் பிரமை!"

"உனக்கு கேட்கலையா?"

"கேட்குது! அது நம்ப பிரமை! நாம்ப கொலை செஞ்சா நம்ப லிலியே அப்படி நம்மைப் பயமுறுத்தும்."

வீட்டுக்குள்ளே போனேன்.

"கார் எங்கே?" என்று கேட்டாள் ராதா.

"கதவை அழுத்தித் தாழ்ப்பாள் போடு. கத்தாதே! கார் எரிஞ்சு போச்சு!"

"எரிஞ்சுடுத்தா?"

"ஆமா நீ ஏன் கவலைப்படறே? அது நம்ப கார் இல்லை! திருட்டுக்கார். இந்தா... இந்தா..."

அவளை நான் பிடித்து எழுப்பப் போக, அவள் துவண்டு புரள, அவள் வாயிலிருந்து கக்கர் கரைசல் போல்...

"ஐயோ! டிக்கியிலே நம்ப சிட்டி இருக்கான். (கார்) டிக்கியிலே நம்ப சிட்டி இருக்கான்..." என்று புரண்டு வந்தது.

ஒருகணம் எல்லாம் மறைந்த இருட்டு எனக்கு!

கால்களுக்கு அடியில் தரை ஆடியது!

"டிக்கியா! நம் சிட்டியா?" என்று குழறினேன்!

நிஜம் மெள்ள மெள்ள இமாலய கனத்தில் என் மீது அழுந்தியது.

"சொல்லு!" என்று அவளை உலுக்கினேன்.

திரும்பவும் சொன்னாள்.

தரையில் அமர்ந்து அதைப் பற்றிக் கொண்டேன். நடந்த உண்மை மெள்ளத் தெரிந்தது.

எனக்கு "விளையாட்டு" காண்பிக்க டிக்கியிலே சிட்டி ஒளிந்திருக்கிறான். அரை மணியில் திரும்பி விடுவதாக ராதாவிடம் நான் சொல்லியதால் பையன் டிக்கியில் ஒளிந்ததை அவள் ஒரு ஆபத்தாக நினைக்கவில்லை.

என் கண்கள் மீண்டும் குபுகுபுத்தது.

தீயில் எழுந்த குரல் மீண்டும் கேட்டது." டி....டி....டி..." வெறும் 'டி' அல்ல.

'டாடி, டாடி, டாடி.'

என் சிட்டியின் குரல்.

என் பார்வை கனத்த பாறையாக உறைந்து விட்டது.

கீழே மெள்ளத் தாழ்ந்தேன். ராதா அருகில்.

உலகம் ஒரு இருட்டாக என்னைச் சுற்றி வருகிறது.

பி.பி.எம். பயங்கரக் கட்சியில் நான் இப்போது இல்லை.


கல்கி
2.8.92
ஸ்கூட்டர் வைத்திருக்கும்
ஒவ்வொருவருக்கும்
நிரந்தரப் பயன் தரும்
இலவச இணைப்பு!
உங்கள் ஸ்கூட்டரை
நேசியுங்கள்

ராமநாதன் தினமும் ஸ்கூட்டரில் ஆபீஸ் போய் வருகிறவர். ஒருநாள் ஆபீஸ் போகிற வழியில் ஸ்கூட்டர் மக்கர் பண்ணவே, அருகில் உள்ள ஒரு மெக்கானிக்கிடம் வண்டியைக் கொடுத்து, ரிப்பேர் பார்க்கச் சொல்லி விட்டு, ஆபீசுக்குப் போய் விட்டார்.

மாலை ஆபீஸ் விட்டதும், ஸ்கூட்டரை திரும்ப எடுத்துக் கொண்டு போக மெக்கானிக்கிடம் வந்தார். ஸ்கூட்டர் பளிச்சென்று ரெடியாய் இருந்தது. ஓர் உதை கொடுத்தவுடனேயே ஸ்கூட்டர் சீறிக் கொண்டு, ஸ்டார்ட் ஆனது. காலையில் எத்தனையோ உதைகள் கொடுத்த போதும், ஸ்டார்ட் ஆகாமல் கழுத்தறுத்த ஸ்கூட்டர், இப்போது முதல் 'கிக்'கிலேயே ஸ்டார்ட் ஆகிறதே என்று அவருக்குச் சந்தோஷம்.

''எவ்வளவுங்க தரணும்?'' என்று கேட்டதும், மெக்கானிக் சொன்ன தொகையைக் கேட்டவுடன் ராமநாதனுக்கு லேசான அதிர்ச்சி. ''என்னப்பா இவ்வளவு கேக்கறே?'' என்று கேட்டார்.

மெக்கானிக், இன்னின்ன பாகங்களை மாற்றியிருப்பதாகவும், அவை ஒவ்வொன்றும் இன்னின்ன விலை என்றும் கூறி, ஒரு ஸ்பேர் பார்ட்ஸ் கடையிலிருந்து வாங்கப்பட்ட பில் ஒன்றையும் காட்டி, லேபர் சார்ஜையும் சேர்த்து அவ்வளவு தொகை ஆவதாகச் சொன்னார்.

ராமநாதன், ''ரொம்ப ஜாஸ்தி...'' என்று ஆரம்பித்துப் பேரம் பேசி, பத்து ரூபாய் குறைத்துக் கொடுத்து விட்டு, ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனாலும், அவருக்கு அநியாயமாய் ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்ற சந்தேகம் மட்டும் இருந்து கொண்டே இருந்தது.

இது மாதிரியான சந்தேகம் ராமநாதனுக்கு மட்டுமல்ல; இரண்டு சக்கர வாகனங்கள் வைத்திருக்கும் அனைவருக்குமே வருவதுண்டு.

லட்சக்கணக்கானவர்கள் மோபெட், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் என்று ஏதாவது ஓர் இரண்டு சக்கர வாகனத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்களில் பெரும்பாலானோருக்குத் தம் வாகனங்களை ஓட்டத்தான் தெரியுமே தவிர, அது எப்படி இயங்குகிறது என்றோ, அதை எப்படி எப்படியெல்லாம் பராமரித்தால், வாகனத்தின் முழுப் பயனையும் பெற்றுக் கொண்டு, வாகனத்தின் ஆயுட் காலத்தையும் அதிகரிக்க முடியும் என்கிற விவரமோ தெரியாது.

அப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு சக்கர வாகனங்களைப் பற்றிய சில அடிப்படை விவரங்களையும், அவைகளை எப்படி பராமரிப்புச் செய்தால், நல்ல 'மைலேஜ்' கிடைக்கும், அடிக்கடி சிறு சிறு செலவு செய்வதைத் தவிர்த்து, வாகனத்தின் முழுப் பயனையும் பெறலாம் என்றும் விளக்குகிறது கல்கி வழங்கும் இந்தக் கையேடு.



பாகங்களைத் தெரிந்து கொள்ளுவோம்!

ஸ்பார்க் பிளக், கார்புரேட்டர், கிளட்ச், வயர், சஸ்பென்ஷன், மாக்னட்டோ என்றெல்லாம் இரண்டு சக்கர வாகனங்களில் பல பகுதிகள் இருக்கின்றன என்பது யாவரும் அறிந்ததுதான். ஆனால் இவை எங்கே அமைந்துள்ளன, அவற்றின் பணி

என்ன? என்பதெல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்.

ஸ்பார்க் பிளக் : பெட்ரோல், காற்று இவை இரண்டும் கொண்ட எரிவாயுக் கலவையைக் கொண்டு தீ மூட்டப் பயன்படும் மின்சார பாகம் தான் ஸ்பார்க் பிளக். இதில், நீண்ட திருகுப் பகுதி கொண்டது, குறுகிய திருகுப் பகுதி கொண்டது என்று இரண்டு வகை உண்டு. சாதாரணமாக மோபெட்கள், ஸ்கூட்டர், ஒரு சில வகை மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் குறுகிய திருகு கொண்ட ஸ்பார்க் பிளக்கு களையே பயன்படுத்த வேண்டும். நீண்ட திருகு ஸ்பார்க் பிளக்குகளைப் பயன்படுத்தினால், பிஸ்டன் என்ற பகுதி, ஸ்பார்க் பிளக்கின் மின்பொறி இடைவெளிப் பகுதியில் இடிக்கும். எனவே அவரவர் வாகனக் கை யேட்டில் சிபாரிசு செய்யப்பட்டுள் ளதை மட்டுமே உபயோகிக்க வேண் டும்.



● சேற்றுத் தண்ணீர் கொண்டு துடைக்காதீர்கள்!

இக்னிஷன் காயில் : இது ஒரு சிறிய டிரான்ஸ்ஃபார்மர் போல என்று கூறலாம். இதனுள் இரண்டு தனித்தனி சுருள்களாக மெல்லிய கம்பி சுற்றப் பட்டிருக்கும். பாட்டரி அல்லது மேக் னடோ என்ற பகுதியிலிருந்து கிடைக் கும் மின்னோட்டம், முதன்மைச் சுருள் வழியே செலுத்தப்பட்டு, அது இரண்டாம் சுருளில் மிக வலுவான மின்னோட்டத்தைத் தோற்றுவிக்கிறது. இந்த மின்னோட்டம் தான் ஸ்பார்க் பிளக்கில் மின் (தீப்)பொறிகளைத் தோற்றுவிக்கிறது.

ஏர் ஃபில்டர் : எஞ்சின் இயக்கத்துக்கு அடிப்படைத் தேவை பெட்ரோலும், காற்றும் கலந்த எரிபொருள் கலவை என்பதை முன்னரே பார்த்தோம். இந்தக் கலவைக்குத் தேவையான காற்று சுத்தமாய் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம். எனவே, எரிபொருள் கலவைக்கான சுத்தமான காற்றைப் பெற கார்புரேட்டரில் வடிகட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. முன்பு இந்த ஃபில்டர்களில், நுண்ணிய கம்பி வலைகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இப்போது, கம்பி வலைக்குப் பதிலாக மிக நுண்ணிய துளைகள் கொண்ட காகிதம், நுரை ரப்பர், ஃபைபர் கிளாஸ் போன்றவை பயன் படுத்தப்படுகின்றன.

கார்புரேட்டர் : எரிவாயுக் கலவையை உருவாக்கி, சிலிண்டருக்குள் அனுப்பும் பகுதியே கார்புரேட்டர். இது வாகனத்துக்கு இதயம் போன்றது. வாகனத்தின் பெட்ரோல் சிக்கனத்தில் இதன் பங்கு மிக முக்கியமானது.

கிளட்ச் : இரண்டு சக்கர வாகனங்களில், எஞ்சின் சக்தியைச் சக்கரங்களுக்குக் கொண்டு சென்று, வாகனத்தை ஓடச் செய்யும் பணியில் முக்கிய பங்கு வகிக்கும் பகுதி கிளட்ச். எஞ்சின் ஓடிக் கொண்டிருக்கும் சமயத்தில், அந்தச் சக்தியை நேரிடையாய்ச் சக்கரத்துக்கு மாற்றுவது நடைமுறையில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் காரியமாகும். எனவே, எஞ்சினின் முழு விசையையும் நேரடியாய்ச் சக்கரத்தின் மேல் செலுத்தாமல், எஞ்சினின் விசை, சக்கரச் சுழற்சி இவற்றை தாற்காலிகமாய்ப் பிரித்து, படிப்படியாகச் சக்தியை அதிகரித்து, வேகத்தைக் கூட்டவும், படிப்படியாய்க் குறைத்து, வேகத்தைக் குறைக்கவும் வேண்டியது மிகவும் அவசியம். பிரத்யேகத் தன்மை கொண்டு, இப் பணியைச் செய்வதுதான் கிளட்ச்.

கியர் : எஞ்சினின் சக்தியை, சக்கரத்துக்கு மாற்றியதும், வண்டியின் வேகத்தைக் கூட்டவோ, குறைக்கவோ உதவும் பகுதிதான் கியர். வலிமையான உலோகத்தாலான, பற்சக்கரங்கள் கொண்டது கியர்.

சஸ்பென்ஷன் : வாகனங்கள் மேடு, பள்ளங்கள் நிறைந்த சாலைகளில் வேகமாய்ச் செல்லும் போது, சக்கரங்களில் அதிர்வு ஏற்படுவது சகஜம். இந்த அதிர்வுகள், வாகனத்தின் உட்புறங்களில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் இந்த 'சஸ்பென்ஷன்' பாதுகாக்கிறது. இதில் ஏற்படும் கோளாறுகள் டயரில் அதிகபட்ச உராய்வினை ஏற்படுத்தி, தேய்மானம் கொடுக்கும்.

பிஸ்டன்/சிலிண்டர் : இவை எஞ்சினின் ஒரு பாகம். சிலிண்டரினுள் முன்னும், பின்னுமாய் இயங்கும் பிஸ்டனின் உதவியால், எரிபொருள் கலவை அழுத்தப்பட்டு, ஸ்பார்க் பிளக்கிலிருந்து தோன்றும் தீப்பொறியால், அந்தக் கலவை எரிக்கப்பட்டு, சக்தியாய் மாறுகிறது. வாகனத்தின் வேகத்தில் குறை என்றால் இதனை 'செக்' செய்ய வேண்டும்.


மாக்னடோ : ஸ்பார்க் பிளக், விளக்குகள் போன்ற மின்சாரத்தால் இயங்கும் வாகனப் பகுதிகளுக்குத் தேவையான மின்சாரத்தை உண்டாக்கும் பாகம்தான் 'மாக்னடோ'.

பாயிண்ட் : சிலிண்டரினுள்ளே முன்னும் பின்னுமாய் நகரும் மின் கற்றுக்கு இடையே அமைக்கப்படும் அசையும் முனைகளைப் 'பாயிண்ட்' என்கிறோம். இவை இணையும் போது மின்சாரக் கற்றுத் தொடர்பு ஏற்படும்; விலகும் போது, மின் தொடர்பு தானாகத் துண்டிக்கப்படும். இதனால் ஸ்பார்க் பிளக்கில் தொடர்ந்து தீப்பொறி ஏற்படுகிறது.

எக்ஸாஸ்ட் : சிலிண்டரினுள், எரிக்கப்பட்ட எரிபொருள் கலவை புகையாய் மாறி வரும், அதை உடனடியாக சிலிண்டரிலிருந்து வெளியேற்றியாக வேண்டும். அப்படி வெளியேறாவிட்டால், புதிய எரிபொருளின் அளவு குறைந்து, அதனால் உருவாக்கப் படும் சக்தியின் அளவும் குறைந்து, இறுதியில் வண்டியின் வேகமும் குறைந்து நின்று

ஸ்கூட்டரின் பாகங்கள் :


1. கார்புரேட்டர், ஏர் க்ளீனர்
2. பிஸ்டன்
3. க்ராங்க்ஷாஃப்ட்
4. கிளட்ச்
5. மெயின்ஷாஃப்ட், கியர்கள்
6. கியர் ஷிஃப்டர்
7. ஃப்ளைவீல் மேக்னடோ
8. கிக் ஸ்டார்ட்டர்
9. க்ராங்க் கேஸ் ஸ்விங்கிங் ஆர்ம் கிளட்ச் சைட்




விடும். அதோடு, புகை வெளியேறும்போது, அதிக ஓசையை ஏற்படுத்தும். இந்த ஓசையைக் குறைத்து, அதை உடனுக்குடன் வெளியேற்றுவதுதான் 'எக்ஸாஸ்ட்' டின் பணி. இதை சைலன்ஸர் என்றும் கூறுவார்கள். சூடான புகை தொடர்ந்து வெளியேறுவதால், இந்த சைலன்ஸர், வாகனம் சிறிது தூரம் ஓடியவுடனேயே சூடு அடைந்து விடும்.

பராமரிப்பும், சர்வீஸிங் முறைகளும் :

ஓர் இரண்டு சக்கர வாகனம், திடீரென நின்று போனால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனாலும் கூட, நாம், நம் அளவில் உடனடியாக செக்அப் செய்ய வேண்டியது ஸ்பார்க் பிளக். ஓடிக் கொண்டிருக்கும் வண்டி, நின்று விட்டதால், ஸ்பார்க் பிளக் ரொம்ப சூடாய் இருக்கும். ஸ்பார்க் பிளக்கிற்குரிய ஸ்பானரையே பயன்படுத்தினாலும் கூட, கை சுடும். எனவே, வண்டியிலேயே எப்போதும், துண்டுத் துணியோ, வண்டி துடைப்பதற்கென்று பயன்படுத்தப்படும் 'நூல் இழை வேஸ்ட்'டோ எப்போதும் கையோடு வைத்திருங்கள். தொடர்ந்து பல நூறு கிலோ மீட்டர் தூரம் ஓடியதன் விளைவாக, அதன் வளைந்த நுனியில் ஆக்ஸைடு பூச்சு ஏற்பட்டிருக்கலாம். இது சரிவர தீப்பொறி ஏற்பட விடாமல் தடுக்கும். தொடர்ந்து தீப்பொறி ஏற்படாவிட்டால் வண்டி மக்கர் செய்யும்.


ஸ்பார்க் பிளக்கைச் சுத்தம் செய்தல்



வாகனத்துக்கு வாகனம் மாறுபடும்.

ஸ்பார்க் பிளக்கைச் சரிசெய்ய எப்போதும் கைவசம் வைத்திருக்க வேண்டிய ஒன்று உப்புத்தாள். அந்த உப்புத்தாளால், ஸ்பார்க் பிளக் முனையினைத் தேய்த்துச் சுத்தப்படுத்த வேண்டும். கூரிய கம்பி அல்லது குண்டூசி போன்றவற்றைக் கொண்டு, ஸ்பார்க் பிளக் முனையைச் சுற்றியுள்ள பகுதியில் படிந்த தூசுகளையும் துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்பார்க் பிளக் முனையிலுள்ள இடைவெளி ஒரு முக்கியமான அம்சம். இந்த இடைவெளி அதிகமாய் இருந்தாலும் சரி, குறைவாய் இருந்தாலும் சரி, பிரச்னைதான். தொடர்ந்து உபயோகத்தில் இருப்பதால், ஸ்பார்க் பிளக்கின் 'பின்' போன்ற முனை தேய்வடைந்து விடும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் பழையதைக் கழற்றி விட்டுப் புதியதாய் மாற்றுவது அவசியம்.

சர்வீசுக்குக் கொடுக்கும் போது என்ன செய்கிறார்கள்?

வாகனங்கள் வைத்திருப்பவர்கள் அனைவருமே, வழக்கமாய் மெக்கானிக்குகளிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டரிலோ தமது வாகனத்தை சர்வீசுக்குக் கொடுக்கிறார்கள். சர்வீஸ் செய்தபின் வாகனம், நிச்சயமாய் நன்றாய் ஓடும்; இந்த மாற்றத்தை ஓட்டுபவர்கள் அனுபவபூர்வமாகவே உணருவார்கள்.

சரி! சர்வீஸுக்கு தரப்படும் வாகனத்தில் என்னென்ன வேலைகள் செய்யப்படுகின்றன?

சர்வீஸ் செய்வதற்காக வாகனத்தைப் பெறும்போதே, இன்னின்ன குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும் என்கிற விவரங்களை அதற்குரிய அட்டையில் எழுதிக் கொண்டு விடுவார்கள். கார்புரேட்டரைச் சுத்தம் செய்வது, எஞ்சின் ஒழுங்காய் இருக்கிறதா என்று சோதிப்பது, மின்சார பாகங்களான ஹெட்லைட், பின்புற விளக்கு, ஹாரன் போன்றவை சரியாய் இருக்கின்றனவா என்று செக் அப் செய்வது போன்றவற்றைச் செய்வார்கள். கியர் பாக்ஸில் புதிதாய் எண்ணெய் மாற்றுவார்கள். அடுத்தாற்போல வண்டியின் சொந்தக்காரர் குறிப்பிட்ட ரிப்பேர்களையும் செய்வார்கள்.

எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்து முடித்ததும், வண்டியை மிகுந்த வேகத்தில் பீச்சியடிக்கும் தண்ணீர் கொண்டு, நன்றாய்க் கழுவுவார்கள். அதனையடுத்து, 'காற்று கம்ப்ரஸர்' மூலம் காற்றைச் செலுத்தி ஈரம் உலரும்படி செய்வார்கள். இதனால், இடுக்குகளில் தண்ணீர் தங்கி, நாளடைவில் துருப் பிடிப்பது தடுக்கப்படும். அதன் பின்

கிரீஸ் போட வேண்டிய இடங்களுக்கு கிரீஸ் போட்டு முடித்தால், அடுத்து பில் போட வேண்டியதுதான் பாக்கி.

சர்வீஸ் செய்வதற்கு, அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டர்களையே நாடுவது நல்லது என்றாலும் கூட, அது அனைவருக்கும் சாத்தியமானதல்ல. உதாரணமாய், சிறு நகரங்களில் டீலர்களோ, அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டர் வசதிகளோ இருக்காது. பெரிய ஊர்களில், பல்வேறு இரு சக்கர வாகனங்களின் தயாரிப்பாளர்களுக்கும், அவர்களது அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் மையங்கள் இருக்கின்றன என்றாலும், நகரங்களில் வாகனங்கள் வைத்துள்ள அனைவரும் அவர்களிடமே செல்வதில்லை; அப்படிச் சென்றாலும், அபரிமிதமான எண்ணிக்கையில் உள்ள வாகனங்கள் எல்லா வற்றின் தேவைகளையும் பூர்த்தி செய்வதென்பது, சர்வீஸ் சென்டர்களால் இயலாத காரியம்.

எனவே, தெருவோரங்களிலுள்ள சிறு மெக்கானிக்குகள் முதல், பிரபல தனியார் மெக்கானிக்குகள் வரை (ஸ்கூட்டர் ஸ்பெஷலிஸ்ட், புல்லட் ஸ்பெஷலிஸ்ட் என்று போர்டு போட்டுக் கொள்ளுகிறவர்கள்) பலரிடம் வாகனங்களை விட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள்.

இப்படி வண்டியை விடும் போது ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். வாகனத்தை ரிப்பேருக்கு அல்லது சர்வீசுக்குக் கொடுத்து விட்டு, நாள் முழுக்க கூடவே இருந்து கண்காணிப்பது என்பதும் முடியாத காரியம். இதற்கு என்னதான் தீர்வு?



தெரிந்த நண்பர்கள் மூலம் மெக்கானிக்கை அறிமுகம் செய்து கொண்டு, தொடர்ந்து அவரிடமே வண்டியைக் கொடுக்கலாம். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு மெக்கானிக் என்று மாற்றிக் கொண்டே இருக்காமல், ஒரே மெக்கானிக்கிடம் தொடர்ந்து கொடுப்பதை வழக்கமாய்க் கொள்ளலாம். இதனால், பரஸ்பரம் நம்பிக்கை வளரும். தனியார் மெக்கானிக்குகளிடம் கொடுத்தால்தான் பிரச்னை என்பதில்லை. ''சர்வீஸ் சென்டரில் கொடுத்தாலும் அங்குள்ள மெக்கானிக்குகள், வண்டியிலுள்ள புதிய பாகங்களை எடுத்துக் கொண்டு, பழைய பாகங்களை மாற்றி விடுவார்கள்'' என்று தனியார் மெக்கானிக்குகள் குற்றம் சுமத்துவார்கள். அதே போல், ''வெளி மெக்கானிக்குகளிடம் வண்டியைக் கொடுத்தால் ஜாக்கிரதையாய் இருங்க சார்! ஸ்பேர் பார்ட்ஸ் மாற்றும் போது, ஒரிஜினல் என்று சொல்லி, டூப்ளிகேட்டைப் போட்டு ஏமாற்றிடுவாங்க'' என்று சர்வீஸ் சென்டர்காரர்கள் எச்சரிப்பதும் வழக்கம்தான்.

இந்த விஷயத்தில் ஏமாறாமல் இருக்க என்ன செய்யலாம்?

1. தனியார் மெக்கானிக்குகளுக்கு, என்னென்ன உதிரி பாகங்கள் தேவையோ, அவற்றை நாமே வாங்கிக் கொடுக்கலாம்.

2. அவர்களாகவே வாங்கிக் கொள்ளும் பட்சத்தில், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரிடம் ஒரிஜினல் உதிரி பாகங்களையே வாங்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறலாம்.

3. வாங்கப்பட்ட பொருட்களுக்குரிய, கடையின் ரொக்க பில்லை கேட்கலாம். (துண்டுத் தாளில் எழுதியதை 'பில்' என்று பல மெக்கானிக்குகள் கொடுப்பார்கள்) இப்படிப் பில் வாங்குவதால் இன்னொரு நன்மையும் உண்டு. வாங்கிய சில நாட்களில் அது சரியில்லாமல் போய், விற்பனையாளரிடம் புகார் தரும் பட்சத்தில், அவர் 'கேஷ் பில்' நிச்சயம் கேட்பார். அப்போது, இலவச ரீப்ளேஸ்மென்ட்டுக்கு 'பில்' உதவக் கூடும்.

இரண்டு சக்கர வாகனங்களை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்தால் மிகவும் உத்தமம். இல்லையெனில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்து

விடுவது நல்லது. ஒரு சர்வீசுக்கும், இன்னொரு சர்வீசுக்கும் இடைப்பட்ட காலம் அதிகரிக்க அதிகரிக்க, சர்வீசின் போது மாற்றப்பட வேண்டிய பாகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் அதன் காரணமாய் பில் தொகை உயர்வதும் தவிர்க்க முடியாதவை.

எந்த கியரில் எவ்வளவு வேகம் போகலாம்?

இரண்டு சக்கர வாகனங்களில், பொதுவாக கியர் உள்ளவை - கியர் இல்லாதவை என்று இரண்டு வகை உண்டு. பொதுவாக எல்லா ஸ்கூட்டர்களும், மோட்டார் சைக்கிள்களும் கியர் சிஸ்டம் அமையப் பெற்றவையே. சிலவற்றில் மூன்று கியர்களும், சிலவற்றில் நான்கும் இருக்கும். எந்த கியரில் எவ்வளவு வேகத்தில் போனால், எஞ்சினில் அதிக பாதிப்பு இருக்காது என்பதைக் கீழ்க் காணும் அட்டவணை காட்டுகிறது.

கியர்	அதிகபட்சவேகம் கி.மீ/மணி	
	3 கியர் வாகனம்	4 கியர் வாகனம்
முதல் கியர்	20	20
இரண்டாம் கியர்	35	30
மூன்றாம் கியர்	60	40
நான்காம் கியர்	-	60

அதிகபட்ச பெட்ரோல் சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டுமானால், மோபெட்களில் மணிக்கு முப்பதிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் வேகத்தில் செல்ல வேண்டும். ஸ்கூட்டரிலும் மோட்டார் சைக்கிளிலும் போகிறவர்கள் நாற்பது முதல் ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் செல்லுவது பெட்ரோல் சிக்கனம். ஸ்கூட்டரில் அறுபது கிலோ மீட்டர் வேகத்திலும், பைக்கில் எண்பது, நூறு கி.மீ. வேகத்திலும் கூட செல்ல முடியும் என்றாலும் கூட, அந்த வேகம் அதிக பெட்ரோல் குடிக்கும் சமாசாரம் என்பதோடு, விபத்துக்களுக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

பெட்ரோலுடன் 'ஆயில்' கலந்து போடுவது ஏன்?

பொதுவாக மோபெட்கள், ஸ்கூட்டர்கள் ஒரு சில மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் பெட்ரோல் போடும்போதே, 'ஆயில்' சேர்த்துப் போடுவதைப் பார்த்திருப்பீர்கள். பெட்ரோலில் ஆயில் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன? எரிபொருள் கலவை, எரிசக்தியாய் மாறும் பகுதியில் உள்ள பிஸ்டனின் வெளிப்பகுதி, சிலிண்டரின் உட்புறச் சுவரை ஒட்டி மேலும் கீழும் நகரும் போது ஏற்படும் உராய்வை, பெட்ரோலுடன் கலந்து போடும் ஆயில் குறைக்கிறது. எஞ்சின், உராய்வு காரணமாய் அதிகப்படியாய்ச் சூடாவது தடுக்கப்படுகிறது. ஸ்பார்க் பிளக்கிலிருந்து, தொடர்ச்சியாகத்



●● கிருஷ்ணகிரியில் உள்ள போட்டோ ஸ்டுடியோ ஒன்றின் வாசலில் விளம்பரம் : "நீங்கள் அழகாய் இருப்பவராயின் உங்கள் அழகை அப்படியே படம் பிடித்துத் தருகிறோம். இல்லையெனில் உங்களை அழகுள்ளவராகப் படம் பிடித்துத் தருகிறோம்!"

●● ஹைதராபாத் கோட்டி பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள ஒரு சிறிய கடையின் பெயர் 'கரென்சி ஹாஸ்பிடல்' (Currency Hospital) அங்கு உள்ள விளம்பரம் : இங்கு சகலவிதமான அழுக்கான, கிழிந்த, பழைய, எண்ணெய்க் கறைபட்ட, மக்கிய, துண்டான ரூபாய் நோட்டுகள் வாங்கிக் கொள்ளப்படும். அதற்குப் பதிலாக புதிய நோட்டுகள், கமிஷன் பிடித்துக் கொண்டு தரப்படும்.

- நாமக்கல் இரமேஷ்குமார்

தீப்பொறி வரவழைக்க உதவுவதில் இந்த எண்ணெய்க்கும் பங்கு உண்டு. அதிக அளவு கரி படிவதை இது தடுக்கிறது. பிஸ்டன் பகுதியில் உள்ள வளையங்கள் தேய்மானத்தைக் குறைப்பதிலும் இந்த எண்ணெய்க்குப் பங்கு உண்டு. இதற்கென மார்க்கெட்டில் '2T ஆயில்' என்று ஒருவகை எண்ணெய் விற்கப்படுகிறது. இதைத்தான் பெட்ரோலுடன் கலந்து, பயன்படுத்த வேண்டும்.

ஒருசில வாகனங்களில், பெட்ரோலுடன், சேர்த்தே இந்த ஆயிலும் பெட்ரோல் டாங்க்கினுள் ஊற்றப்படுகிறது. வேறு சில வகை வாகனங்களில், பெட்ரோலை, பெட்ரோல் டாங்க்கில் போட்டு விட்டு, ஆயிலை தனியே அதற்குரிய வேறு ஓர் இடத்தில் ஊற்றும் அமைப்பும் உள்ளது. வண்டியின் வேகத்தின் தேவைக்கேற்ப பெட்ரோலும், ஆயிலும் தனித்தனி குழாய்கள் வழியே சிலிண்டரினுள் வந்து சேர்ந்து, எரிபொருள் கலவை தயாராகிறது. இதனால், இவ்வகை எஞ்சின்கள், குறைந்த பெட்ரோலுக்கு, அதிக மைலேஜ் தரும் சிறப்புக் குணத்தைப் பெற்றுள்ளன.

டயர், டியூப் - கவனம் தேவை!

இரண்டு சக்கர வாகனங்களில், சக்கரங்களின் பராமரிப்பு மிக முக்கியமானது. முன் சக்கரம், பின் சக்கரம் இரண்டிலும் போதிய அளவு காற்றழுத்தம் இருக்க வேண்டும். ஒவ்வொரு ரக வாகனத்துக்கும் சக்கரங்களில் எவ்வளவு காற்றழுத்தம் இருக்க வேண்டும் என்பதைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

	முன் சக்கரம்	பின் சக்கரம்
மோபெட்	1.4 (20)	2.8 (40)
ஸ்கூட்டர்	1.4 (20)	2.6 (36)
மோட்டார் சைக்கிள்	1.4 (20)	* 2.2 (32)

காற்றின் அழுத்தம் ஒரு சதுர செ. மீட்டருக்கு இத்தனை கிலோகிராம் என்று மெட்ரிக் முறையில் வந்து விட்டாலும்கூட, பெட்ரோல் பங்குகளில் இன்னமும் பழைய முறையான பி.எஸ்.ஐ. என்ற அளவீட்டிலேயே குறிப்பிடப் படுகிறது. அதாவது ஒரு சதுர அங்குலத்துக்கு இத்தனை பவுண்டுகள் என்ற அளவில் குறிப் பிப்படுகிறது. இதையே அடைப்புக் குறிகளுக்குள் கொடுத்திருக்கிறோம்.

குறிப்பிட்ட அளவு காற்றழுத்தத்தை விட சக்கரத்தில் காற்றழுத்தம் அதிகமாய் இருந்தால், வாகனத்தை ஓட்டும் போது, லேசான துள்ளலுடன் வண்டி ஓடும். இதனால் சறுக்கிக் கீழே விழுவதற்கு வாய்ப்புகள் உண்டு. சரி! குறிப்பிட்ட காற்றழுத்தத்தை விடக் குறைவாய் இருந்தால் என்ன வாகும்? வாகனத்தின் எடை, ஓட்டுபவரின் எடை



நிருபர் : கடைசியாக இந்தத் தெருக் குழாயில் எப்ப தண்ணீர் வந்தது?

பெண் : எனக்குத் தெரியாதுங்க... நான் இங்கே குடிவந்து இரண்டு வருஷம்தான் ஆகுது!

- உ. ராஜாஜி

இவற்றுடன் பின்னால் உட்கார்ந்திருப்பவரின் எடையும் சேர்ந்து, டயரை ஒரேயடியாய் அழுத்தும்! விளைவு?

டியூப், டயர் இவை எளிதில் தேய்வடைவதோடு மட்டுமின்றி, மேடு, பள்ளங்கள் நிறைந்த சாலைகளில் செல்வதால், அடிபட்டுப் பங்சர் ஆகும். மேலும் இரண்டு சக்கரங்களிலும் போதிய அளவு காற்றழுத்தம் இல்லையெனில், வாகனத்தை வேகமாய் ஓட்ட முடியாது என்பது ஒருபுறம் என்றால், இன்னொருபுறம், இதனால் எஞ்சின் அதிகப்படியான சக்தியை உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதால் பெட்ரோலும் அதிகப்படியாய்ச் செலவாகும்.

இதனால்தான், பெட்ரோல் பங்க்குகளில், பெட்ரோல் போடும்போதெல்லாம் இரண்டு சக்கரங்களிலும் காற்றழுத்தம் சரியான அளவில் உள்ளதா என்பதைத் தவறாமல் சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஸ்டாம்பு சேகரிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். அவர் ஸ்டாம்பு ஆல்பம் ஒன்றை வைத்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு காட்சியை, "மொனாகோ" நாடு வெளியிட்ட ஒரு ஸ்டாம்பில் காணலாம். அந்த ஸ்டாம்பில் காணப்படும் ரூஸ்வெல்ட்டின் இடது கையில் ஆறு விரல்கள் காணப்படுகின்றன. உண்மையில் அவருக்கு ஆறு விரல்கள் கிடையாது.

- டி. சுப்பையா

பெட்ரோல் ஜாக்கிரதை!

பெட்ரோல் போடும் போது ஒவ்வொரு லிட்டராய்ப் போட்டுக் கொண்டிருக்காமல், உங்களது வாராந்திரத் தேவையைக் கணக்கிட்டு, அதனை ஒரே தடவையிலேயோ அல்லது இரண்டு தடவைகளிலோ நிரப்பிக் கொள்வது நல்லது. காரணம், பெட்ரோல் டாங்கில் மிகவும் கொஞ்சமாய்ப் பெட்ரோல் இருந்தால் அது சீக்கிரம் ஆவியாகி விடும். அதாவது பெட்ரோல், காற்றுப் பட்டால் ஆவியாகும் தன்மையுடையதால், காலி டாங்கில் காற்று நிறைய இருப்பதால் அதன் மூலம் ஆவியாகி விடும்!

அதே போல, டாங்க் நிரம்பி வழிவது போல பெட்ரோல் நிரப்புவதும் கூடாது. அப்படிச் செய்தால், வாகனம் ஓடும் போது ஏற்படும் ஆட்டத்தின் காரணமாய், பெட்ரோல் ததும்பித் ததும்பி ஆவியாகி விரயமாகி விடும்.

பெட்ரோல் டாங்கிற்கு என்று பிரத்யேகமான பூட்டுகள் விற்பனையாகின்றன. பொது இடங்களில் அடிக்கடி வாகனங்களை நிறுத்த வேண்டிய அவசியம் உள்ளவர்கள், பெட்ரோல் டாங்கிற்குப் பூட்டுப் போட வேண்டியது மிக முக்கியம். மோபெட்கள், பைக்குகள் போன்றவற்றில், டாங்கிலிருந்து, இஞ்சினுக்குச் செல்லும் குழாய் மூலமாய்ப் பெட்ரோல் திருடப்படக்கூடிய சாத்தியமுண்டு! அதைத் தடுக்கவும் கடைகளில் பூட்டுகள் கிடைக்கின்றன.

அடிக்கடி பிரேக் போடாதீர்கள்!

எதிர்பாராத விஷயங்களையும் எதிர்பார்த்து ஓட்டுகிறவர்தான் சிறந்த டிரைவர். நிதானம் தவறாமல், தேவையான போது, பதற்றப்படாமல், பிரேக் பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமான விஷயம். 'ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்கிறேன் பேர்வழி என்று ஒருசிலர் பிரேக்கிலேயே கால் வைத்து அல்லது கைவைத்து ஓட்டிக் கொண்டிருப்பார்கள். இது தவிர்க்கப்பட வேண்டியது. இதனால் இடைவிடாத உராய்வு காரணமாய் பிரேக் பகுதிகளின் தேய்மானம் அதிகரிக்கும்.

அடிக்கடி பிரேக் போடுவதால் தேய்மானம் மட்டுமின்றி எரிபொருளும் கூடுதலாகச் செலவாகும்! எப்படி? வேகமாய் ஓடிக் கொண்டிருக்கும் வாகனத்தை, பிரேக்கை அழுத்துவதன் மூலமாக வேகத்தைக் குறைப்பது, அல்லது முழுமையாய் நிறுத்தி விடுவதன் மூலம் பிரேக் பாகங்

களுக்குத் தேய்மானம். இதற்கு அடுத்தகட்டமாக நிறுத்தப்பட்ட அல்லது வேகம் குறைக்கப்பட்ட வண்டியை பழையபடி வேகம் பெறச் செய்ய வேண்டும் அல்லவா? கியர் மாற்றி வேகம் அதிகரிக்கப்படும் போது, அதிக எரிபொருள் செலவாகிறது. ஆக, அடிக்கடி பிரேக்கை உபயோகிப்பதனால், தேய்மானம் மட்டுமின்றி எரிபொருள் செலவும் அதிகமாகிறது.

இதனைத் தவிர்க்கும் ஒரே வழி, வாகனத்தைச் சீரான வேகத்தில் ஓட்டி, அடிக்கடி பிரேக் போடுவதைத் தவிர்ப்பதுதான். அவசியமான சமயத்தில் பிரேக் போடாமல் இருக்க முடியாது என்றாலும் கவனமாகவும் முன்னெச்சரிக்கையாகவும் ஓட்டினால் பிரேக்குகளைப் பயன்படுத்துவதைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

கசிவைத் தவிர்த்து மிச்சம் பிடிக்கலாம்

பெட்ரோல் டாங்க்கில் எங்கேயாவது பெட்ரோல் கசிவு இருக்கிறதா என்று அவ்வப்போது சோதித்துப் பார்க்க வேண்டும். டாங்க்கிலிருந்து, பெட்ரோல் வெளியேறும் குழாய், கார்புரேட்டர் போன்ற இடங்களில் கசிவு இருந்தால், உடனடியாகக் கவனித்துச் சீர் செய்ய வேண்டும். ஒரு வாகனத்திலிருந்து ஒரு நிமிடத்துக்கு ஒரு துளி வீதம் பெட்ரோல் கசிகிறது என்று வைத்துக் கொண்டால் கூட ஒரு வருடத்தில் வீணாகும் பெட்ரோலின் அளவு என்ன தெரியுமா? சொன்னால் நம்புவது கூட கஷ்டமாய் இருக்கும். சுமார் 35 லிட்டர்! இன்றைய விலையில், இதன் மதிப்பு என்ன? இவ்வளவு பெரிய நஷ்டத்தை நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

நிற்க நேர்ந்தால் நிறுத்தி விடுங்கள்



ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிடம் போல, சிக்னலுக்காகவோ மற்ற ஏதாவது காரணங்களுக்காகவோ, (நண்பர்களிடம் பேச, அட்ரஸ் விசாரிக்க) நிற்க வேண்டியிருந்தால் இஞ்சினை 'ஆஃப்' செய்து விடுங்கள் என்று கூறுகிறது பெட்ரோலிய சேமிப்பு அமைப்பின் கையேடு.


இது நல்லதொரு அட்வைஸ்தான் என்றாலும் கூட, சிக்னலில் நிற்க வேண்டிய சமயங்களில், எல்லா ரக வாகனங்களுக்கும் இது சுலப சாத்தியமான காரியமில்லை. குறிப்பாக மோபெட்கள் விஷயத்தில், வண்டியை விட்டு இறங்கி, ஸ்டாண்டு போட்டு மிதித்து, வாகனத்தை ஸ்டார்ட் செய்வதற்குள் பின்னால் காத்திருக்கும் வாகன ஓட்டிகளின் வசவுக்கு ஆளாக நேரிடுமே!

இன்னும் சில டிப்ஸ் :

- சிக்னலுக்கு நிற்கும் போது சிலர் வாகனத்தை கியரில் போட்டு கிளட்சை அழுத்திக் கொண்டே இருப்பார்கள். இது தவறு. இதனால் பெட்ரோல் விரயமாவது மட்டுமில்லை; கிளட்ச் பிளேட்களும் விரைவிலேயே தேய்ந்து விடும். சரிவான பாதையெனில் பின்னால் வாகனம் நகராதிருக்க கியரை நியூட்ரல் செய்து பிரேக்கை அழுத்திக் கொள்வதுதான் நல்லது.

- இருபது கிலோ மீட்டர் வேகத்துக்கும் குறைவான வேகத்திலேயே தொடர்ந்து வாகனத்தை ஓட்டுவதைத் தவிர்ப்பது நல்லது. இது பெட்ரோல் செலவை அதிகப் படுத்தும்.

- நெடுந்தூரப் பயணத்தின் போது, முழு 'திராட்டில்'லும் கொடுத்து, உச்ச வேகத்தில் செல்வதைத் தவிர்ப்பது, இஞ்சினின் ஆயுளை உண்மையிலேயே அதிகரிக்கச் செய்யும்.




● வண்டியை ஸ்டார்ட் செய்யும் போது, வண்டியின் முன் விளக்குக்கான ஸ்விட்ச் 'ஆஃப்' செய்யப்பட்டுள்ளதா என்று சரிபார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். விளக்கை 'ஆன்' செய்தபடியே ஸ்டார்ட் செய்தால், அடிக்கடி 'ஹெட் லைட்'டின் பல்பு ஃபியூஸ் ஆகி விடும். வீண் செலவு.

● உங்கள் வாகனத்தை ஈரத்துணியால் முதலில் துடைத்து விட்டு, கையோடு, உலர்ந்த துணியாலும் உடனடியாகத் துடைத்து விடுங்கள். துருப்பிடிக்காமலிருக்கும். எஞ்சினின் வெளிப்புறப் பகுதிகளை, மண்ணெண்ணெய்த் துணியால் துடைக்கலாம். கூடுமானவரை சோப்புத் தண்ணீரை உபயோகித்து வாகனத்தைக் கழுவுவதைத் தவிர்க்கப் பாருங்கள்.(அதிலும் நவீன டிடர்ஜெண்ட்ஸ்.) இல்லையெனில் வாகனத்தில் பூசப்பட்டுள்ள 'பெயிண்ட்' பாதிக்கப்படும்.

● ஸ்பார்க் பிளக்கை மாற்ற வேண்டுமென்றால், கடைக்குப் போய், ஸ்கூட்டருக்கு, மோபெடுக்கு என்று பொதுப்படையாகக் கேட்காமல், அதற்குரிய எண்ணைக் குறிப்பிட்டுக் கேளுங்கள். காரணம் ஸ்கூட்டருக்கு ஸ்கூட்டர், ஸ்பார்க் பிளக் ஸ்பெசிஃபிகேஷன் எண் மாறுபடும். அந்தந்த வாகனத்தின் இன்ஸ்டிரக்ஷன் மானுவலில், ஸ்பார்க் பிளக் எண் குறிப்பிட்டிருப்பார்கள். அதைச் சொல்லி வாங்க வேண்டும்.

● வாகனம், ஸ்டார்ட் ஆவதில் ஏதேனும் பிரச்னை என்றால், முதலில் சரிபார்க்கப்பட வேண்டியது ஸ்பார்க் பிளக்தான். அதே போல, மிகக் குறைந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கும் போதும் சரி, சிக்னல் போன்ற காரணங்களுக்காகக் காத்திருக்கும் நேரத்திலும் சரி, வாகனம் ஆஃப் ஆகிறது என்றால், உடனடியாய் ஸ்பார்க் பிளக்கை செக் அப் செய்து விட வேண்டும்.

● ஏர்ஃபில்டரை இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கு ஒருமுறை சுத்தப்படுத்த வேண்டியது முக்கியம். வாகனத்தை சர்வீஸ் செய்வதற்குத் தரும்போது, ஏர் ஃபில்டரைச் சுத்தம் செய்யும்படி குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.



"உங்க பையன் என்ன படிக்கிறான்?"

"எல். கே. ஜி.யிலே கம்ப்யூட்டர் ஸயன்ஸ்!"

- எஸ். சந்திரசேகர்


இன்சூரன்ஸ் அவசியமா?

வாகனங்களை இன்சூர் செய்ய வேண்டியது கட்டாயமா?

இந்தக் கேள்வியை ஓர் இன்சூரன்ஸ் கம்பெனி அதிகாரியிடம் கேட்ட போது, ''ஆமாம்! வாகனங்களை இன்சூர் செய்ய வேண்டியது நம் நாட்டில் அமுலில் இருக்கும் மோட்டார் வாகன சட்டத்தின்படி கட்டாயம். அதன் படி வாகனத்திற்கு மட்டுமல்லாமல், ஓட்டுபவருக்கும், மூன்றாவது நபர் இன்சூரன்ஸும் எடுக்க வேண்டும்'' என்கிறார்.

அது என்ன மூன்றாவது நபர் இன்சூரன்ஸ்?

வாகனமோ, வாகன ஓட்டியோ தவிர, மூன்றாவது நபர் அல்லது நபர்கள் ஒரு விபத்தால் பாதிக்கப்படும் போது, அதற்குரிய நஷ்ட ஈட்டை இன்சூரன்ஸ் கம்பெனியே வழங்குவதற்கு வழிசெய்யும் வகையில், வாகனத்தின் உரிமையாளர் எடுத்துக் கொள்ளும் பாலிசிதான் மூன்றாவது நபர் இன்சூரன்ஸ். இதை 'தேர்டு பார்ட்டி இன்சூரன்ஸ்' என்று நடைமுறையில் குறிப்பிடுவார்கள்.



இன்சூர் செய்வதன் மூலம் எதெதற்கெல்லாம் நஷ்டஈடு கிடைக்கும்?

இன்சூரன்ஸ் கம்பெனிகள், பொதுவாகச் சாலை விபத்துக்களால் பாதிப்புக்குள்ளாகும் பாலிசிதாரரின் வாகனங்களுக்கான நஷ்டஈடு வழங்கும் என்பது யாவரும் அறிந்ததே! ஆனால், அது தவிர, தீ விபத்து, இடி, மின்னல் தாக்குதல், வெள்ளம், முதலான காரணங்களால் பாதிக்கப் பட்டாலும் கூட, உரிய நஷ்டஈடு கிடைக்கும் என்பது பலருக்குத் தெரியாது! ஆனால், எக்காரணம் கொண்டும், டயர், டியூப் போன்ற ரப்பர் பாகங்கள், பிளாஸ்டிக்கினாலான பாகங்கள் போன்றவை இன்சூரன்ஸில் சேராது என்பதால், குறிப்பிட்ட சதவீதத் தொகையைக் கழித்துக் கொண்டு, மீதியைத்தான் நஷ்டஈடாகத் தருவார்கள். இது தவிர, வாகனத்தின் ஆயுளைப் பொறுத்து தேய்மானத்தையும் கீழ்க் கண்டவாறு கணக்கிட்டு, நஷ்டஈட்டில் குறைத்து விடுவார்கள்.

வாகன வயது	தேய்மான சதவீதம்
6 மாதத்துக்குள்	...
6 மாதம் முதல் 1 வருடம் வரை	5%
1 வருடம் முதல் 2 வருடம் வரை	10%
2 வருடம் முதல் 3 வருடம் வரை	15%
3 வருடம் முதல் 4 வருடம் வரை	25%
4 வருடம் முதல் 5 வருடம் வரை	35%
5 வருடம் முதல் 10 வருடம் வரை	40%
10 வருடங்களுக்கு மேல்	50%

இன்ஸ்பெக்டர் : என்னய்யா இது... போலீஸ் ஸ்டேஷன் வாசல்ல பூசணிக் காயைக் கட்டித் தொங்க விட்டிருக்கீங்க?

கான்ஸ்டபிள் : நாக்கு வர்ற மாமூலைப் பார்த்து அக்கம்பக்கத்து ஸ்டேஷன்காரங்க திருஷ்டி படுது சார்...!

- வி. கி. குமார்

முழுமையான பாலிசி :

வாகனம், அதன் ஓட்டுனர் (அவர் உரிமையாளராக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை) மற்றும் விபத்தால் பாதிக்கப்படும் மூன்றாவது நபர் ஆகிய மூன்று அம்சங்களுக்கும் நஷ்டஈடு வழங்க வகை செய்யும் ஒருங்கிணைந்த பாலிசி உண்டு. அதை 'காம்ப்ரகன்சிவ் பாலிசி' என்பார்கள்.



வாகனம் விபத்துக் குள்ளானால்...

நீங்கள் ஓட்டிச் செல்லும் மோட்டார் சைக்கிள் ஒரு ஸ்கூட்டருடன் மோதி விட்டது என்று வைத்துக் கொள்வோம். நல்ல காலமாக உங்களுக்கு அடி ஏதுமில்லை. மோட்டார் சைக்கிளுக்குத் தான் சேதம். நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன? அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்க வேண்டும் என்பது விதி. (ஆளுக்கு பலமான அடி ஏதும் இல்லாத பட்சத்தில், போலீசில் ரிப்போர்ட் கொடுக்காவிட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம்.) அடுத்தபடியாக விபத்துக்குள்ளான வாகனத்தை ஒரு மெக்கானிக்கிடம் எடுத்துச் செல்ல வேண்டும். வாகனத்தைச் சீர்செய்ய என்ன செலவாகும் என்று மதிப்பீடு செய்யச் சொல்லி, அந்த 'எஸ்டிமேட்டை' எடுத்துக் கொண்டு, நீங்கள் இன்சூரன்ஸ் கம்பெனியின் எந்தக் கிளையில் பாலிசி எடுத்திருக்கிறீர்களோ அங்கே போக வேண்டும். எழுத்து மூலம் விண்ணப்பித்து, நஷ்டஈடு பெறுவதற்கான கோரிக்கை விண்ணப்பம் பெற வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தை வெகு கவனமாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

விண்ணப்பப் ஃபாரத்தில் கேட்கப்படும் விவரங்கள் :

வாகனத்தைப் பற்றிய விவரங்கள், அதன் உரிமையாளரைப் பற்றிய விவரங்கள், விபத்தின் போது வாகனத்தை ஓட்டியவரைப் பற்றிய விவரங்கள், விபத்து எப்படி நிகழ்ந்தது, அது போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டதா? என்பது போன்ற அனைத்து விவரங்களையும் முழுமையாக எதையும் மறைக்காமல் பூர்த்தி செய்ய வேண்டும்.

வாகனத்தின் ஆர். சி. புத்தகம், ஓட்டியவரின் லைசென்ஸ் போன்ற தஸ்தாவேஜுகள் இன்சூரன்ஸ் அலுவலகத்தினரால் சரிபார்க்கப்பட்டபின், இன்சூரன்ஸ் கம்பெனியைச் சாராத தன்னிச்சையான 'சர்வேயர்' ஒருவர் உங்கள் வண்டிக்கு ஏற்பட்ட சேதத்தைக் கணித்து, அதனை ரிப்பேர் செய்ய என்ன செலவாகும் என்பதையும் மதிப்பீடு செய்ய அனுப்பி வைக்கப்படுவார். அவரும் மெக்கானிக்கும் கலந்து பேசி, ரிப்பேர் செய்ய எவ்வளவு தொகை ஆகும் என்பது குறித்து ஒரு முடிவுக்கு வருவார்கள்.

இந்த விசிட் மற்றும் டிஸ்கஷனின் போது, வாகனத்துக்குரியவர் கூடவே இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. இருந்தாலும் நல்லதுதான்.

அதன்பின், விபத்துக்குள்ளான வாகனத்தைச் சீர்செய்யும் பணியைத் துவக்குவதற்கான 'ஆர்டர்' மெக்கானிக்கிற்கு அனுப்பி வைக்கப்படும். மெக்கானிக் தம் பணியைச் செய்வார். கஸ்டமருக்குப் பரிபூரண திருப்தியளிக்கும் வகையில் ரிப்பேர் வேலை

செய்யப்பட்டதும், அதற்குரிய சார்ஜை நீங்கள் மெக்கானிக்கிடம் கொடுத்து விட்டு, அதற்கான பில்லை, இன்சூரன்ஸ் கம்பெனியில் கொடுத்துத் தேய்மானம் முதலிய கழிவுகள் போக மீதித் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். சில அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மையங்களில், பில் தொகையில் கஸ்டமர் செலுத்த வேண்டிய பகுதியை மட்டும் வாங்கிக் கொண்டு, அவர்களே பில்லை இன்சூரன்ஸ் கம்பெனிக்கு அனுப்பியும் பணம் பெற்றுக் கொள்வார்கள்.

விபத்தில் நபர்களுக்குச் சேதம் ஏற்பட்டால்...

விபத்தின் போது, வாகன ஓட்டியோ, மூன்றாம் நபரோ மரணமடைந்தால், பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும். அங்கே வழங்கப்படும் தீர்ப்புக்கேற்ப இன்சூரன்ஸ் கம்பெனி நஷ்டஈடு வழங்கும். மரணம் சம்பவிக்கவில்லை எனில், காயமடைதல், அங்கஹீனமடைதல் போன்ற பாதிப்புகளுக்கு, மருத்துவச் செலவு முதலானவற்றுக்கென நஷ்டஈடு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும்.

இன்சூரன்ஸ் இன்னும் சில தகவல்கள் :

- உங்களுடைய இன்சூரன்ஸ் பாலிசி காலாவதியாகும் போது, பாலிசியைப் புதுப்பிக்கக் கோரி நினைவூட்டல் கடிதம் வரும். உடனடியாகப் புதுப்பித்து விடுங்கள். அப்படி நினைவூட்டல் கடிதம் வராவிட்டாலும் நீங்களாகவே பாலிசியைப் புதுப்பிக்க வேண்டியது அவசியம். காரணம், இன்சூரன்ஸ் கம்பெனி நினைவூட்டல் கடிதம் அனுப்ப வேண்டும் என்பது கட்டாயமான விஷயமில்லை.
- ஒரு வருடத்தில் எந்த இன்சூரன்ஸ் கம்பெனியில் பாலிசி எடுக்கிறீர்களோ, அதிலேயேதான் மறு வருடமும் எடுக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. உங்கள் விருப்பப்படி, வசதிப்படி கம்பெனியையும் அதன் கிளையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
- எடுக்கப்படும் பாலிசியில், எந்தவித நஷ்டஈடும் ஏற்கெனவே வழங்கப்படாத பட்சத்தில், பாலிசிதாரருக்கு 'ஊக்கத் தள்ளுபடி' கிடைக்கும். இப்படி ஒரு இன்சூரன்ஸ் கம்பெனி தரும் 'தள்ளுபடி போனஸ்' இன்சூரன்ஸ் கம்பெனியை நாம் மாற்றினால் அங்கேயும் செல்லுபடியாகும்.
- உங்கள் வாகனம் திருட்டுப் போய் விட்டால் கூட, உங்களுக்கு இன்சூரன்ஸ் கம்பெனி நஷ்டஈடு அளிக்க பாலிசி வகை செய்கிறது.

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி
புகைப்படம் : யோகா
வண்ணப்படம், கார்ட்டூன்கள் : அரஸ்

நன்றி : ஆர். டி. எஸ். சர்வீஸ் சென்டர், சென்னை.
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்



புலவர் : ஒரு கவிதை பாடட்டுமா அரசே?

அரசன் : அடிக்கடி இப்படி பிளாக்மெயில் செய்து என்னிடம் நீர் பணம் கேட்பது அவ்வளவு நல்லா இல்லே புலவரே!

- உ. ராஜாஜி

பிரசவத்துக்கு நர்சிங் ஹோம் போறீங்களா?



எந்த நிமிடம் வலி எடுக்குமோ என்ற பரபரப்பு; வலி எடுத்ததும் நர்சிங் ஹோமுக்குப் போகும் அவசரம். கடைசி நிமிடத்தில் எதையெதை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று தெரியாமல் தடுமாறுவது சகஜம். இதோ, ஒரு பட்டியல். இவற்றையெல்லாம் பிரசவத்துக்குச் சுமார் ஒரு வார காலத்துக்கு முன்னதாகவே தயாராக எடுத்து வைத்து விட்டால், அநாவசியமான கடைசி நிமிஷ டென்ஷனைத் தவிர்க்கலாம்.

● வெந்நீருக்காக ஒரு பெரிய பிளாஸ்க்; மற்றபடி அவ்வப்போது காப்பி, டீ வாங்கி வர இன்னொரு பிளாஸ்க்.

● ஹார்லிக்ஸ், சர்க்கரை (ஸ்பூனுடன்)

● தண்ணீர் வைத்துக் கொள்ள ஜக், தம்ளர்கள்.

● குளியல் சோப், டவல்.

● துணி துவைக்கும் சோப்.

● டெட்டால்.

● தேங்காய் எண்ணெய், சீப்பு, முகம் பார்க்கும் கண்ணாடி.

● டூத் பேஸ்ட், பிரஷ்.

● ஹேர்பின், ஸ்டிக்கர் பொட்டு. (ஸ்டிக்கர் பொட்டை விரும்பாதவர்கள் குங்குமம் எடுத்துக் கொள்ளலாம்.)

● டார்ச் லைட்.

● கொசு விரட்டியின் புகை குழந்தைக்கு ஆகாமல் போகலாம் என்பதால் கொசு வலை.

● ஸ்பிரிங் பேட், பேனா.

● கைக் கடிகாரம்.

● பிளாஸ்டிக் (அ) அட்டை விசிறி (மின்சாரம் போனால் சமாளிக்க)

● குழந்தை பிறந்த செய்தியைத் தெரிவிக்க வேண்டியவர்களுடைய டெலிபோன் எண்கள், அட்ரஸ் பட்டியல், போஸ்ட் கார்டு, அதில் தடவி அனுப்ப மஞ்சள் பொடி.

● ஆயா மற்ற வேலைக்காரர்களுக்குத் தரச் சௌகரியமாய்ச் சில்லறை நோட்டுகள்.

மேற்கூறியவை எல்லாம் பொதுவானவை. இனி பிரசவித்த தாய்க்குத் தேவையானவை :

● பழைய நைட்டி (லேபர் அறையில் பயன்படுத்த)

● குழந்தைக்குப் பாலூட்ட வசதியாக முன்புறம் பட்டன் வைத்த நைட்டி.

● சானிடரி நாப்கின்கள்.

இனி பிறந்த குழந்தைக்கு :

● சுத்தமான, பழைய வேஷ்டியில் சதுரமாய் வெட்டிய துணித் துண்டுகள். (ஓரம் மடித்துத் தைத்து விட்டால் நல்லது) இவை சுமார் 20 தேவைப்படும்.

● குழந்தையின் மேல் போட, மெல்லிய காட்டன் புடவைகள் (நன்றாகத் துவைத்தவை)

● குழந்தைக்கு மேலே போர்த்த மெல்லிய வெள்ளைத் துண்டுகள் - இரண்டு.

● சிறிய கிண்ணமும், ஸ்பூனும் - குழந்தைக்குத் தண்ணீர் தர.

● குழந்தையைத் துடைக்க வெந்நீர் ஊற்றி வைக்க சௌகரியமாய் ஒரு பௌல்.

பிறந்த சில நாட்களில் குழந்தைக்குத் தேவையானவை :

● குளியல் சோப் அல்லது மாவு வகைகள்.

● பவுடர், பஃப்.

● ரப்பர் ஷீட்

● பஞ்சு.

● காதுகளில் அழுக்கு எடுக்க பட்ஸ்.

- பாரதிமௌலி



அரசன்

"இன்னா வாத்யாரே, ஒரே டல்லாக்கீறே?"

"அட சர்த்தான் போப்பா... நாமெல்லாம் பெரிய்ய சண்டியராங்காட்டியும்... பீஸ்தா!"

"வாத்யாரே! மெய்யாலுமே உனக்கு இன்னாவோ ஆயிப்பூட்ச்சு. அதான் இப்படிக் கீறே. இன்னாதான் நடந்துதுன்னு சொல்லேன்."

"அதான், இந்த மோகன்லாலு ஆக்ட் குடுத்துக்கீறாரே, அரசன் - அந்தப் படம் பார்த்தேன். அந்தப் பார்த்த பிறகுதான் இப்படி ஆய்டுச்சு. நாமெல்லாம் இன்னா சண்டியரு, சும்மா அரை பிளேடை வச்சுகினு கீசிடுவேன்.. கீசிடுவேன்னு டபாய்ச்சினு? இன்னாமோ பேர் சொன்னாங்களே... ஆங்.. தாதா... இருந்தா அது மாதிரி இருக்கணும்ப்பா."

"அது யாரு வாத்யாரே தாதா?"

"தாதான்னா அவங்க பேச்சல பேட்டைச் சண்டியருன்னு அர்த்தம். ஒருத்தரா? ரெண்டு பேரா? கத்தரிக்காயக் கூறுபோடறா மாதிரி பம்பாயைக் கூறுபோட்டுக்கினு, அவங்கவங்க பேட்டையிலக்கீற யாவாரிங்ககிட்டே பெயல்லாம் சும்மா தெரியாமால் வெட்டிகினு... இங்கே இன்னா கீது? சுத்த பேஜாரு பிடிச்ச பொயப்பு."

"முன்னேல்லாம் பொயக்கப் பட்டணம் வருவாங்க. இப்போ பம்பாய் பூட்ணாம் போலக் கீது."

"கரீட்டா சொன்னே. மோகன்லாலு அப்டிதான் பம்பாய் பூட்றாரு. அவரு மட்டுமில்ல. ஏகப்பட்ட சனம். அங்கே பூட்ட பின்னால பொயப்பு கிடைக்காம ஒரே பேஜாரு பட்றாங்க. அவங்கள அல்லாம் வச்சுப் படம் புட்சிருக்காங்க."

"ஸ்டோரி இன்னா வாத்யாரே?"

"ஒரு தாதா பம்பாய்க்காரரு. இன்னோர் தாதா முதலியார்னு நம்மூர்க்காரரு. ரெண்டு பேருக்கும் தக்ராறு. பம்பாய்க்கார தாதா முதலியாரை பணால் பண்ணிட்றாரு. அவ்ளோதான். முதலியார் கையில இருந்த பேட்டையிலும் பம்பாய்க்காரரு பூந்து லெஃப்ட்லயும் ரைட்லயுமா மால் வெட்ட ஆரம்பிச்சுட்றாரு. நம்ப மன்சங்க படற பேஜாரைப் பாத்துட்டு மோகன்லாலு எதுக்கப் போயி, பம்பாய்க்கார தாதா ஆளுங்க, அவரைப் புரட்டிப் புரட்டி எடுத்துடறாங்க."

"அப்றம்?"

"அப்றம் என்ன? தூங்கற சிங்கத்தை உசுப்பி விட்டா மாதிரி மோகன்லாலு கிளம்பிட்றாரு. முதலியாரு இருந்த இடத்துல இப்போ இவருதான் தாதா. அவ்ளோதான். ரெண்டு கோஷ்டிக்கும் யாரு யாரைக் க்ளோஸ் பண்றதுன்னு ஒரே போட்டி. ரத்தம் சும்மா கூவங் கணக்கா ஓடுது."

"மெய்யாலுமா? படம் நூச்சுடுமா?"

"பின்னே? சும்மானாலுங்காட்டியுமா சொல்றேன்?"

"அதுக்கில்லே வாத்யாரே... படம்னா பாட்டு, டான்ஸுன்னு இதெல்லாம் இல்லாமயா?"

"ஓ... நாலு பாட்டு கீதே! ரொம்ப நல்லா வங்கீதே. மியூஜிக் செஞ்சவரு பேரு.. ஆங்... ரவீந்திரன். நல்லா செஞ்சுக்கீறாரு. அப்றம் இந்த... படம் புட்சவரு... அதான்பா, இந்த காமெராமேன்... அவரும் படா ஜோக்கா புட்சுக்கீறாருப்பா. அதுவும் இந்தப் புள்ளயார் சதுர்த்தி விழா இல்லை..! அந்த ஊர்வலக் கூட்டத்துல காமெரா பூந்து பூந்து வருது பாரு. சும்மா கில்லாடி கணக்கா..."

"ஆக்ட் குடுத்துக்கீறதெல்லாம் எப்டி?"

"அல்லாருமே மெய்யாலுமே நடக்கற மாதிரி ஆக்ட் குடுக்கறாங்க. அதுலயும் இந்த மோகன்லாலு கீறாரே... ஒரே டக்கர். கீதா நடிப்பும் ரொம்ப ரொம்ப அம்சம்."

"டயலாக்லாம்?"

"தெசாலும் நடக்கற சமாசாரம்லாம் டயலாக்ல புட்டுப் புட்டு வக்கிறாங்க. இன்னா ஒண்ணு... இந்திக்காரரு இந்தில பேசறாரு. தெலுங்குப் பொண்ணு தெலுங்குல பேசுது. தமிழ்க்காரரு தமிழ்ல பேசறாரு. படம் நூச்சுடும் இப்டிதான். இதான் கொஞ்சம் பேஜாராக்கீது."

(படம் பார்த்த இரண்டு ரசிகர்கள் இப்படிப் பேசிக் கொண்டு, தங்கள் ரசிகத் தனத்தை அதிகப்படுத்தினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை! இந்த அளவுக்கு வன்முறையைப் படம்பிடிக்க வேண்டுமா?)

- சி. ஆர். கே.

சிவகாமியின் சபதம்

பூர்வ கதை

மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் அரசாட்சியில் பல்லவ சாம்ராஜ்யம் உன்னத நிலைமையை அடைகிறது. பொருட் செல்வத்திலும் கலைச் செல்வத்திலும் பல்லவ ராஜ்யத்துக்கு இணையில்லை என்ற புகழ் பரவுகிறது. காஞ்சியின் சிறப்பைப் பற்றிக் கவி பாரவியின் வர்ணனையைக் கேட்ட வாதாபி சக்கரவர்த்தியான புலிகேசி பொறாமை கொள்கிறான். காஞ்சியை வென்று தன் வராகக் கொடியை அதன் மீது நாட்டுவதென்று தீர்மானிக்கிறான்.

புலிகேசி பல மாதங்கள் காஞ்சியை முற்றுகையிட்டும் அதைப் பணியவைக்க முடியவில்லை. மகேந்திர பல்லவருடைய முன்னேற்பாட்டினால் முற்றுகையிட்ட வாதாபிப் படைகளுக்குப் போதிய உணவு கிடைக்காமற் போகிறது. ஆகவே, காஞ்சி முற்றுகையை நிறுத்தி, மகேந்திர பல்லவருடன் சமாதானம் செய்து கொள்வதென்று புலிகேசி தீர்மானிக்கிறான். பெருங்குணம் படைத்த மகேந்திரவர்மர் புலிகேசியின் விருப்பத்தை அங்கீகரித்து, தம் அழகிய தலைநகரை வந்து பார்வையிடும்படி அழைக்கிறார்.

புலிகேசிக்கு வரவேற்பு அளிப்பதை விரும்பாத குமார சக்கரவர்த்தி மாமல்லர், பாண்டியன் படையோடு சண்டையிடத் தெற்கே போய் விடுகிறார். மகேந்திர வர்மர் புலிகேசிக்குப் பிரமாத வரவேற்பு அளித்ததுடன், பல்லவ ராஜ்யத்திலேயே நடனக் கலையில் புகழ்பெற்றவளான ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமியைப் புலிகேசியின் முன்னிலையில் நாட்டியமாட ஏற்பாடு செய்கிறார்.

மாமல்ல நரசிம்மனைக் காதலித்த சிவகாமி, தன் காதலன் காஞ்சியில் இல்லையென்பதை அறிகிறாள். அவர் தன்னைத் தேடிக் கொண்டு தான் தங்கியிருந்த கிராமத்துக்குப் போகக்கூடும் என்று எண்ணி, இரகசிய சுரங்க வழியாகக் காஞ்சியை விட்டு வெளியேறுகிறாள்.

இதற்குள், புலிகேசி காஞ்சியிலிருந்து வாதாபியை நோக்கிக் கிளம்புகிறான். காஞ்சியின் செல்வ வளத்தைக் கண்டு ஏற்பட்ட பொறாமையானது அவனுக்கு அளவில்லாத ஆத்திரத்தை ஊட்டுகின்றது. போகும் வழியிலுள்ள பல்லவ நாட்டுக் கிராமங்களைக் கொளுத்தும்படியும் ஜனங்களைச் சிறைப்பிடிக்கும்படியும் உத்தர விடுகிறான். எதிர்பாராதவிதமாக, கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளிப்பட்ட சிவகாமி வாதாபிப் படைகளின் கையில் சிக்குகிறாள்.

வாதாபி திரும்பிய புலிகேசி, மகேந்திரனைத் தான் போரில் புறங்கண்டு திரும்பியதாகப் பறைசாற்றுகிறான். தமிழகத்திலிருந்து சிறைப் பிடித்து வந்தவர்களைச் சாட்டையால் அடித்துத் துன்புறுத்தியதுமின்றி, சிவகாமியை நாற்சந்தியில் நாட்டியமாடச் செய்து அவமானப்படுத்துகிறான்.

மாமல்லரும் அவருடைய தோழன் பரஞ்சோதியும் வாதாபிக்கு மாறுவேடம் பூண்டு வருகிறார்கள். சிவகாமியை இரகசியமாகச் சந்தித்துத் தம்முடன் வரும்படி மாமல்லர் அழைக்கிறார். அப்பொழுது சிவகாமி தான் செய்துள்ள சபதத்தை வெளியிடுகிறாள். வாதாபி நகரம் பற்றி எரிந்து சுடுகாடாகும் காட்சியைக் கண்ட பிறகுதான் வாதாபியை விட்டுக் கிளம்புவேன் என்று உறுதியாகச் சொல்கிறாள். மாமல்லர் அவளது சபதத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்து விட்டுத் திரும்புகிறார்.

மகேந்திரர் இறந்து மாமல்லர் பட்டத்துக்கு வருகிறார். இறக்கும் தறுவாயில் தந்தை இட்ட கட்டளைப்படி மாமல்லர் பாண்டியகுமாரியை மணந்து கொள்கிறார். இரண்டு குழந்தைகளையும் அடைகிறார்.

அமரர் கல்கி

வாதாபி படையெடுப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் பூர்த்தியாவதற்குள் ஒன்பது வருஷங்கள் சென்று விடுகின்றன.

வாதாபிப் போருக்குப் பெரும்படை கிளம்புகிறது. மாமல்லருடன் செல்லும் பல சிற்றரசர்களோடு சோழ குலத்தின் பிரதிநிதியாக விளங்கும் செம்பியன்வளவனும் புறப்படுகிறான். தனது புதல்வி மங்கையர்க்கரசியைக் காலஞ்சென்ற மகேந்திர பல்லவரின் மனைவி புவனமகாதேவியிடம் ஒப்படைத்து விட்டுச் செல்லுகிறான்.

மாமல்லரின் பட்டமகிஷியான வானமாதேவியின் தம்பி நெடுமாறன், மாமல்லரோடு வாதாபி செல்வதற்காகப் படையுடன் வந்தவன், தனக்கு தேக அசௌக்கியம் என்று சொல்லி வராக நதிக்கரையிலேயே தங்கி விடுகிறான். தேக அசௌக்கியம் குணமானதும் வந்து சேர்ந்து கொள்வதாகச் சேதி அனுப்புகிறான். சமணர்களுடன் அவனுக்கிருந்த தொடர்பு காரணமாக, அவனால் காஞ்சிக்கு ஏதேனும் ஆபத்து வரலாமென்றும் அப்படி வந்தால் அதைத் தடுத்து நிறுத்துமாறும் பொறுப்பைத் தமது பட்டமகிஷியிடம் ஒப்படைக்கிறார் மாமல்லர். வானமாதேவியும் அப்படியொரு நிலை ஏற்பட்டால், தானே தனது தம்பியைக் கத்தியால் குத்தியோ அல்லது விஷம் கொடுத்தோ கொன்று விடுவதாக உறுதியளித்து மாமல்லரை வழியனுப்புகிறாள்.

சமணர்கள் தங்கள் சூழ்ச்சியால் மாமல்லருக்கு எதிராக நெடுமாறனைத் திசை திருப்புவதையறிந்த ஒற்றர் தலைவன் , சத்ருக்னன், வானமாதேவியிடம் வந்து சேதி சொல்லுகிறான். மாமல்லருக்குக் கொடுத்த வாக்குப்படி, நெடுமாறனைக் கொல்வதற்குப் புவனமகா தேவியிடம் அனுமதி கேட்கிறாள் வானமாதேவி.

அவர்களின் சம்பாஷணையை ஒற்றுக் கேட்ட மங்கையர்க்கரசி, தனது உள்ளங்கவர்ந்த நெடுமாறனைச் சந்தித்து, அவனுக்கு வானமாதேவியால் ஏற்படப் போகும் ஆபத்தை எடுத்துக் கூறி, உடனடியாக அந்த அரண்மனையை விட்டுப் போய் விடும்படி எச்சரிக்கிறாள்.

பதினெட்டாம் அத்தியாயம்

தமக்கையும் தம்பியும்

அன்று சூரியாஸ்தமனம் ஆன பிறகு வானமாதேவி தன்னுடைய விலை மதிப்பில்லா ஆபரணங்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த அறையில் வெள்ளிப் பெட்டிகளையும் தங்கப் பெட்டிகளையும் திறந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று, "அக்கா! என்ன தேடுகிறாய்?" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்குத் தெரியாமல், ஓசை உண்டாக்காமல், அந்த அறைக்குள் நெடுமாறன் பிரவேசித்திருந்தான்.

அவனைக் கண்டதும் வானமாதேவியின் திகைப்பு அதிகமாயிற்று.

"அக்கா! என்ன தேடுகிறாய்?" என்று நெடுமாறன் மறுபடியும் கேட்டுவிட்டு உற்றுப் பார்த்தான்.

மறுமொழி சொல்ல முடியாமல் வானமாதேவி கொஞ்சம் தடுமாறிவிட்டு, "தம்பி! நீ எப்போது இங்கு வந்தாய்?" என்றாள்.

"நான் வந்து சிறிது நேரமாயிற்று. ஒரு வேளை இந்தக் கத்தியைத்தான் தேடுகிறாயோ என்று கேட்பதற்காக வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே பின்புறமாக மறைத்து வைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு கத்தியை நெடுமாறன் நீட்டினான்.

வானமாதேவி அந்தக் கத்தியை வெறித்துப் பார்த்தவாறு நின்றாள். அவளுடைய முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் துளித்து நின்றன.

"அக்கா! என்னைக் கத்தியால் குத்திக் கொல்வதென்று முடிவாகத் தீர்மானித்திருந்தாயானால், இதை வாங்கிக் கொண்டு இப்போதே அந்தக் காரியத்தைச் செய்துவிடு! வீரத்துக்குப் பெயர்போன பாண்டிய குலத்திலே பிறந்து, பல்லவ குலத்திலே வாழ்க்கைப்பட்ட வானமாதேவி தன் அருமைச் சகோதரனைத் தூங்கும்போது கத்தியால் குத்திக் கொல்லுவது அழகாயிராது. பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் அதனால் இழுக்கு உண்டாகும்!"

பரிகாசமும் பரிதாபமும் கலந்த குரலில் நெடுமாறன் கூறிய மேற்படி வார்த்தைகளைக் கேட்ட வானமாதேவியின் உள்ளம் என்ன பாடுபட்டது என்பதைச் சொல்லி முடியாது. ஒரு பக்கம் அவமானமும் ஆத்திரமும் அவளைப் பிடுங்கித் தின்றன; மற்றொரு பக்கம் கோபமும் ஆத்திரமும் பொங்கின.

எவ்வளவோ முயன்றும், அவளுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. நெடுமாறன் மேலும் கூறினான் :

"அல்லது ஒருவேளை விஷங் கொடுத்து என்னைக் கொல்லுவதாகத் தீர்



மாவித்திருந்தாயானால், கொடுக்கிற விஷம் நிச்சயமாய்க் கொல்லக்கூடியதுதானா என்று தெரிந்து கொண்டு கொடு. நீ எவ்வளவோ சிரமப்பட்டு வாங்கி வைத்திருந்த விஷத்தை அரண்மனைத் தோட்டத்தில் உள்ள மான்குட்டிக்குக் கொடுத்துப் பார்த்தேன். அது உயிரை விடும் வழியாகக் காணப்படவில்லை. முன்னை விட அதிகமாகவே துள்ளி விளையாடுகிறது!''

நெடுமாறனுடைய வார்த்தை ஒவ்வொன்றும் விஷந்தோய்ந்த அம்பைப் போல் வானமாதேவியின் நெஞ்சில் பாய்ந்து அவளைக் கொல்லாமல் கொன்றது.

அந்த வேதனையை மேலும் பொறுக்க முடியாதவளாய், தயங்கித் தயங்கி, ''தம்பி! இதெல்லாம் என்ன பேச்சு? நானாவது உன்னைக் கொல்லவாவது?....'' என்றாள் வானமாதேவி.

''அக்கா! பல்லவ குலத்தில் வாழ்க்கைப்பட்டதற்குப் பொய்யும் புனைசுருட்டும் கற்றுக் கொண்டு விட்டாயா? நேற்றிரவு புவன மகாதேவியிடம் யோசனை கேட்கப் போனாயே? அவர் இந்த யோசனைதான் சொல்லிக் கொடுத்தாரா?'' என்றான் நெடுமாறன்.

வானமாதேவிக்கு அவளுடைய ஆத்திரத்தையெல்லாம் பிரயோகிக்க இப்போது ஒரு வழி கிடைத்தது.

கடுமை நிறைந்த குரலில், ''நான் நினைத்தபடியே ஆயிற்று. இதையெல்லாம் உனக்குச் சொன்னது அந்தச் சோழ நாட்டுப் பெண்தானே?'' என்றாள்.

அந்தப் பேதைப் பெண் மீது உன் ஆத்திரத்தைக் காட்ட வேண்டாம், அக்கா! அவள் அதற்குப் பாத்திரமில்லாதவள். சற்று முன்னால் அவள் என்னிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தது உண்மைதான். ஆனால் இந்தக் கத்தி காணாமற்போனது இன்றைக்கல்லவே? இரண்டு நாளாக இதை நீ தேடுகிறாய் அல்லவா?''

வானமாதேவி மீண்டும் சிறிது நேரம் திகைத்து நின்றுவிட்டு, ''சமண சித்தர்களால் அறிய முடியாதது ஒன்றுமில்லை போலிருக்கிறது!'' என்றாள்.

''ஆனால், உன்னுடைய மனத்திலுள்ளதை அறிவதற்குச் சித்தர்களின் சக்தி தேவையில்லை, அக்கா! பாவம்! நீ கள்ளங் கபடு அறியாதவள். வள்ளுவர் பெருமான்,

''அடுத்தது காட்டும் பளிங்கு போல்
நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்''

என்று சொன்னது உன்னைப் பற்றியே சொன்னதாகத் தோன்றுகிறது. உன் மனத்திலுள்ள எண்ணத்தை உன்னுடைய முகமே எனக்குக் காட்டிவிட்டது. மேலும் நான் கண் குருடாகவும், காது செவிடாகவும் பிறக்கவில்லையே? இந்த அரண்மனைக்கு வந்ததிலிருந்து என் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக் கொண்டுதானிருக்கிறேன். உன் இடுப்பிலே இந்தக் கத்தியை நீ சதா செருகி வைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தேன். இதை நீ ஒரு தடவை ஞாபக மறதியாகத் தரையில் வைத்தாய். உனக்குத் தெரியாமல் இதை எடுத்துக் கொள்வதில் எனக்கு எவ்விதச் சிரமும் ஏற்படவில்லை....''

''ஆகா! எப்பேர்ப்பட்ட அசடு நான்?'' என்று முணுமுணுத்தாள் வானமாதேவி.

''நீ அசடு இல்லை, அக்கா! ஆனால் இந்தக் காரியம் செய்வதற்கு உன் மனம்

இடம் கொடுக்கவில்லை. அதனால்தான் மனத்திலுள்ளதை மறைக்கத் தெரியாமல் பைத்தியம் பிடித்தவன் போல் அலைந்தாய்!... ஆஹா! பத்து வருஷத்துக்கு முன்பு நீயும் நானும் மதுரை அரண்மனையில் இருந்தபோது, என் பேரில் நீ எவ்வளவு பிரியமாயிருந்தாய்? அந்த நாளை நினைத்தாலே எனக்கு மெய்சிலிர்க்கிறது. நான் விவரமறியாக் குழந்தையாயிருந்தபோதே, என் அன்னை இறந்து போனாள். பிறகு அரண்மனையில் சின்னராணி வைத்ததே சட்டமாயிருந்தது. தாயின் அன்பை அறியாத எனக்கு நீயே தமக்கையும் தாயுமாக இருந்து வந்தாய். வெகு காலம் வரையில் நீ என் சொந்தத் தமக்கையென்றே எண்ணிக் கொண்டிருந்தேன். உன் கலியாணத்தின் போதுதான், நீ என் மாற்றாந்தாயின் மகள் என்று அறிந்து கொண்டேன்.''

வானமாதேவியின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பொழியலாயிற்று.

''நெடுமாறா! அதையெல்லாம் இப்போது எதற்காக நினைவூட்டுகிறாய்?'' என்று விம்மலுக்கிடையே வானமாதேவி கேட்டாள்.

''அவ்வளவு அன்பாக என்னிடம் இருந்தாயே? அப்படிப்பட்டவள் எவ்வாறு இவ்வளவு கொடூர சித்தமுடையவள் ஆனாய்? என்னைக் கத்தியால் குத்தியோ விஷங் கொடுத்தோ கொல்லுவதற்கு எவ்வாறு துணிந்தாய்?....'' என்றான் நெடுமாறன்.

''தம்பி! என்னை மன்னித்துவிடு. அவர் யுத்தத்துக்குப் புறப்படும்போது இவ்விடத்துப் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து விட்டுச் சென்றார். உன்னால் ஏதாவது இங்கே அபாயம் நேரலாம் என்று எச்சரித்தார். அப்படி நேராமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குக் கொடுத்தேன். ஆனால் அவருக்கு வாக்குக் கொடுத்தபோது நீ இவ்விதம் சதி செய்யப் போகிறாய் என்று கனவிலும் கருதவில்லை!'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் கண்ணீர்விடத் தொடங்கினாள்.

''அக்கா! நீ கண்ணீர் விடுவதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. நான் என்ன சதி செய்தேன் என்பது எனக்கே தெரியவில்லை. நீ உன் பதிக்கு என்ன வாக்குக் கொடுத்தாய் என்பதையும் நான் அறியேன். ஒருவேளை என்னைக் கத்தியால் குத்திக் கொன்று விடுவதாக வாக்குக் கொடுத்திருந்தாயானால், அதைப் பற்றிக் கவலைப்படாதே! இதோ என் மார்பைக் காட்டச் சித்தமாயிருக்கிறேன்; உன் வாக்கை நிறைவேற்று!'' என்று சொல்லிய வண்ணம் நெடுமாறன் கத்தியை வானமாதேவியின் கையில் கொடுப்பதற்காக நீட்டிக் கொண்டே, தன் மார்பையும் காட்டினான்.

''தம்பி! பெருந் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என்னோடு ஏன் விளையாடுகிறாய்? நீ என்ன உத்தேசத்தோடு இப்போது வந்தாயோ, அதைச் சொல்லு!'' என்றாள் சக்கரவர்த்தினி.

''அக்கா! நான் விளையாடவில்லை. உண்மையாகவே சொல்லுகிறேன். உன்னைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கு எவ்வளவோ கர்வமாயிருக்கிறது. பாண்டியர் குலத்தில் பிறந்த பெண் இவ்வளவு பதிபக்தியுடையவளாயிருப்பது மிகப் பொருத்தமானதுதான். பாண்டியர் குல தெய்வமான மீனாக்ஷி தேவி, பெற்ற தகப்பனான தக்ஷனை நிராகரித்து விட்டுச் சிவபெருமானே கதி என்று வந்து விடவில்லையா! பிறந்த வீட்டாரால் புருஷனுக்கு ஏதேனும் கேடு நேர்வதாயிருந்தால், புருஷனுடைய நன்மைக்கான காரியத்தைத் திடமாகச் செய்வதுதான் பாண்டியகுலப் பெண்களின் மரபு. ஆனால் என்னால் என்ன கேடு வரும் என்று நீ சந்தேகப்பட்டாய்? எந்த விதத்தில் நான் உன்னுடைய மன வெறுப்புக்குப் பாத்திரமானேன்? அதை மட்டும் சொல்லிவிட்டு இந்தக்கத்தியை என்மார்பில் பாய்ச்சி விடு!'' என்றான் நெடுமாறன்.

''தம்பி என் வாயினால் அதைச் சொல்லியே தீரவேண்டுமா? உன்னோடு அழைத்து வந்திருக்கும் பாண்டிய சைனியத்தைக் கொண்டு காஞ்சி நகரையும் பல்லவ சிம்மாசனத்தையும் கைப்பற்ற வேண்டுமென்று நீ சதி செய்யவில்லையா?''

''இம்மாதிரி துரோக சிந்தை எனக்கு ஏற்பட்டிருப்பதாக உனக்கு ஏன் சந்தேகம் வந்தது? யார் சொன்னார்கள், அக்கா!''

''யார் சொல்லவேண்டும்! உன் முகத் தோற்றம், நடவடிக்கை பேச்சு எல்லாம் சந்தேகத்தை உண்டாக்கின. 'வாதாபிக்குப் போவது சந்தேகம்' என்று சொன்னாய், 'இந்த அரண்மனையிலேயே அடைக்கலந் தந்தால் இங்கேயே இருந்து விடுகிறேன்' என்று கூறினாய்; எப்போது பார்த்தாலும் ஏதோ சிந்தனையில் உள்ளவன் போல் காணப்பட்டாய். இதையெல்லாம் தவிர நள்ளிரவில் சமணசித்தர் கூட்டத்துக்குப் போய் வந்தாய். சமணர்களுடைய சூழ்ச்சியில் நீ அகப்பட்டுக் கொண்ட பிறகு நான் சந்தேகப்படுவதற்கு இன்னும் என்ன வேண்டும்?''

''அக்கா! வீணாகச் சமணர்களின் மீது பழி சொல்ல வேண்டாம். அவர்கள் வருங் கால நிகழ்ச்சிகள் சிலவற்றை எனக்குக் காட்டியது உண்மையே. ஆனால், அவற்றிலிருந்து நான் முடிவு செய்தது நீ நினைத்ததற்கு நேர் மாறானது. மாமல்லச் சக்கரவர்த்தி இங்கு இல்லாத சமயம் பார்த்து அவருடைய தலைநகரையும் ராஜ்யத்தையும் அபகரித்துக் கொள்ள நான் என்ன

வில்லை. 'மாமா! மாமா! என்று சொல்லிக் கொண்டு என்னை ஓயாமல் சுற்றித் திரியும் குழந்தை மகேந்திரனுக்குத் துரோகம் செய்யவும் நான் எண்ணவில்லை. ஆனால் இந்த அரண்மனைக்கு வந்தது முதலாக எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேனென்றால், எனக்கு நியாயமாக உரிய பாண்டிய ராஜ்யத்தையும் துறந்து, உலக வாழ்க்கையையும் துறந்து திகம்பர சமணனாகி விடலாமா என்றுதான்!....''

''தம்பி! இது என்ன விபரீத யோசனை?'' என்று வானமாதேவி திடுக்கிட்டுக் கேட்டாள்.

''எது விபரீத யோசனை, அக்கா! அறிவுள்ள மனிதர்களைப் புலிகளாகவும் ஓநாய்களாகவும் ஆக்கி, லட்சக் கணக்கான ஜனங்கள் ஒருவரையொருவர் கொன்று மடிவதற்குக் காரணமாயிருக்கும் இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்வது விபரீத யோசனையா? அல்லது புழு பூச்சிகளின் உயிருக்குக்கூட ஊறு செய்யாத ஜீவ காருண்ய மதத்தைச் சேர்ந்து கொல்லா விரதம் மேற்கொண்டு வாழ்வது விபரீத யோசனையா?''

'தம்பி! நீ மிகப்படித்தவன். உன்னோடு தத்துவ விசாரணை செய்வதற்கு வேண்டிய தகுதியற்றவள் நான். ஆயினும் நீ சமண சந்நியாசி ஆகிற யோசனை விபரீதமானதுதான். அதை நினைக்கும் போதே எனக்கு என்னவோ செய்கிறது!''

''என்னை நீ கத்தியால் குத்திக் கொன்றாலும் கொல்லுவாய். ஆனால் நான் திகம்பர சமணன் ஆவதை மட்டும் விரும்ப மாட்டாய்! போனால் போகட்டும். அந்தக் கவலை உனக்கு வேண்டாம். நான் திகம்பர சமணன் ஆகப்போவதில்லை. அந்த யோசனையை நேற்றுச் சாயங்காலத்தோடு கைவிட்டு விட்டேன்....''

''பின்னே, என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய், தம்பி!'' என்று அடங்காத ஆர்வத்துடன் பல்லவ சக்கரவர்த்தினி கேட்டாள்.

''நாளைய தினம் மதுரைக்குத் திரும்பிப் போகிறேன். அக்கா! ஒருவேளை எனக்கு அந்தச் சிரமம் கொடுக்காமல் நீ என்னைக் கொன்று விடுவதாயிருந்தால்...'' என்று கூறி மீண்டும் தன் கையிலிருந்த கத்தியை நீட்டினான்.

வானமாதேவி அவன் அருகில் வந்து அந்தக் கத்தியைப் பிடுங்கித் தூர எறிந்தாள். பிறகு, நெடுமாறனுடைய இருகரங்களையும் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் ததும்ப, குரல் தழதழக்க, ''நெடுமாறா! இந்தப் பைத்தியக்காரியைத் தண்டித்தது போதும், இனிமேல் அந்தப் பேச்சை எடுக்காதே! உன்பேரில் சந்தேகப்பட்டது பெரிய குற்றந்தான். என்னை மன்னித்துவிடு!'' என்றாள்.

''உனக்கு இவ்வளவு மனக்கலக்கத்தை அளித்ததற்காக நான் தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். என்னை மனப்பூர்வமாக மன்னித்து ஆசீர்வாதம் செய், அக்கா!'' என்றான் நெடுமாறன்.

''கடவுள் அருளால் உனக்குச் சகல மங்களங்களும் உண்டாகட்டும். சீக்கிரத்தில் உனக்குத் தகுந்த பத்தினியை மணந்து கொண்டு நெடுங்காலம் பாண்டிய சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய்....''

''அக்கா! எனக்குத் தகுந்த பத்தினியைத் தேடிக் கொண்டுதான் நான் காஞ்சி நகருக்கு வந்தேன். அவளைப் பார்ப்பதற்காகவே இத்தனை நாளும் இங்கே தாமதித்தேன். நேற்றுச் சாயங்காலம் அவளை உன்னுடைய அரண்மனைத் தோட்டத்தில் சந்தித்துப் பேசிய பிறகுதான் என் உள்ளம் தெளிவடைந்தது. உன் ஆசீர்வாதம் பலித்து நான் பாண்டிய சிம்மாசனம் ஏறினால் அந்தப் பெண்தான் என் பட்டமகிஷியாயிருப்பாள்!'' என்றான் நெடுமாறன்.

(தொடரும்)



காக்கைச் சிறகு

பிரபஞ்சன்

'**கா**க்கைச் சிறகு' என்ற பெயரில் டைரக்டர் ரெட்டி படம் பண்ணப் பூஜை போட்ட அன்றுதான் கிருஷ்ணமூர்த்தி அவரிடம் அசோசியேட்டாகச் சேர்ந்தான்.

ரெட்டிக்கு வயசு நாற்பத்து ஐந்து என்று சொன்னார்கள். சினிமாவில் சுமார் இருபது வருஷ அனுபவங்கள் இருந்தன. கிளாப் அடித்து, டிராலி தள்ளி, டைரக்டர் ஆனவர். சொந்தத் தயாரிப்பில் வளர்ந்த மனிதர். இந்த இருபது ஆண்டு காலத்திலும், அவர் கொடுத்தது நாலு படங்கள்தான். என்றாலும் என்ன, இரண்டு படங்கள், மாநில மொழிகளில் சிறந்த படமாகத் தேர்வு பெற்றன. தமிழ்ச் சினிமா வரலாறு, ரெட்டியைத் தொடாமல் கடக்க முடியாது என்று அறிவாளர்கள் சொல்கிறது பொய்யில்லை. 'காக்கைச் சிறகு' ரெட்டியின் ஐந்தாவது படம்.

''மூர்த்தி! வழக்கம் போலவே, இதுவும் என் சொந்தப் படம்தான். புரொடியூசருக்குக் கதை சொல்றது, எவ்வளவு அலுப்பு தெரியுமா? 'ரெட்டி படம் பண்ணால், அது ஆர்ட் பிலிமாகத்தான் இருக்கும், அவார்டு வாங்கும். ஆனால் ஜனங்கள் ரசிக்கிற மாதிரி படம் பண்ண மாட்டார்' அப்படீன்னு என்னைப் பற்றி ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டிருக்காங்க. அதைப் பொய்யாக்கணும். படமும் நல்லா இருக்கணும். நல்லாவும் ஓடணும். சரிதானா? நான் ஏன் இந்தப் புரொடியூசர்களுக்குக் கதை சொல்றது இல்லை தெரியுமா? நாம்ப வாழ்க்கையிலேந்து கதையை எடுக்கறோம். அவன் சினிமாவிலேர்ந்தே சினிமா எடும்பான். அப்புறம் இந்த டிஸ்டிரிபூட்டர்ஸ். அவன், ஒரு கதையை மனசுக்குள்ளே வச்சிண்டு, நம்ப படத்தில அதைத் தேடுவான். வேணாம். நாலு படம். என் திருப்திக்குப் பண்ணேன். இதையும் அப்படியே பண்ணிப்பிடுவமே.. என்ன சொல்றே?''

மூர்த்தி, ரெட்டியின் மூர்க்கத்தை வெகுவாக ரசித்தான்.

''அப்படியே பண்ணிப்பிடலாம், சார். இப்போ பண்ணப் போற சப்ஜெக்ட் நிச்சயம் உங்களுக்குப் புகழையும் பணத்தையும் தரும்'' என்று உண்மையாகவே நினைத்துச் சொன்னான்.

''கேஷ் ரெடி மூர்த்தி. பாதிப் படத்துக்குப் பணம் புரட்டிட்டேன். இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே முழுப் பணமும் வந்திடும். பூஜை போட்டுடலாம். ஒரு நாளைச் சொல்லு.''

ரெட்டி, பூஜை போடுவதும் வித்தியாசமாகத்தான் இருக்கும். இருக்கிற அத்தனை சாமி படங்களையும் வைத்து இலை போட்டுப் படைக்கிற வழக்கம் அவருக்கு இல்லை. படம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக் கலைஞர்கள், நடிக நடிகையர்கள் அனைவரையும் அழைத்து, சம்பள அட்வான்ஸ் தருவது. எல்லோரும் திருப்தியாகச் சாப்பிடுவது. கலைந்து செல்வது என்பதே அவர் பூஜை.

பூஜைக்கு முதல் நாள் ரெட்டியும் மூர்த்தியும்தான் அமர்ந்து சம்பள முன் பணத்தைக் கவரில் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ராஜுவுக்கு எவ்வளவு போடலாம்?'' என்றான் மூர்த்தி.

''ஹீரோ. அத்தோடு நம்ம பையன். நான் வளர்த்த பையன். ஒரு லட்சம் போடேன்.''

''ஒரு லட்சமா? பெரிய தொகையா இருக்கே, சார். இருக்கிற பத்து லட்சத்தில, அஞ்சுக்கு மேல அட்வான்சுக்குப் போயிடும், சார். அப்புறம் கையில, மீறது அஞ்சுதான். ஒருவேளை, வெளியேர்ந்து பணம் கிடைக்க 'டிலே' ஆச்சுன்னா, படம் ஷூட்டிங் நின்னுடுமே? அத்தோட, நிலம் வித்த பணம், சார். சொத்தை வித்துப் படம் எடுக்கிறப்போ, கொஞ்சம் நிதானமா இருக்கறது, நல்லதுன்னு படுது. அப்புறம் உங்க இஷ்டம்.''

ரெட்டி, சிகரெட் புகையை வழிய விட்டுக் கொண்டு சிரித்தார். இருமல் வந்தது. இருமிக் கொண்டே சொன்னார்.

''அது வந்து மூர்த்தி. அந்தப் பையன், தி.நகர்லே ஏதோ வீடு வாங்கியிருக்கானாம். பணத்துக்குச் சிரமப்படறதாக் கேள்விப்பட்டேன். இந்த நேரத்தில அது உபயோகமா இருக்குமே. தவிரவும், எப்படியும் கொடுக்க வேண்டிய பணம்தானே. அதை எப்பக் கொடுத்தா, என்ன?''

ரெட்டியின் வழக்கம் இது. அவர் படத்-

தில் வேலை செய்கிறவர்களுக்கு அட்வான்சாகப் பாதிச் சம்பளமும், படம் முடிந்து ரிலீஸ் ஆவதற்குள் சம்பளத்துக்கு மேலே ஒரு தொகையும் கிடைத்திருக்கும் என்பது எல்லோரும் அறிந்த சங்கதிதான்.

பூஜைக்கு, ராஜன் வந்திருந்தான். புதுசாய் வாங்கிய காரை டைரக்டருக்குக் காட்டி அவர் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டான். அப்போதுதான் இங்கிலாந்துக்குப் போய் ஆடை அலங்காரம் பற்றிப் பயிற்சி எடுத்துக் கொண்டு தாயகம் திரும்பியிருந்த மனைவி ரூபாவையும் ராஜன் அழைத்து வந்திருந்தான். ஒரு சினிமாவுக்கு, அதன் பாத்திரங்கள் பயன்படுத்தும் சரியான ஆடை அலங்காரங்கள், வகிக்கும் முக்கியத்துவம் பற்றி ரூபா எடுத்துச் சொன்னாள். ஒரு மேசையைச் சுற்றி இருந்த நான்கு நாற்காலியில், மூர்த்தி, டைரக்டர், ராஜன், ரூபா ஆகியோர் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, ரூபா இதைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''அதிலே என்ன சந்தேகம், ரூபா? ஒரு வரலாற்றுக் காலகட்டப் படத்தைப் பாத்திரங்களின் ஆடைகள்தானே தீர்மானிக்கிறது. அதோடு, பாத்திரத்தின் 'வர்க்கத்தை'யும் உடை சொல்லி விடுமே. நம் தேசத்தில் தான், அடிமட்ட வர்க்கத்துப் பாத்திரம், நைட்-சூட்டில் தூங்கி, தலை கலையாமல் எழுந்து வரும் அதிசயம் நடக்கும்...'' என்று டைரக்டர் சொன்னதற்கு, அனைவரும் சிரித்தார்கள்.

''மிஸஸ் ரூபா.. இந்த என் படத்தில், நீங்கள் காஸ்டியூமராக எனக்கு அசிஸ்ட் பண்ணுங்களேன். எனக்கு நீங்கள் ரொம்பவும் உதவியாய் இருப்பீர்கள்'' என்று ரெட்டி, ரூபாவைக் கேட்டுக் கொண்டார்.

''ஓ.. ஷ்யூர்... கசக்குமா என்ன? உங்களோடு வேலை செய்வது எனக்கு ஓர் அங்கீகாரம் அல்லவா?'' என்று தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டாள் ரூபா.

சென்னை - ஆந்திரா பாதையில், சினிமாக்காரர்களால் அதிகம் அசிங்கப் படாத கிராமமாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஷூட்டிங்கைத் தொடங்கினார் ரெட்டி. சென்னைக்கும், அக் கிராமத்துக்கும் இரண்டு மணியே பயண நேரமாக இருந்த படியாலும், அங்கு தங்குவதற்குப் பெரிய ஹோட்டல்கள் இல்லாதபடியாலும், முக்கிய கலைஞர்கள் தினம் சென்னையிலிருந்தே வந்து போவது என்று முடிவாயிற்று. கிராமத்தின் பெரியதனக்காரராக இருந்த சேர்வைக்காரர், ரெட்டிக்கு உதவ முன்வந்தார். அவர் துணையுடன் ஆள் இல்லாத ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, ரெட்டியும், மூர்த்தியும் கிராமத்திலேயே தங்கினார்கள்.



எடுக்கப் போகும் 'சீன்களை' மனதுக்குள் உருவாக்கிக் கொண்டும், சர்ச்சை செய்து கொண்டும் சந்தோஷமாக இருந்தார் ரெட்டி. டென்ஷன், ஓடிச் சாடுதல், மூளையைக் கசக்கிக் கொள்ளுதல் எதுவும் இருக்கக் கூடாது, அவருக்கு. பென்சில் சீவுதல் போல், சினிமாவும் சந்தோஷமாகவும் வருவாகவும் இருக்க வேண்டும்.

படப்பிடிப்பின் நான்காம் நாள். வெளியூருக்கு முன்னதாக ஷூட்டிங் ஆரம்பிப்பது என்று முடிவாயிற்று. ராஜன், காலை ஆறு மணிக்குள்ளாகவே வந்து சேர்ந்து விடுவதாக முந்தின தினம் மாலையே சொல்லி விட்டுச் சென்றான். ஏழு மணியான பின்னும் ராஜன் வரவில்லை. படப்பிடிப்புக் குழுவினர், காத்திருந்தார்கள். ரெட்டி ஒன்றன்பின் ஒன்றாகச் சிகரெட்டைப் புகைத்துப் போட்டுக் கொண்டிருந்தார்.

''ராஜனுக்கு உடம்புக்கு ஏதாகிலும் வந்திருக்குமோ. அல்லாவிடில், இந்த மாதிரி லேட்டாக வருகிற பையன் அல்லவே, அவன்'' என்றார் ரெட்டி. சுமார் ஏழரை மணிக்கு, சேர்வைக்காரர் வீட்டு வேலையாள் வந்து, டைரக்டருக்குப் போன் வந்திருப்பதாகச் சொன்னான். நாலாம் வீட்டுக்கு ரெட்டியும், மூர்த்தியும் சென்றார்கள், அல்லது கிட்டத்தட்ட ஓடினார்கள். போனில் ராஜன் இருந்தான்.

''என்னப்பா, ராஜன்? ஆர் யு வெல்?''

''அப்கோர்ஸ், சார். ஒரு சின்ன பிரச்னை. குடும்பப் பிரச்னைதான். இன்னும் இரண்டு மணி நேரத்தில் வந்து சேர்ந்திடறேன், சார்.''

''ஓ. கே. செய்.''

''ஒரு உதவி பண்ணணும்.''

''சொல்லு.''

''என்னை ஹீரோ ஆக்கினதும் நீங்கதான். என் ஒய்ஃப்பை காஸ்டியூமர் ஆக்கினதும் நீங்கதான். இதையெல்லாம் நான் மறக்கவே மாட்டேன்.''

''நமக்குள்ளே இந்த பார்மாலிட்டி தேவைதானா?''

''தப்பா நினைக்கக் கூடாது. ரூபா, 'காக்கைச் சிறகு' படத்தோட ஸ்கிரிப்டைக் கேக்கிறா. ஸ்கிரிப்டைப் படிச்சான்னாத்தான், காஸ்டியூம் சரியாப் பண்ண முடியும் கிறாள்... தயவுசெய்து ஸ்கிரிப்டை அனுப்பி வைங்களேன்.''

''காஸ்டியூமருக்கு ஸ்கிரிப்ட் கொடுக்கிற வழக்கமில்லை. அது தேவையும் இல்லை. நானும் ரூபாவும் உட்கார்ந்து பேசிப் படத்தைப் புரிஞ்சுக்கலாமே. ரூபாவையும் அழைச்சுக்கிட்டு வாயேன்.''

''அவள் ஸ்கிரிப்டைப் படிக்கணும் கிறாள்.''

''தேவையில்லைன்னு சொல்றேனே. கதை யாரைப் பத்தினது, எந்த கிளாசை பத்தினது. அவர்களோட வருமானம், கல்ச்சரல் ஸ்டேட்டஸ் இதுகள் போதும்பா... அந்த அம்மாகிட்டே நான் பேசறேன். நீ முதல்லே புறப்பட்டு வா.''

''சரி சார், வந்துடறேன்.''

போனை வைத்த ரெட்டி மூர்த்தியைப் பார்த்துச் சிரித்தார்.

''மிஸஸ் ரூபா திடீர்னு ஸ்கிரிப்டை கேக்கிறாங்க. வேறொன்றுமில்லை. ராஜன் இன்னும் ரெண்டு மணியிலே வந்திடுவாராம்.''

சுமார் பதினோரு மணி வரைக்கும் ராஜன் வந்து சேரவில்லை. போன் வந்தது. இந்த முறை ரூபா பேசினாள்.

''என்னங்க?'' என்றார் ரெட்டி, கவலையுடன்.

''ஸ்கிரிப்டை அனுப்பியாச்சா, சார்?''

''அது தேவையில்லேன்னு ராஜன்கிட்டே சொன்னேனே. நாம நேரில் அரை மணி பேசினா போதும்மா. இன்னும் கேட்டா, வேலை இல்லாத இளைஞனைப் பத்தின நம் படத்துக்கு என்ன விசேஷமான காஸ்டியூம் தேவைப்படும்? ரெண்டு சட்டை, ரெண்டு பேண்ட், புடவை, ரவிக்கை இதானே. நேரில் பேசுவோமே. வாங்களேன்.''

''இல்லே சார். எனக்கு அது தேவை. ஸ்கிரிப்ட் வந்தாத்தான் ராஜன் அங்க வருவார்.''

போனை வைத்து விட்டாள், ரூபா.

அருள்வாக்கு

ஏதோ ஒன்று உலக மக்கள் எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் தர்மத்தின் நிலையில் திருப்பிக் கொண்டுதான் வந்திருக்கிறது. இதனால்தான் சகல தேசங்களிலும் மனிதன் தன்னுடைய பௌதிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டும் நிற்காமல், வேறு சில 'விசித்திரமான' காரியங்களைச் செய்து வருகிறான். ஒருவன் சிலுவை என்று ஒன்றை வைத்துக் கொண்டு, ஜெபம் சொல்கிறான். இன்னொருவன் 'நமாஸ்' செய்கிறான். வேறொருவன் விபூதியைக் குழைத்துப் பூசிக் கொள்கிறான். இன்னொருவன் நாமக்கட்டியைக் குழைத்துப் போட்டுக் கொள்கிறான். இவற்றால் நேருக்கு நேர் எந்த பௌதிகப் பலனும் தெரியாவிட்டாலும் தலைமுறை தத்துவமாக இவற்றை மனித சமுதாயம் பின்பற்றி வந்திருக்கிறது. ஏன் இப்படிச் செய்திருக்கிறது?



உலக வாழ்வுக்கு மனிதன் பணமும் பொருளும் சேர்த்தான். அன்றைய தேவையோடு போதாது என்று எதிர்காலத்துக்காகவும் பொருளீட்டினான். 'எதிர்காலம்' என்கிற போது, அது எத்தனை வருஷம் என்ற கேள்வி வந்தது. எப்படியிருந்தாலும் ஒருவன் ஆயிரம் பதினாயிரம் வருஷம் இருக்கப்போவதில்லை என்று தெரிந்தது. ஒரு மனுஷ்யனின் ஆயுள் உள்ளவரைக்கும், அந்த மனுஷ்யனின் சந்ததிக்கும் தேவைப்படுகிற சொத்தைத் தேடுவான்.

இந்த மனுஷ்ய ஆயுள் முடிந்த பின், அவன் என்ன ஆகிறான் என்ற கேள்வி வந்தது. இந்த உடம்பு போனதோடு, மனுஷ்யனும் போய் விடவில்லை என்று அந்தந்த தேசத்திலும் தோன்றிய மகான்கள் கண்டார்கள். ஆனால், இந்த உடம்புக்காகத் தேடிய பணமும் பொருளும் உடம்பு போன பின், அந்த மனுஷ்யனுக்குச் சிறிதும் பிரயோஜனம் இல்லை என்று கண்டார்கள். உடம்பு போனபின் உயிர் நல்ல கதி அடைவதற்குச் செய்ய வேண்டியது எதுவோ, அதை அந்த மகான்கள் கண்டார்கள். பல தேசங்களில் பல விதத்தில் வழி கண்டார்கள். சிலுவை, நாமம், விபூதி, திருமண் எல்லாம் இப்படி வந்தவையே.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ரெட்டி உடனடியாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

''என்ன சார்,'' என்றான் மூர்த்தி.

''ஸ்கிரிப்ட் வந்தாத்தான் ராஜன் வருவார்னு மிஸஸ் ரூபா சொல்றாங்க.''

ரெட்டி, திரும்பி வந்து அவர் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

கேமராமேன் வந்து ரெட்டியின் அருகில் அமர்ந்து, ''எனி பிராப்ளம்?'' என்றார். ரெட்டி விஷயத்தை விளக்கினார்.

''இது அநேகப்படி சார். பொதுவா அசிஸ்டெண்ட் டைரக்டர்தான் காஸ்ட்யூமர் கிட்டே பேசி டிரஸ் முடிவு பண்ணுவாங்க. ஸ்கிரிப்ட் இல்லேன்னா ஷூட்டிங் இல்லேங்கறது, ரொம்பத் திமிர். திஸ் ஷுட் நாட் பி என்கரேஜ்ட்.''

சுமார் பன்னிரெண்டு மணிக்கு ராஜவிடம் இருந்து போன் வந்தது. ரெட்டி பேசினார்.

''எஸ், மிஸ்டர் ராஜன்.''

''சார்! ரூபா, ஸ்கிரிப்ட் வந்தாத்தான் நான் ஷூட்டிங் போகலாம் என்கிறாள். நீங்களும் அனுப்பத் தயாராக இல்லை. இரண்டு பேருக்கும் நடுவிலே மாட்டிக்கிட்டு நான்தான் முழிக்கிறேன். நான் என்ன பண்ணட்டும்.''

''இதை நீதான் முடிவு செய்யணும். நான் ஸ்கிரிப்ட் அனுப்ப முடியாது.''

ராஜன் தயங்குவது தெரிந்தது.

''சார்... காக்கைச் சிறகு என்னை இழந்துடும்மோன்னு எனக்குப் பயம்மா இருக்கு.''

''எனக்குப் பயம் இல்லை.''

''நீங்க முடிவுக்கு வந்திட்டீங்க... அதனால...''

''எனக்கு நிறைய நஷ்டம் ஏற்பட்டுடும், ராஜன். அஞ்சு லட்சம் போகும். அதோட பீல்டுல தப்பான செய்தி பரவும். ரொம்ப நாள் கழிச்சுப் படம் பண்றேன். அதுக்கும் தடைன்னா, ரொம்பச் சிரமமாப் போகும். ஆனாலும் பரவாயில்லை. பிழைப்பு எப்படியும் நடக்கும். எதைக் கொடுத்து எதைப் பெறப் போகிறோம் என்கிற தெளிவு நமக்கு அவசியம். எதையும் கொடுக்காமல் எதையும் பெற முடியாது. ஆனால், எந்த அளவுக்கு? எதை எதைக் கொடுக்கிறது? இதுதான் ராஜன் சிக்கல். ஆனா, இது ஒரு சவால். வாழ்க்கை நமக்கு விடுகிற சவால். பார்ப்போம், பெஸ்ட் ஆஃப் லக்.''

ரெட்டி, திரும்பி வந்து 'பேக்-அப்' சொன்னார்.

அன்று இரவு ரெட்டியும் மூர்த்தியும், ரெட்டி வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். மூர்த்தி சொன்னான்.

''சார், படத்தை நிறுத்தியது பத்தி மீண்டும் நீங்க யோசிக்கணும். ரொம்ப நஷ்டம், நீங்க சொன்னது போல...''

''இருக்கட்டும். அதனால என்ன? ரெட்டி இன்னும் நஷ்டப்படலையே. எனக்கு வருத்தமெல்லாம், இந்த ராஜன், இன்னும் பெரிசா வளர வேண்டிய பையன், இப்படி இருக்கானே என்கிறதுதான்.''

ரெட்டி உள்ளே போய் ஒரு கவரோடு வந்தார்.

''இதுல கொஞ்சம் பணம் இருக்கு. செலவுக்கு வச்சுக்க. அடுத்த படம் பண்றப்போ, கட்டாயம் எனக்கு நீ வேணும்.''

வேலையே செய்யாத, நின்று போன படத்துக்கு மூர்த்தி பதினைந்தாயிரம் சம்பளம் வாங்கினது, அப்போதுதான்.

ரெட்டி சொன்னபடியே கூப்பிட்டு அனுப்பியிருந்தார். இடையில், மூர்த்தி, ரெட்டியைப் பற்றின செய்திகளைப் பத்திரிகையில் பார்த்தான். 'காக்கைச் சிறகு' படத்தில், நடிகையிடம் தகாத முறையில் ரெட்டி நடந்து கொண்டதால், படம் நின்றது என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ரூபா விஷயமாகப் புருஷன் ராஜனுக்கும் ரெட்டிக்கும் லடாய் என்றும் ஒரு பத்திரிகை சுவாரஸ்யப்படுத்தியிருந்தது!

ரெட்டியின் வீடு, இ ர ண் ட ா ம் புளோரில் இருந்தது. முதல் ஃப்ளோரில் ஒரு ஜோசியர் வசித்தார். சினிமா நடிகைகளின் திருமணத்துக்கும், ரத்துக்கும் அவரே நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூர்த்தி முதல் மாடியைக் கடந்து, இரண்டாம் மாடிப்படியில் ஏறக் காலை வைத்தான். படியை ஒட்டி, ஜோசியரின் வரவேற்பு அறை. வசதியான நாற்காலிகள் போடப்பட்ட அந்த வரவேற்பு அறையில் தன்னந்தனியாக, அந்தக் காலை நேரத்தில் அமர்ந்திருந்தது, எங்கோ பார்த்த முகமாகவும் இருந்தது. எத்தனையோ வந்து போகிற நடிகையரில் அவளும் ஒருத்தியாய் இருப்பாளாக்கும் என்றபடி மூர்த்தி ரெட்டியின் வீட்டுக்குள் நுழைந்தான். வழக்கமான வெள்ளை உடையோடு, டைனிங்டேபிளில் அமர்ந்திருந்தார், அவர். சமையல்காரர், பரிமாறிக் கொண்டிருந்தார்.

''சாப்பிடு'' என்று உபசாரம் செய்தார், ரெட்டி.

''ஒரு பைனான்சியரைப் பார்க்கப் போறோம். கதை கேட்காத, நமக்குக் கதை சொல்லாத, என் மேல் மிகுந்த அபிமானம் உள்ள பைனான்சியர். 'காக்கைச் சிறகு' வரும். நாம் பண்றோம்'' என்று சொன்னார் ரெட்டி.

இருவரும் படி இறங்கிக் கீழே வந்தார்கள். வரவேற்பறையில் அமர்ந்திருந்த அந்தப் பெண் எழுந்து ''வணக்கம் சார்'' என்றாள் ரெட்டியை பார்த்து. கைகுவித்து, ரெட்டி, ''யாரு?'' என்றார்.

''நான்தான் சார் ரூபா. ரூபா ராஜன்.''

''அட, என்னம்மா, எங்க இப்படி...'' என்றார் ரெட்டி.

அவள் தலைகுனிந்து கொண்டு அழுதாள். ரெட்டி பதைத்துப் போனார்.

''சரி, வாங்க...'' என்று ரூபாவை அழைத்துக் கொண்டு தம் வீடு வந்தார். டைனிங் டேபிளில் அமரச் சொல்லி, இட்லி பரிமாறச் சொன்னார்.

ராஜனுக்கும் அவளுக்கும் முறிவு ஏற்பட்டு விட்டதாம். ராஜன், வேறு ஒரு பெண்ணோடு வாழ்கிறானாம். மீண்டும் ராஜனோடு தான் சேர்ந்து வாழ முடியுமா என்று ஜோசியரைக் கேட்க வந்திருந்தாளாம்.


''கவலைப்படாதீங்க. ராஜனோட நீங்க சேர்ந்து வாழ்வீங்க. நான் அவன்கிட்டே பேசறேன். இப்படித்தான் பயல்களுக்குப் புத்தி கெட்டுப் போய் விடுகிறது. நல்ல பையன். நல்ல கலைஞன். இப்படிப் பண்றானே.''

சமையல்காரர், ஜோசியர் வ ந் து விட்டதை அறிவித்தார்.

''எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்க ஜோசியரைப் பார்க்கிறதை நான் ஆட்சேபிக்கலை. போய்ப் பாருங்க...'' என்று அனுப்பி வைத்தார், ரூபாவை. அவள் போகும் போது, ரெட்டி சொன்னார்.

''உங்களைத் திரும்பவும் ஒன்றுசேர்க்க நான் இருக்கேன். கவலைப்படாமல் போங்க.''

காக்கைச் சிறகு மீண்டும் வளர்ந்தது. ராஜன், ரெட்டியைச் சந்திக்கவே மறந்து விட்டான். அவன் இடத்தில் மனோகர் நடித்தான். ரூபாவையும் அவன் சேர்த்துக் கொள்ளவில்லை. காக்கைச் சிறகுக்குக் காஸ்டியூமராக ரூபா வேலை செய்தாள். ஸ்கிரிப்டை அ வ ள் கேட்கவில்லை. ஆனால், ரெட்டி அவளுக்கு ஒரு பிரதி படிக்கக் கொடுத்தார்.



''உங்க வீட்டில் சிதம்பர ஆட்சியா? மதுரை ஆட்சியா?''

''ரெண்டும் இல்லே. கல்கத்தா காளி ஆட்சிதான் நடக்குது!''

- ராஜராயன்.

மத்திய அரசின் ''நிதி கம்பெனி'' என்ற அங்கீகாரம் பெற்றவர்கள்

RBF SAVINGS SERVICE

இராயப்பேட்டை பெனிபிட் பண்டு லிமிடெட்

கோகலே பவன், வெஸ்ட்காட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-600 014.
போன் : 831180, 846445, 831755

வைப்புத் தொகை திட்டங்கள்

I. FIXED DEPOSIT SCHEME*

Period	45 Days	3 Months	6 Months	1 Year	2 Years	3 Years	4 Years	5 Years RAJAYOGAM
Rate of Interest p.a.	13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

II. C.D. SCHEME* DEPOSIT DOUBLES IN 45 MONTHS - TRIPLES IN 68 MONTHS.

Amount of Deposit	MATURITY VALUE AFTER						
	12 Months	24 Months	36 Months	45 Months	50 Months	60 Months	68 Months
Rs. 1,000	1,180	1,430	1,730	2,000	2,190	2,690	3,000
Rs. 5,000	5,920	7,150	8,650	10,000	10,900	13,400	15,000
Rs. 7,500	8,880	10,725	12,975	15,000	16,400	20,200	22,500
Rs.10,000	11,840	14,300	17,300	20,000	21,900	26,900	30,000

III. CASH CERTIFICATE*

Period	Amount	Certificate Value
36 Months	2,925	5,000
	5,850	10,000
	8,775	15,000
	11,700	20,000

''சுப்ரா பாண்ட்''
புதிய சேமிப்புத் திட்டம்

22% வரை மாத வட்டி தரும் சேமிப்புத் திட்டம் (A)
5 ஆண்டுகளில் முதலீடு மும்மடங்கு ஆகும் திட்டம் (B)
ஊக்கத் தொகை முதிர்வின் போது ரூ. 10,000 வரை.

IV. RECURRING DEPOSIT

Monthly Deposit	MATURITY VALUE AFTER					
	12 Months	24 Months	36 Months	48 Months	60 Months	72 Months
Rs. 25	330	725	1,210	1,805	2,585	3,485
Rs. 50	660	1,450	2,420	3,610	5,170	6,970
Rs. 75	990	2,175	3,630	5,415	7,755	10,455
Rs. 100	1,320	2,900	4,840	7,220	10,340	13,940

V. PENSIONERS' PARADISE SCHEME*

VI. RAJAYOGAM DEPOSIT SCHEME*

VII. KUBER DEPOSIT SCHEME*

VIII. S.B. A/c 10%

தங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்.

ஒரு சவரனுக்கு ரூ. 2,000 வரை கடன் வழங்கப்படும்

நகை கடன் பெற R.D. கட்ட வேண்டியதில்லை

அலுவலக நேரம் :
வார நாட்களில் : காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை (இடைவேளை இல்லை)
ஞாயிற்றுக்கிழமைகளில் : காலை 8.30 மணி முதல் நண்பகல் 1 மணி வரை

பங்குதாரர்களுக்கு மட்டுமே ஒரு பங்கின் விலை : ரூ. 1 மட்டும்

வெள்ளிக்கிழமை விடுமுறை

100 கோடி லட்சியம் - தேடிவரும் நிச்சயம்

இளமையில் கல்

கிருஷ்ணா

பானு -

வயது பதினெட்டு. எலுமிச்சை நிறம். படபடக்க வைக்கும் உருவம்.

அப்போதுதான் காலேஜிலிருந்து வீட்டுக்குத் திரும்பினாள்.

அறைக்குள் நுழைந்து புத்தகங்களை டேபிள் மேல் தொப்பெனப் போட்டாள்.

தாவணிப் பொத்தானை அழுக்கி வாள். நைட்டிக்கு மாறினாள். அறையின் கதவைத் திறந்தபடி யதேச்சையாக டேபிளைப் பார்த்தாள்.

இவள் தூக்கிப் போட்ட அதிர்ச்சியில் கெமிஸ்ட்ரி நோட்டு சரிந்து, அதிலிருந்து நாலாக மடிக்கப்பட்ட பேப்பர் 'வெளியே வரவா' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

ஏதோ கடிதம் போலிருக்கிறதே என்ற நினைப்புடன் ஒரே தாவலில் டேபிளை அடைந்து, அதைக் கையில் எடுத்தாள்.

மடிக்கப்பட்ட தாளின் மேற்புறம் இருதயத்தின் படமும், அம்பும் வரையப்பட்டிருந்ததைக் கண்டு திகைத்தாள்.

இது எப்படி தன் புத்தகத்தினுள் வந்தது என்ற குழப்பத்துடன் பிரித்தாள்.

உள்ளே ஒரு கவிதை.

கவிதையின் ஹீரோ இளங்கோ என்ற பெயர்.

அவளுக்குப் புரிந்து விட்டது.

கல்லூரி முடிந்து திரும்பும் போது, தவறுதலாகத் தன் மேல் இளங்கோ மோதியது நினைவில் ஆடியது.

அந்த மோதலின் விளைவாய்க் கீழே விழுந்த புத்தக நோட்டை இளங்கோ குனிந்து எடுத்து நீட்டியதும் ஞாபகம் வந்தது.

''சாரி'' சொல்லிய பின்னும் இளங்கோ ஒரு நிமிடம் அந்த நோட்டையும், தன்னையும் அழுந்தப் பார்த்தது ஏன் என்று இப்போது புரிந்தது.

இளங்கோ எதையோ எதிர்பார்த்து மோதியிருக்கிறான்.

என்ன அது?

வேறு என்ன? ஓர் இளைஞன், தன் வயதுடைய இளைஞியிடம் வேறு என்ன எதிர்பார்ப்பான்?

காதல்!

அந்த வார்த்தை மனதில் ஓடியதும் ஏதோ உள்ளே மாயாஜாலம் நிகழ்வதை உணர்ந்தாள் பானு.

கூடவே நடுக்கமும் ஓடியது இரத்த நாளங்களில். இருட்டைக் கண்டு பயப்படும் குழந்தையாய் ஒரு பயம் மனதில்.

பரபரக்கும் மனதை அடக்க முடியாமல் அந்தக் கவிதையைப் படிக்க முயன்றாள்.

மயில் அகவுதல்
குயில் கூவுதல்
நீ என்னை ஈர்த்தல் -
எல்லாமே இயல்பாய் வந்த
இயற்கைதானே கண்ணே!

அவளுள்ளும் மயில் தோகை விரித்து ஆடியது. கூடவே குதிரையும் முட்டியது பின்னே.

''**எ**ன்ன பானு பிரமை பிடிச்சுப் போய் நிக்கறே?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள்.

பயணத்தில் பாதித் தூக்கத்தில் திடீர் பிரேக் போட்டதால் விழித்த பயணியாய் அப்பாவைப் பார்த்தாள்.

மனசுக்குள் ஒரு தயக்கம். கடிதத்தை மறைக்கத் துடிக்கும் மயக்கம்.

தலையை உதறிக் கொண்டாள்.

அவளைப் பொறுத்தவரை இந்த வீடு நெருடல் இல்லாத சிநேகிதம்.

அப்பா என்பவர் அனுபவம் கொண்ட அக்கறை உள்ள தோழர்.

கடிதத்தை நீட்டினாள். வாங்கிப் படித்தார்.

கடகடவென சிரித்தவரைப் புரியாமல் பார்த்தாள்.

''அந்த இளங்கோ என் கண்ணைத் திறந்துட்டான் கண்ணம்மா.''

''என்னப்பா சொல்றீங்க?''

''உன்னை இன்னும் சின்னக் குழந்தையாகவே நானும், உங்கம்மாவும் நினைச்சுகிட்டு இருக்கோம். உன் மகள் இன்னும் பாப்பா இல்லேடா முட்டாள், காண்பவரைக் கவரும் மங்கையடா அவள்'னு எனக்கு உணர்த்திட்டான்.''

''போங்கப்பா'' என்று வெட்கமாய்ச் சிரித்தாள் பானு.

''இது எத்தனாவது கடிதம்?''

''முதல் கடிதம்.''

''அப்படீன்னா நீ இன்னும் ஆரம்பிக்க வேண்டு சொல்றேன்...''

''எப்படிப்பா?''

''காதல் விஷயத்தில் ஆண்கள் அவசரக்காரர்கள். அதே நேரத்தில் பெண்கள் ஜாக்

கிரதை உணர்வு உள்ளவர்கள்.''

''உண்மைதான். எனக்கே தெரியாம இந்தக் கடிதத்தை என் நோட்டுல வைச்சிருக்கான்.''

''பையன் எப்படி?''

''தெரியாதுப்பா. என் கூடப் படிப்பவன், அவ்வளவுதான் தெரியும்.''

''ஓகோ'' என்று கவிதையை மீண்டும் படித்தார்.

''ஏன் அப்பா, உங்க பெண்ணுக்கு ஒருத்தன் காதல் கவிதை எழுதியிருக்கான். என் மேலோ, அந்தப் பையன் மேலோ உங்களுக்குக் கோபம் வரலியா? ரசிச்சு ரெண்டாவது முறை படிக்கறீங்களே கவிதையை.''

''அந்தந்த வயதின் விளைவுகளம்மா இதெல்லாம். ஐந்து வயதில் சாக்லேட்டுக்கு ஆசைப்படுவதும், பத்து வயதில் சைக்கிள் ஓட்ட ஆசைப்படுவதும் எப்படி இயற்கையோ, அதே போல பதினைந்து வயதில், அரும்பு மீசை முளைக்க குறும்பில், காதல் கடிதம் எழுதுவதும் இயல்புதான் பானு.''

''என்னப்பா இப்படிச் சொல்லிட்டீங்க?''

''பின்னே? சினிமா அப்பா போல பெல்டை உருவணும்னு சொல்றியா?''

''அப்படீன்னா இந்தக் கடிதம் எழுதியது சரிதான் என்கிறீர்களா?''

''கடிதம் எழுதியது சரியென்று சொல்லவில்லை. இதைப் படித்ததும் உன்னுள் ஏற்பட்டிருக்க வேண்டுமே அந்தச் சிலிர்ப்பும், அதற்குக் காரணமான இந்தக் கடிதமும் இயல்பானது. இயற்கையானது. ஆனால் இதனால் ஏற்படும் விளைவு புத்திசாலித்தனமாய் இருக்க வேண்டும்.''

''குழப்பதீங்களேப்பா!''

''குழப்பத்தில்தான் தெளிவு பிறக்கும். இயல்பான உணர்ச்சிகளை ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் மனதில் வளர வேண்டும். அதன் பின்விளைவுகளைச் சிந்தித்துப் பார். நலம் விளையுமானால் அதற்கு மதிப்புக் கொடு. பாதிப்பு வரும் என்றால் அடக்கி விடு.''

''இப்போது நான் என்ன செய்வது?''

''இளமையில் கல்.''

''அப்படீன்னா?''

''உன்னுடைய இந்தப் படிக்கும் பருவத்திலே மனதைத் திசை திருப்பற இந்த மாதிரிக் கடிதங்களைக் கண்டு சஞ்சலப்படாம, மனதை கல்லாக்கிக் கொண்டு பாடத்தில் கவனம் வை.''

பானு யோசித்தபடி அந்தக் கடிதத்தைப் பார்த்தாள்.

''கவிதை பரவாயில்லைதானேப்பா. இன்னும் முயன்றால் இளங்கோ நல்ல கவிஞனாய் மிளிரலாம். நாளைக்கு அவனிடம் என் ஆலோசனையாய் இதைச் சொல்லிடணும்'' என்றவளைப் பெருமையுடன் பார்த்தார் அவள் அப்பா.



பெரிய தம்பி

எஸ்.வி.சேகர்

வசனம்: வெங்கட்

என் அன்புக்குரிய ரசிகர்களே...

உங்களுக்கு இந்த எஸ். வி. சேகரின் கரங்கள் வணக்கம் தெரிவிக்கக் குவி கின்றன. இதுவரை நகரத்து நகைச் சுவையை மட்டுமே நாடகமாக்கி உங்க ளுக்குக் காட்டி வந்த 'நாடகப்ரியா' ஒரு மாறுதலுக்காக...

பட்டிக்காட்டின் பசுமைகளை மேடை ஏற்ற வந்திருக்கிறது. சின்னப் பட்டி கிராமத்தில் இருந்து... எட்டுக்கல் தொலைவில் இருக்கும் தம்மாத்தூண்டுப் பட்டி வழியாகக் குறுக்கே நடந்து... கிழக்கு வாசலைக் கடந்து, கோபுர வாச லைத் தாண்டி... கிழக்குக் கரைக்கு வந் தால்... ஒரு சிறு கிராமம் தெரியும். அது தான் பெரியபட்டி!

இந்தியாவின் வரைபடத்தில் இன் னும் இடம்பெறாத இந்த அழகிய கிராமம் எழில் மிகு சாக்கடைகள், தென்றல் வீசும் சகதியான வீதிகள், மப்பு வீசும் மரங்களைக் கொண்டது!

இங்கு கோழிகளும் ஆடுகளும் தாம் பலியாகப் போவதை அறியாமல், தெருத் தெருவாக அலைகின்றன!

இப்படிப்பட்ட கிராமத்தில்...

மண்வாசனையுடன் ஒரு மனிதன் வாழ்ந்தான்...

மலைகளும் அவனை மகனாக நினைத்தன...

தென்றலும் அவனைத் தோழனாக் கித் தொட்டில் போட்டது... கால்நடை களும் கூட வால் இல்லாத பையன் என் றாலும் அவனைத் தன் இனமாக நினைத் தன..

அவன்தான்...


பெரியதம்பி!

காட்சி - 1

பண்ணை வீடு

கருப்பாயி : தாயே எல்லாத்தையும் நல்லபடியாக் காப்பாத்து ஆத்தா...

பெரிய பண்ணை : ஏலே மாடசாமி! கருப் பாயிட்ட சொல்லி, பெரிய வாளை எலயா விரிச்சி... அதுல சோறு, கூட்டு, கறி, மீனு, அல்லாத்தையும் தனித்தனியா வக்கச் சொல்லு. ஒண்ணாப் பிசைஞ்சி கூட்டாஞ் சோறாத் துன்னப் போறான் இந்தப் பெரிய பண்ணை!



பண்ணை ஆள் மாடசாமி : என்னங்கய்யா கழுத்துல பெல்டு... கையில கள்ளு பாட்டிலு! ...என்ன வந்திச் சியா ஒங்களுக்கு?

பெ. பண்ணை : டாக்கீஸ்ல நேத்துப் பாத்த படம் என்னலெ?

மாட : என் ராசாவின் மனசில!

பெ. பண்ணை : அந்த மாயாண்டி என் னைப் பாதிச்சிட்டான்!

கருப் : 'மொத மரியாதை' கூடத்தான் ஓடிச்சு... அதப் பாத்துப் புட்டு கால்ல செருப்பு இல்லாம நடக்கலையா?

பெ. பண்ணை : எனக்கொரு உண்மை தெரிஞ்சாவோணும்!

கருப் : போதாக்குறைக்கு இத வேற சொல்லிட்டுத் திரிஞ்சாக! இனிமே டெண்ட்டு கொட்டாய்ல படம் பாருங்க சொல்லுதேன்..

பெ. பண்ணை : ஊர்ல வேற என்னல விசேசம்?

மாட : தர்மகர்த்தா மவனும் கர்ணத் தோட மகளும் திருட்டுத்தனமா தோப்புல



● "அந்த மயமண்டி என்னைப் பாதிச்சிட்டான்!"

சந்திக்கிறாங்க...

பெ. பண்ணை : ஆ! இத ஏண்டா முதல்ல சொல்லல... உள்ள ஓடு தட்டு இருக்கும் அதக் கொண்டா!

(மாடசாமி தட்டை எடுத்து வருகிறான்)

மாட : இதுல என்னங்க இருக்கு?

பெ. பண்ணை : ஆத்தா ஒன் கோவிலியே படத்ல வர்றாப்புல ரெண்டு கிண்ணத்துல விசம்! இத அந்தக் காதல் சோடிக்குக் குடுத்து, குடிச்சிட்டு சாவச் சொல்லு!

மாட : அதான் அந்த படத்ல வந்திரிச்சே.

பெ. பண்ணை : அப்ப அப்படியே திருப் பிடு.

மாட : சரிங்க *(மாடசாமி தட்டைக் கவிழ்க்க)*

பெ. பண்ணை : கொட்டிட்டியேடா!

மாட : நீங்கதானே திருப்பச் சொன்னீங்க!

பெ. பண்ணை : முட்டாள்! காதல் சோடிக்குக் குடுக்காம... காதலைத் தடுக்கிறாங்களே பெத்தவங்க, அதுங்களுக்குக் குடுக்கச் சொன்னேன்...

கருப் : அடாடா! நீங்க படம் பாத்து உயிர எடுக்கறது போதாதுன்னு அந்தாளையும் ஏன் வம்பு பண்றீக! *(சைக்கிள் பெல் சப்தம் கேட்கிறது)*

பெ. பண்ணை : வாசல்ல யாரு, பாரு புள்ள!

கருப் *(பார்த்து வந்து)* : பேஸ்ட்மேனு கடிதாசி குடுத்துட்டுப் போறான்!

பெ. பண்ணை : இதுக்குத்தான் ரெண்டு எழுத்துப் படிக்கணும்கறது. பேஸ்ட்மேன் இல்லடீ. போஸ்ட்மேனு... சொல்லு!

கருப் : என்ன கடிதாசி... படியுங்க!

பெ. பண்ணை : அட.... பெரியதம்பி எழுதி இருக்கான் புள்ள!

கருப் : ஐய்யோ... படிங்க..

பெ. பண்ணை : பட்டணத்துல படிப்பு முடிஞ்சி போச்சாம்.. விடுமுறைக்கி வாரானாம்.

கருப் : பெரியதம்பீ... வாரானா? நம்ப முடியலியே... கனவா இல்ல நனவா... ஏ சின்னாத்தா பெரியாத்தா மங்காத்தா கங்காத்தா குருவம்மா குள்ளம்மா குப்பம்மா கேட்டுக்கங்கடீ.. என் மவன் பெரீதம்பி வாரானாம்! *(குலவை ஒலி கேட்கிறது)*

(பாடல்)

பெ. பண்ணை : தூ! அவன் வந்ததும் குலவைய வச்சுக்குங்கடி... இதே வேலையாப் போச்சு...

கிழவன் *(உள்ளே நுழைந்தபடி)* : தட்டித் தட்டிக் கூட்டுவாளாம் முனியம்மா. இன்னிக்கு இளமை சவியம்மான்ற மாதிரி. என்ன கடிதாசி?

பெ. பண்ணை : என் மவன் பெரியதம்பி வாரானாம் கொள்ளுத்தாத்தா!

கிழவன் : தூக்கணாங்குருவியத் தூன்னவன் தூளுக்கப்பட்டிக்குப் போனானாம் தும்மித் தும்மிச் செத்தானாம்கற கதயா.. என் கொள்ளுப் பேரன் மவன் வர்றத எனக்குச் சொல்லுறியா? *(உத்தரத்தி லிருந்து தொங்கும் மணியைச் சுட்டிக் காட்டி)* இது என்னல?

மாட : மணி!

கிழவன் : இத ஏன் இங்கன கட்டி வச்சிருக்கன்? என்னிக்காவது பெரியதம்பி வருவான்... இந்த மணிய அடிப்பான்... என்னைத் தாத்தான்னு கட்டி அணைச்சிப் பான்னுதானேடா?

பெ. பண்ணை : கிளவன் - பூவே பூச்சூடவா பத்மினி மாதிரி... எலேய் என் மவன் பட்ணத்துல பெரிய படிப்பு படிக்கப் போட்டு வாரான். ஊர்க் கண்ணு படாம இருக்கணும்.

● "ஏ சின்னாத்தா பெரியாத்தா மங்காத்தா கங்காத்தா குருவம்மா குள்ளம்மா குப்பம்மா கேட்டுக்கங்கடீ..."





● எதுக்குயா மூஞ்சிக்கு நேர லாந்தரக் கொண்டு வர்ற?

அவன் ஊருக்குள்ள வில்லு வண்டியில வாரரல... வழியில ஏழெட்டுப் பொம்ப ளைங்களை நிக்கவச்சு திருஷ்டிப் பாட்டு பாடச் சொல்லிரு!...

(திரை)

''கண்ணூடப் போவுது...
பெரியதம்பியோ!....''
(பாடல் ஒலிக்கிறது)

காட்சி - 2

கிராமத்து எல்லை

எல்லைக் காவல் : நில்லு... யார்ரா அவன், எங்க பெரியபட்டிக்குள்ளாற கால எடுத்து வக்கிறவன்?

பெரியதம்பி : மொதல்ல போர்ட ஒழுங்கா எழுதி வையுங்கயா... பெரியபாட் டின்னு எழுதி வச்சிட்டு உதார் வேறயா?

எல்லை : சரியாத்தான் எழுதி இருந் தோமுக... சின்னப்பட்டிக்காரங்கதான்.. பெரிய பட்டிக்காரங்க கால வாரி விட ணும்னு சொல்லிட்டிருந்தாக, செஞ்சிப்புட் டாக போலிருக்கு...!

(இழுத்து இழுத்துப் பேசுகிறான்)

பெரிய : யோவ்! நல்லாத்தானே பேசிட்டு இருந்த.. திடீர்னு ஏன்யா இழுத்து இழுத்து ராகம் போட்டுப் போற?

எல்லை : அது எங்க ஊர்த் தமிழுங்க!

பெரிய : அது அப்பப்பத்தான் ஞாபகத்துக்கு வருமா? ஒழுங்காப் பேசு!

எல்லை : எங்கேயோ பாத் திருக்கம் இல்ல தம்பிய?

பெரிய : இருட்லயா பேசிட்டு இருக்கோம், எதுக் குயா மூஞ்சிக்கு நேர லாந்தரக் கொண்டு வர்ற?

எல்லை : தம்பீ... நீ பெரிய தம்பிதானே!

பெரிய : நீ யாருய்யா?

எல்லை : உ த் து ப் பாருங்க... பு ரி யு தா ? புரி யலை? பா வா டை தம்பி! நான்தா பாவாட!...

பெரிய : பாவாடையா நீ! எவ்ளோ பெரிய பாவாடையா யிட்ட நீ!.. ஆமாம்! ஏன் இப்படி சோகமா இருக்கே...?

எல்லை : நா உசுருக்கு உசுரா காதலிச்ச குட்டித்தாயி செத்துட்டா தம்பி!

பெரிய : எப்டி?

எல்லை : என் காதலிய நாய் கடிச்சிடுச்சப்பா...! எனக் காக ஆசையா ஒரு பொறய வாங்கி யிருக்கா... எதிர்ல நான் வளத்த சொறிநாய் வந்திருக்கு. இவ கம்மா இருக்கக் கூடாதா? அந்த நாய்கிட்ட பொறயக் காட்டி தோ தோன்னிருக்கா!

பெரிய : பின்ன என்னய்யா? ஒரு பொறய காட்டி ஏக்ஏக்னு சொல்லணும்... தோ தோன்னு பொய் சொன்னா?

எல்லை : எரிச்சல்ல கடிக்கடிச்சுப்பா!...

பெரிய : அதுல இருந்து விரக்தி... தாடி... கைலாந்தரா?

எல்லை : குட்டித்தாயி ஆவி உருவுல இன்னமும் உலவுறா!

பெரிய : யோவ் கம்மா ரீல் வுடாதே!

எல்லை : இப்ப பார்! ஏ.. குட்டித்தாயி! (காற்று வெளியை நோக்கி அவன் கூவ எதிரொலி எழுகிறது)

பெண் குரல் : ஏ... பாவாட மச்சான்! (எதிரொலி)

எல்லை : இப்ப என்ன சொல்ற?

பெரிய : எதிரொலி கேக்குது... அது குட்டித்தாயி குரல்தான்! இரு இரு நான் கூப்புடறேன்! குட்டித்தாயி, சினிமாக்கு வாரியா? நான் பெரியதம்பி!

குரல் : சீ போடா!

பெரிய : ரோசமான பேயா இருப்பா போல இருக்கே! ஆமா என்னய்யா கிராமம் இது. மாடு மேய்க்கற பசங்க, களை புடுங் கற கிளவிங்க யாரையுமே காணும்?

எல்லை : ஊர்ல எல்லாருக்கும் மூட்டுவலி தம்பீ...

பெரிய : எல்லாருக்கும் ஒரே சமயத்து லயா?

எல்லை : பொழுது விடிஞ்சு பொழுது சாஞ்சா ஏதாச்சும் காதல் சோடி கிராமத்த வுட்டு ஓடுதா? சனங்களும் தூரத்தறாங் களா... தூரத்தித் தூரத்தி, காலுவலிங்கி மூட்டு வலி.. முடக்குவாதம்னு படுத்துக்குதுங்க. போன மாசம் மட்டும் ஏழு சோடி ஓடி இருக்குதுங்க ஆத்தைத்தாண்டி... எங்க போறாங்க, பொழப்புக்கு என்ன பண்றாங் கன்னே தெரியலை...

பெரிய : எங்கயும் போகல. பக்கத்துக் கிராமத்துல பிச்சை எடுக்குதுங்க... வார றப்போ பார்த்தேன். ஆத்தைத் தாண்டிட்டா காதல் வெற்றி ஆயிடுமா?

(அரை நிஜாருடன் தெருப் புழுதி வருகிறான்)

தெருப் புழுதி : ஐ! பெரீநம்பி வந்திடிச்க!

பெரிய : அடடே தெருப்புழுதியா? வாடா! இன்னமும் தூக்கத்துல நடக்கற வியாதி குணமாகலியா?

எல்லை : அது குணமே ஆவாதுங்க. மாரியாத்தாளே குறி சொல்லிட்டா.

பெரிய : டேய் பாதி ராத்திரில நினைச்ச வீட்டுக்குள்ள போய்ப் படுக்கப் போற.. நல்லா சாத்தப் போறாங்க பாரு!

தெருப் : வீட்டுக் கதவையாங்க?

எல்லை : அப்பாவிங்க இவன். புதுசா இவன் ஆத்தா ஒரு குடை வாங்கினா... இவன் அது பூரா ஓட்டை போட்டு வச்சிட் டான்!

பெரிய : ஏன்டா?

தெருப் : மழை விட்டிச்சான்னு அந்த ஓட்டைங்க வழியா பாக்கலாம் இல்ல! அதான்!

பெரிய : ஒனக்கு குடைக்கம்பியே போதும்! - ஏன்டா கால்ல செருப்பு இல் லாம நடக்கற... இந்தா செருப்பு வாங்கிக்க! *(பர்ஸிலிருந்து பணம் எடுத்துக் தரு கிறான் பெரியநம்பி)*

தெருப் : என் கால் அளவையும் வரைஞ்சு குடு.. அதக் கொண்டு குடுத்தாத் தான் செருப்புக் குடுப்பான்!

எல்லை : அப்பாவிங்க; வெள்ளை மனசு. எந்தக் கேள்வி கேட்டாலும் தப்பாத் தான் பதில் சொல்லுவான்! *(தெருப் புழுதி யைப் பார்த்துக் கேட்கிறான்)* ஏன்டா! பகல்ல ஏன் வெளிச்சமா இருக்குது?

தெருப் : தெரியாதுங்க; நான் ராத்திரி பொறந்தவன்.

எல்லை : பாத்தீங்களா!


பெரிய : இவனை கரெக்டா பதில் சொல்ல வைக்கட்டுமா? டேய் - தெரியும் - இதுக்கு எதிர்ப்பதம் என்னடா?

தெருப் : தெரியாது!

பெரிய : கரெக்டா சொல்லிட்டான் பாத்யா! மகாபுத்திசாலி!

(தொடரும்)

படங்கள் : யோகா



* அணுகுண்டு வெடிக்கும் போது...

அட, அப்படியா!

கிறிஸ்துமஸுக்குத் தடை!

!! சில நூற்றாண்டுகளுக்கு முன், இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. 'பியூரிட்டன்' என்ற கிறிஸ்துவப் பிரிவினரின் ஆதிக்கம் ஓங்கியிருந்த காலம் அது. கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரிப்பது, கிறிஸ்துமஸ் கீதங்கள் பாடுவது போன்றவை 1643இல் குற்றங்களாக அறிவிக்கப்பட்டன! பின்னர் 'ரெஸ்டோரேஷன்' என்றொரு இயக்கம் ஏற்பட்டது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மீண்டும் வழக்கில் வந்தன.

!! 'அய்னு' என்ற பிரிவைச் சேர்ந்த ஜப்பானியப் பெண்கள் மேலுதட்டின் மேல் மீசை போல் பச்சை குத்திக் கொள்வதை அலங்காரமாகக் கருதினார்கள்.

!! Pen (பேனா) என்ற சொல்லிலிருந்துதான் Pencil என்ற சொல் உருவானதாகத் தோன்றும். ஆனால் இது உண்மையல்ல. 'Pen' என்ற சொல் இறகு எனப் பொருள்படும் Penna என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. 'Penicillus (சிறிய வால் என்று பொருள்') என்ற லத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது 'பென்சில்'. ஓவியம் தீட்டப் பயன்பட்ட கூரிய முனையுடைய தூரிகைகளைத் தான் Penicillus என்று அழைத்தார்கள்.

!! உலகிலேயே மிகப் பிரபலமான பாடல் : 'ஹாப்பி பர்த்டே டு யூ'!

!! கி. மு. 1400 இல் எகிப்திய பெண்கள், வாசனைமிக்க பசை (grease) போன்ற பொருளைத் தலையில் தொப்பி போட்டது போல் ஒரு குவியலாகத் தடவிக் கொண்டார்கள். அது மெள்ள உருகி முகத்தின் வழியே வழிந்து உடைகளை நனைத்தது. துணிகள் பளபளப்புப் பெற்றதுடன் சுகந்தமும் பெற்றன.

!! இயற்கையில் எதுவுமே கறுப்பு நிறமாக இராது. யானை, பூனை (கறுப்புப் பூனை) காகம் இவை எல்லாமே அடர்ந்த நீலம் அல்லது சாம்பல் அல்லது பிரவுன் நிறத்தில் இருப்பதால் கறுப்பு போல் தோன்றும்.

!! ஒரே ஒரு ரோமத்தை ஆராயும் தடய அறிவியல் வல்லுனர்கள் அதற்குரியவரின் வயது, இனம், மற்றும் அவர் ஆணா பெண்ணா என்பன போன்ற விவரங்களைக் கூறி விட முடியும்.

!! 'பைரைட்ஸ்' என்ற தங்க நிற இரும்புக் கனிமத்தை ஆதிகாலத்தில் பலர் நிஜமான தங்கம் என்று எண்ணி ஏமாந்தனர். எனவே இதற்கு 'fool's gold' என்று பெயர் வந்து விட்டது. கந்தக அமிலம் (sulphuric acid) தயாரிப்பில் இந்த 'fool's gold' இன்று பயன்படுத்தப்படுகிறது.

!! அணுகுண்டு அதீதமான சக்தி படைத்தது என்று நமக்குத் தெரியும். ஆனால் அது வெடிக்கும் போது வெளிப்படும் சக்தியானது, அணுவுக்குள் புதைந்து கிடக்கும் சக்தியில் ஆயிரத்தில் ஒரு பங்கு தான்.

தொகுப்பு : உதய் லால்


இனி ஒரு சதி 1
கதை: பத்மா ரவிசங்கர்
படம்:
பகல் மணி ஒன்று. தொழிலதிபர் சந்திரசேகர் வீடு. விஸ்வம் தன் மாமாவிடம்...
என்ன மாமா திடீர் விருந்து?
முக்கிய காண்ட்ராக்ட் காலைல படிஞ்சிருச்சி!
'ஜாக்பாட்' அடிச்ச மாதிரி... யுவராஜ் தான் காரணம்.. ஆஹா.. சூப் பிரமாதம்..
அர்ச்சனா, தன் காதலனும் சந்திர சேகரின் காரியதரிசியுமான யுவராஜைப் பெருமிதத்துடன் பார்த்து...
கங்கிராட்ஸ், யுவராஜ்.
சந்திரசேகர் கிண்டலாக...
அப்பப்ப சாப்பாட்டையும் விழுங்கும்மா... உன் காதலனையே விழுங்கிட்டிருந்தா எப்படி... ஆமா எப்ப கல்யாணம்?
என் சுதந்திரம் கொஞ்சம் தள்ளித்தான் போகட்டுமே பாஸ்...
ஹ..ஹ..ஹோ..!
சே, டூ பேட்!



சந்திரசேகர் மகிழ்ச்சி பொங்க...
கல்யாணத்துக்கு உனக்கு ஒரு சர்ப்ரைஸ் பரிசு தரப்போறேன் யுவராஜ்... ஊருக்குப் போனவர் திரும்பட்டும் சொல்றேன்...
பட்லர் வர...
சூப் சூப்பர்ப்பா, பெரியசாமி.. ஆமா அது யாரு, புதுசா தம்பி உன் பக்கத்துல...
பட்லர் பெரியசாமி அறிமுகப் படுத்தினான்...
என் தம்பி மவனுங்க, பேரு பாலாஜி. பிளஸ் டூ முடிச்சுட்டு சும்மா இருந்தான்.. சூப் கூட இவன் செய்ததுதான்.
யுவராஜ் குறுக்கிட்டு...
பெரியசாமிக்கு வயசாயிருச்சு பாஸ். அதனால் அவருக்கு உதவியா இருக்கட்டுமென்னு அபாயிண்ட் பண்ணியிருக்கேன்...
ஓகே! ஓகே!
சந்திரசேகர் திடீரென்று வயிற்றைப் பிடித்துக் கொள்ள, விஸ்வம் பதறி...
ஐயோ! வயிறு எரியுதே! என்னமோ பண்ணுது! நெஞ்சை அடைக்குது...
மாமா! மாமா! என்னாச்சு உங்களுக்கு?
தொடரும்

நீங்கள் கேட்டவை - தராசு

● த. கு. பா. பட்டு துரை, சிதம்பரம்.


? கல்கி முகவரியைக் கிண்டியிலிருந்து ஈக்காடுதாங்கலுக்கு மாற்றியது ஏன்?

! பொன் விழா ஆண்டில் சொந்தக் கட்டடத்துக்குக் குடிபோனதுதான் காரணம்.

● மல்லிகை மன்னன், மதுரை.

? ''காங்கிரஸ் - அ.இ.மு.க. கூட்டணியை அமைத்து மாபெரும் வெற்றி பெற்ற போது அதை நமது வெற்றி என்றார் எம்.ஜி.ஆர்.; அந்தப் பெருந்தன்மை ஜெயலலிதாவிடம் இன்று இல்லை'' என்கிறாரே வாழப்பாடியார்?

! இந்த நிலையிலும் அ.இ.மு.க. முதுகை விட்டு இறங்க மாட்டேனென்கிறாரே!



• கைது குறித்து...?

● என். கே. ஈசுவரி, பெங்களூர்.

? 'பார்லிமெண்ட்டி லிருந்து மட்டும் அள்ளிக் கொண்டு வந்து விடவா போகிறோம்' என்று நீங்களே சொல்வதா? பத்திரிகைகள்தாமே நம் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டும்?

! உற்சாகப்படுத்துவதற்காக உண்மைகளை மறைக்க வேண்டியதில்லை. ஆனால் ஒன்று. வெற்றியை விட வெற்றி பெற வேண்டும் என்ற முயற்சிதான் முக்கியம். அதுவாவது நமது விளையாட்டு வீரர்களிடம் இருந்தால் சரி.

● ஏ. சுகுமார், சென்னை - 12.

? லஞ்ச ஊழல் வழக்கில் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கைது செய்யப் பட்டது பற்றி?

! 'அமைச்சருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திச் சில முடிவுகளை எடுத்தேன். ஆனால் லஞ்சம் வாங்கவில்லை' என்கிறார் திருநாவுக்கரசு. சட்டத்துக்கு உட்பட்டு அவர் செயல்பட்டிருக்கலாம். ஆனால் அதிகாரம் விதிமுறைகளை மீறப் பயன்படுத்தப் பட்டது; அதுவும் ஆட்சி முடிவுறப் போகும் நிலையில் அவசர அவசரமாக என்பதை மறைக்க முடியாது. எனவேதான், சந்தேகங்கள் எழுகின்றன. லஞ்ச ஊழலை நிரூபிக்க முடியாது போகலாம்; ஆனால் சந்தேகச் சூழ்நிலை கூட உருவாக வாய்ப்பில்லாத வகையில் நடந்து கொள்வதுதான் ஆட்சிச் சிறப்பு. அது ஒருபுறமிருக்க, 'திருநாவுக்கரசு முகத்தில் கரிபூசுகிறேன்' என்று கிளப்பி, தம் முகத்தில் தாமே பூசிக் கொண்ட முதல்வர் பரிதாபமாகக் காட்சி தருகிறார். அடுத்து, அவருக்குத் தவறான ஆலோசனை வழங்கப்பட்டதாகக் கூறி, எந்த அதிகாரி தலை உருளப் போகிறதோ!

திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டது பற்றி?

● வீ. சோழன், செம்போடை.

? உண்மை ஊமையாகிப் போனதே?

! ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் மக்கள் வைக்கப் பட்டு இருப்பதுதான் காரணம். ஜனநாயகத்தில் மக்களிடம் விழிப்புணர்ச்சி இல்லையெனில் உண்மை ஊமையாகி, உறங்கத்தான் போகும்.

● ஆர். கார்த்திகேயன், நாட்டரசன் கோட்டை.

? ''அ.தி.மு.க. ஆட்சியில் லஞ்ச ஊழல் மலிந்து விட்டது. இதற்குத் தி.மு.க. ஆட்சியே தேவலை'' என்று சில காங்கிரஸ்காரர்கள் புலம்புகிறார்களே?


! 'காலம் கடந்த ஞானோதயம்' என்று சொல்லி விட்டு விடலாம் என்று பார்த்தால், அ.இ.மு.க.காரர்கள் சிலர், ''அரசாங்கத்தில் காரியம் சாதிக்க முடி



• [illegible]



• [illegible]



யாத காங்கிரஸ்காரர்கள்தான் இவ்வாறு புலம்புகிறார்கள்'' என்று கூறிக் கேவலப் படுத்துகிறார்களே!

● க. ராஜேந்திரன், மங்கைநல்லூர்.

? புதிய ஜனாதிபதி சர்மாவுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

! மருத்துவத் துறையில் இந்தியா வியக்கத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது. உலகத் தரத்துக்கு இங்கே டாக்டர்கள் இருக்கிறார்கள்.

● என். சம்பத், தூத்துக்குடி.

? அரசியல் துருவமாக ராஜாஜியை வர்ணிக்கும் நீங்கள், 'விற்பனை வரி என்ற பெயரில் பொருள்கள் விலை ஏற்றப்படுவதை அறிமுகப்படுத்தியவர்' என்ற குற்றச்சாட்டுக்கு என்ன பதில் கூறப் போகிறீர்கள்?

! முதன் முறையாக மதுவிலக்கை அமுல்படுத்திய நேரத்தில் அரசுக்கு வருமான இழப்பை ஓரளவு தவிர்க்க, மக்களின் சம்மதம் பெற்று, ரூபாய்க்கு ஒரு தம்பிடி (ஒரு ரூபாயில் 192ல் ஒரு பாகம்) வருமான வரி விதித்தார். பின்னால் வந்தவர்கள் அதைச் சகட்டுமேனிக்கு உயர்த்தி, பணம் காய்ச்சி மரமாக மாற்றினால் அதற்கு அவர் என்ன பண்ணுவார்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கு. நாகராஜன்,
7/15 பாவடித் தெரு,
குருசாமிபாளையம்
சேலம் (மாவ) 637 403

● கே. ஆர். விஜயா, கோவை.

? சாவி, திருநாவுக்கரசு, அடுத்தது...?

! காளிமுத்து?

● எஸ். பாண்டியராஜ், காரைக்குடி.

? யாரிடம் கடன் வாங்கக் கூடாது?

! பெட்டிக் கடை பாண்டியராஜ் உள்பட யாரிடமுமே கடன் வாங்காமலும் கடன் சொல்லாமலும் இருப்பதுதான் நல்லது.

● கு. நாகராஜன், குருசாமிபாளையம். ❑

? பிரதமரின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அஸ்ஸாம் மாநிலம் கௌஹாத்தியில் 100 வயதான ஆலமரத்தை வெட்டியது சரியா?

! நூறு தரம் சொல்வேன், சரியில்லை என்று. பிரதமரின் நிகழ்ச்சியை வேறு ஓர் இடத்தில் வைத்துக் கொண்டிருக்கலாம். பிரதமருக்கே இந்த விஷயம் தெரிந்திருக்குமா, சந்தேகம். இந்த லட்சணத்தில் மரம் வளர்ப்போம் என்ற கோ(வே)ஷம் வேறு!

● டி. எஸ். டி. ராயன், சென்னை.

? ''முதல்வருக்குத் தேவை சிறந்த ஆலோசகர்'' என்று முன்னாள் டி.ஜி.பி. லட்சுமி நாராயணன் குறிப்பிட்டது குறித்து?

! மகாமக வேதனை முதல், திருநாவுக்கரசு குளறுபடி வரை நடந்துள்ள பல அனர்த்தங்களைப் பார்த்து விட்டுச் சொல்கிறார், சரி. ஆனால், ஆலோசனை சொல்பவர் இருந்தாலும் கேட்டு நடக்க வேண்டியவர் ஒத்துழைத்தால்தானே!

● எஸ். சிசீலியா ஜாய்ஸ், சென்னை.

? மக்கள் வோட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்த எம்.பிக்களும் எம்.எல்.ஏக்களும் ஜனாதிபதி தேர்தலில் செல்லாத வோட்டு போட்டிருக்கிறார்களே, இது எதைக் காட்டுகிறது?

! வேறு எதை, நம் தலைவிதியைத்தான்!

● கே. பாரதி, மணலூர் பேட்டை.

? ஜார்ஜ் புஷ் தேறுவாரா?

! கிளிண்டன் செமஜோர் உடறதாத் தெரியுது; ஜெயிச்சா லக்கு தான்!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? 'தாம் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை' என்று ஜெயலலிதா மீது ஆளுனரிடம் கொடுத்த புகார் மனுவைத் தாமரைக்கனி வாபஸ் பெற முன்வந்துள்ளாரே?


! 'பல்டி திலகம்' பட்டம் தரலாம்!

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? ''கட்சித் தொண்டர்கள் பெரிய கட்-அவுட்களை வைக்கும் போது நான் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்கிறாரே, ஜெயலலிதா?

! ஏன், குறைந்தபட்சம் ''வீண் செலவு வேண்டாம்'' என்றாவது சொல்லலாமே?

• தேறுவாரா?







திரும்பிப் பார்க்கிறேன் - 44

சோதனை மேல் சோதனை!

விருந்தினர் மாளிகை வளாகத்துக்குள் என் கார் நுழைந்த போது அங்கே நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். 'ஷூட்டிங் நடக்கும் இடத்தில்தான் கும்பல் கூடி இடைஞ்சல் பண்ணிவிடுவார்கள் என்றால் தங்குமிடத்திலுமா? நிம்மதியாக விடமாட்டார்களா?'

நான் காரை விட்டு இறங்கிப் போன போது, வாசலையொட்டியிருந்த நீண்ட பெரிய ஹாலில் போட்டிருந்த சோபா செட்டுகள் ஒன்றில் காஞ்சனா ஓய்வாக உட்கார்ந்திருந்தார். வெளியேயிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி, ஹாலுக்குள் நுழைந்து கொண்டிருந்தது. சினிமா நடிகையைக் கிட்டத்தில் பார்க்கும் மோகம் ஜுர வேகத்தில் பரவ, ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு சென்றனர். இந்தத் திடீர் திருப்பத்தைச் சற்றும் எதிர்பாராத காஞ்சனா, பதறி எழுந்து பின்வாங்கிச் சென்றார். கூட்டம் பின் தொடர்ந்து, அவரை ஹாலின் மூலைக்குக் கொண்டு போய் விட்டது! 'டென்ஷனும் பயமும் கலந்து தாக்க, காஞ்சனா செய்வதறியாமல் 'ஓ'வென்று அலறி அழ ஆரம்பித்து விட்டார். அந்தச் சமயம் பார்த்து ஒரு விஷமி மின்சாரத்தைத் துண்டித்து விட, குழப்பம் உச்சகட்டத்தை அடைந்தது.

நான் ஓடிச் சென்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு காஞ்சனாவை நெருங்கினேன். அதற்குள் மறுபடி விளக்குகள் நல்ல வேளையாக எரியத் தொடங்கி விட்டன. வந்திருந்த ரசிகர்களில் வாட்டசாட்டமான ஒருவரும் இருந்தார். நல்ல மனம் படைத்திருந்தார். அவர் கும்பலுக்கும் காஞ்சனாவுக்கும் இடையில் இரு கைகளையும் அகல விரித்தபடி உறுதியாய் நின்று, ''இவர்கள் எல்லோரும் நம் ஊருக்கு வந்துள்ள விருந்தினர்கள். அவர்களுக்குத் தீங்கு நேர்ந்தால் நம் ஊருக்கே அவமானம். நாம் மனிதர்கள் தானே, மிருகங்கள் போல் நடந்து கொள்ளலாமா?'' என்று உரத்த குரலில் தெலுங்கில் ஒரு மினி சொற்பொழிவு நடத்தினார். அது ஓரளவுக்குப் பயன் தந்தது. விருந்தினர் மாளிகையின் வாசலுக்குக் கூட்டம் திரும்பிச் சென்றது. ஆனாலும் வளாகத்தை விட்டு வெளியேறவில்லை. மறுபடியும் நானும் அந்த மனிதருமாகக் கைகூப்பி, ''இங்கிருந்து போய் விடுங்கள், ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இந்த ஊருக்கே கெட்ட பெயர்' என்று திரும்பத் திரும்பக் கூறி, இரண்டிரண்டு பேர், நாலு நாலு பேர்களாக வெளியேற்றினோம். பிறகு, முதல் காரியமாகப் போலீஸுக்கு ஃபோன் செய்து வரவழைத்தோம். பாக்கியிருந்த ஷூட்டிங் முழுவதும் போலீஸ் பாதுகாப்புடன்தான் நடந்தது.

அயல்நாடுகள் சிலவற்றில் நடைபெறும் சம்பவங்களையும் என் திரைக்கதையில் அமைத்திருந்தேன். ஸ்பெயின், பிரான்ஸ், இதாலி, இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து ஆகிய தேசங்களில் படப்பிடிப்பு என்று தீர்மானமாகியது. ஆர்ட்டிஸ்டுகளிடம் கால்ஷீட் வாங்கி, அவர்களுக்கும் டெக்னீஷியன்களுக்குமாகச் சேர்த்து பாஸ்போர்ட் - விசா எடுத்து, இதர ஏற்பாடுகளையும் கவனித்தவர் சித்ரா கிருஷ்ணசாமி. எம்.ஜி. ஆருக்கு ரொம்ப நெருக்கமானவர். அனுபவசாலியான அவர், எல்லாவற்றையும் கச்சிதமாகச் செய்து முடித்தார்.


நாங்கள் புறப்பட வேண்டிய தேதி ஜூன் மாதம் 9ம் தேதி.

மே மாதம் 20ம் தேதி என்னை மஞ்சள் காமாலை நோய் தாக்கியது. இரண்டு மூன்று நாட்களில் நோயின் கடுமை மிக அதிகமாகி விட்டது.

எனக்கு வைத்தியம் பார்த்த டாக்டர்கள் குறைந்தது ஆறு வார காலம் நான் தவறாமல் ஓய்வெடுக்க வேண்டுமென்றும் மீறினால் நோய் கடுமையாகி உயிருக்கே ஆபத்தாக முடியுமென்றும் கூறி எச்சரித்தனர்.

நான் திடுக்கிட்டேன். போட்ட திட்டங்கள், செய்த ஏற்பாடுகள், செலவான பணம் எல்லாம் என்னாவது?

முடிவாக எனக்கு வைத்தியம் பார்க்க டாக்டர் திருவேங்கடம் வந்தார். அவரிடம், ''டாக்டர் நான் தவறாமல் சினிமா படப்பிடிப்புக்கு வெளிநாடு சென்றே ஆகணும். அதுவும் குறிப்பிட்ட ஜூன் 9ம் தேதி புறப்பட்டே ஆகணும். நீங்கள்தான் ஏதேனும்



செய்து என்னை குணமாக்கணும்'' என்றேன்.

''என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயற்சி செய்கிறேன்'' என்று சொல்லி ஒரு ஊசி போட்டார்.

சென்னைவாசிகளுக்கு டாக்டர் திருவேங்கடத்தின் கை ராசி பற்றி நன்றாகத் தெரியும். எனக்கு வேகமாக உடல் நிலை குணமானது. டாக்டரின் கட்டளைப்படி உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இருந்தேன். டாக்டர் திருவேங்கடத்தின் தயவால் மஞ்சள் காமாலையிலிருந்து விடுபட்டேன்.

டாக்டருக்கு நன்றி தெரிவித்து விட்டு குறிப்பிட்ட ஜூன் 9ம் தேதி எங்கள் பயணம் தொடங்கியது. இத்தாலி, ஸ்பெயின், ஸ்விட்ஸர்லாந்து என்று வரிசையாக ஷூட்டிங். ஆண்டவன் அருளால் எனக்கு எவ்வித உடல்நலக் குறைவும் உண்டாகவில்லை.

ஆனால் எனக்கும் சேர்த்து என் தாயாருக்கு ஆரோக்கியம் கெட்டு அவர் இறைவனடி சேர்ந்து விட்டார்! பாரிஸில் இருந்த போது எனக்கு அந்தச் செய்தி கிடைத்தது. நான் அதிர்ச்சியில் மௌனமானேன். சிலையாகி, நீண்ட நேரம் பழைய நினைவுகள் உள்ளத்தில் அலைபுரள அமர்ந்து இருந்தேன்.

என் தந்தை ஆயிரம் பிறை கண்டதைக் கொண்டாடும்விதமாக என் தாய்க்கும் தந்தைக்கும் மதுராந்தகத்தை அடுத்த எங்கள் சொந்த ஊரில் சிறப்பாக விழா எடுத்தோம். சிவாஜி முதலான பல திரையுலகப் பிரமுகர்கள் அந்த விழாவில் பங்கேற்று, என்னையும் என் பெற்றோரையும் கௌரவித்தார்கள். நான் அயல்நாடுகள் புறப்படு முன்னர் என் தாய்க்கு லேசாக உடம்பு சரியில்லை. ''எல்லாம் சரியாகப் போயிடும்; கவலைப் படாதே! டாக்டர் கவனிக்கிறதாச் சொல்லியிருக்கார்'' என்று கூறி அவரிடமும் தந்தையிடமும் விடைபெற்றேன். அப்போது என் தாய், ''என்னைப் பற்றி என்ன கவலை? உன் உடம்பைப் பார்த்துக்க; ஆபத்தான நோய் வந்திருக்கு. ஓய்வா இருக்க வேண்டிய சமயத்துல உலகைச் சுத்தப் போறியே'' என்று கேட்டார். நான் நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியுமாகக் கிளம்பினேன்.

இப்போது அவர் காலமாகி விட நான் நலமாய் இருக்கிறேன்! 'இது தெய்வ சித்தமா? அல்லது ஒருவேளை என் தாய் என்னைக் காக்கத் தன் உயிரைத் தியாகம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டாரா? அவர் வேண்டுதல் நிறைவேறியதா?'

தாய்ப்பாசம் என்னை இந்தியாவுக்கு இழுத்தது. கடமை என்னை ''ஷூட்டிங்கைக் கவனி'' என்று கட்டளையிட்டது. பாரிஸில் படப்பிடிப்பு முடிந்து லண்டன் செல்ல வேண்டும். அங்கே மூன்று நாள் ஷூட்டிங் பாக்கி. பிறகு சென்னை திரும்ப வேண்டியதுதான். இந்த நிலையில் என்ன செய்ய?

'கடைசி காலத்தில் என் தாயின் அன்பு முகத்தைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்கவில்லையே' என்று சோகத்தைச் சுமந்து கொண்டிருந்த எனக்கு, சிவாஜியும் மற்றவர்களும் ஆறுதல் கூறியதுடன் யோசனையும் சொன்னார்கள். ''என்னென்ன காட்சிகள் எப்படி எப்படி எடுக்க வேண்டும் என்று விவரமாய்க் கூறி விடுங்கள்; நாங்கள் ஷூட்டிங்கை முடித்துக் கொண்டு வந்து சேருகிறோம். நீங்கள் முன்னால் புறப்பட்டுப் போங்கள்'' என்றார்கள். சிவாஜியும் இந்தக் கருத்தை ஆமோதித்தார். நான் யோசித்தேன்.

டைரக்டர் ஸ்ரீதர்



கல்கி பொன் விழா மலர்

◆ ஓவிய மேதைகளும் புகைப்பட நிபுணர்களும் போட்டி போட்டுக் கொண்டு மலரை அழகுபடுத்தியிருக்கிறார்கள்.

◆ இன்றைய பிரபலமான எழுத்தாளர்களின் முதல்தரச் சிறுகதைகள் தவிர, இலக்கிய ஜாம்பவான்களின் எழுத்தோவியங்கள்.

◆ அமரர் கல்கி எழுதிய "மயில்விழி மான்" - குறுநாவல்

◆ பாரதி முதல் வைரமுத்து வரை பலரது பொறுக்குமணியான கவிதைகள்.

◆ வண்ணப்படங்களில் வயலூர் முருகன், காஞ்சிப் பெரியவர்கள், ஸ்ரீ சத்திய சாயி பாபா, சதாசிவம் - எம். எஸ். தம்பதி, பாரத ஜனாதிபதி, ராஜாஜி, டி.கே.சி., கல்கி.

◆ வண்ணமடல்களில் விளையாட்டுத் துறை, நகைச்சுவை, சினிமா, நடனம், சங்கீதம், --சிர பாலிதானாவுக்கும் காவேரி நிஸர்கதா - க்கும் நேரில் விஜயம்!

பொன்விழா மலருடன் ஓர் அன்பளிப்பு!

ஸ்ரீ சதாசிவம் - ஸ்ரீமதி எம. எஸ். தம்பதியின்
நல்லாசிகளோடு

கல்கி பொன் விழா சிறப்பு காஸெட்



ஆதி சங்கரர், அருணகிரிநாதர், ராஜாஜி, பாரதியார், கல்கி முதலிய பலரது அற்புதமான பாடல்கள் ஸ்ரீமதி எம்.எஸ்.ஸின் தேன் குரலில் ஒலிக்கின்றன.

தயாரிப்பு : கிராமஃபோன் கம்பெனி (HMV).

ஒரு மணி நேர தேவகானம்!

விலைமதிக்க முடியாத பொக்கிஷம், பொன் விழா மலர் ஒவ்வொன்றுடனும் இலவசம்!

மலரும் கேஸட்டும் ஆகஸ்டு 1௨ பொன் விழா மேடையில் வெளியிடப்படுகின்றன.

உங்கள் தேவைக்கு உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளவும். அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதவும்.

விலை ரூ 50/= ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ 8/-

தாமதமின்றிச் செயல்பட்டால் ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்.

மானேஜர், கல்கி, சென்னை - 600 097





'ரிடயர்மென்ட்' சந்தோஷம் தருகிறதா?

ஸ்வீட், காரத்துடன் டீ பார்ட்டி, ரோஜாப் பூ மாலை, சம்பிரதாயப் புகழ் வார்த்தைகள், 'உங்களுக்கு 58 வயதா? நம்பவே முடியவில்லையே!' என்பது போன்ற சில பனித் தூவல்கள், சில கைகுலுக்கல்கள். இவையெல்லாம் முடிந்து வீட்டுக்கு வந்த பின் எஞ்சும் கசப்பு - 'ரிடயர்மெண்ட்!' 'இதுவரை சமுதாயத்துக்கு உன்னை - உன் தகுதிகளை - திறமைகளை அடையாளம் காட்டி வந்த பதவி, இன்றோடு அகன்று விட்டதே! இனி நீ யார்?' என்று உள்ளுக்குள் எழும் கேள்வி!

பெரும்பாலும் அரசாங்கப் பெரிய பதவிகளிலிருந்து ரிடயர் ஆகிறவர்களுக்குத்தான் அதன் தாக்கம் அதிகம் என்று பரவலான ஒரு கருத்து உண்டு. அதிகாரம், தன் ஆளுகையின் கீழ் பலர் பணிபுரிகிறார்கள் என்கிற எண்ணம் - பலர் விதியை நிர்ணயிக்கும் பொறுப்பு தன் கையில் என்கிற சிந்தனை... இப்படிப் பரிணமித்த பதவி, சடாரென்று ஒருநாள் இல்லையென்று ஆகி விட, அது ஹார்ட் அட்டாக்காகவே கூட உருவெடுத்திருக்கிறது சிலருக்கு!

''உண்மைதான்!'' என்று ஒப்புக் கொள்கிறார் இன்கம்டாக்ஸ் கமிஷனராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பி. சடகோபன். ''ஆனால் அது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்குத்தான். நியாயமான முறையில் பொறுப்பு வகிப்பவர்களுக்கு 'இந்தப் பதவி நிலையானதல்ல. இப்போதுள்ள 'பவர்' ஒருநாள் வேறொரு கைக்கு மாறி விடும்' என்ற உள்ளுணர்வு எப்போதும் இருக்கும். ரிடயராவதற்கு எவ்வளவு சீக்கிரம் மனத்தைத் தயார்ப்படுத்திக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது!'' என்கிறார் அவர்.



சரி, மனத்தைத் தயார்படுத்திக் கொள்ளலாம். ஆனால், கனமாக நீளும் நேரத்தை என்ன செய்வது? ''ஏன்? ரிடயர் ஆகி விட்டால் வேலையே செய்யாமல் ஈஸி சேரில் சாய வேண்டும் என்பது யார் வகுத்த விதி?'' என்று கேட்கிறார் டெக்ஸ்மேகோ கம்பெனி சென்னைக் கிளையின் மானேஜராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற எஸ். கிருஷ்ணன். முழு நேர வேலையாக இல்லாமல், கல்கத்தாவிலிருக்கும் இரு தனியார் கம்பெனிகளுக்குப் பொதுத் தொடர்பு, மார்கெட் நிலவரக் கணிப்பு, வாடிக்கையாளர் தொடர்பு... இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார் இவர். ''இதுபோன்ற பகுதி நேரப் பணிகளால் உடல், மன இயக்கங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளவும் முடிகிறது; என்னுடைய பிற விருப்பங்களான தோட்டக்கலை, படிப்பது, தத்துவ ஈடுபாடு இவற்றுக்குச் செலவிடவும் நேரம்



கிடைக்கிறது!'' என்கிறார் கிருஷ்ணன்.

"முதுமையில்தான் நிதானம், அனுபவம், பொறுமை இவை எல்லாம் கூடுகின்றன. அதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளுங்கள்'' என்கிறார் மைலாப்பூர் நல்லி நியூ சில்க்ஸின் பார்ட்னர்களில் ஒருவரான எஸ். எம். கோபாலன். ''எங்கள் கடையில் பாருங்கள் எத்தனை பேர் ரிடயர்மெண்ட் வயதைத் தாண்டியவர்கள் என்று. நானே அந்த ரகம் தான். வாடிக்கையாளர்கள் எத்தனை கேள்வி கேட்டாலும் சலிக்காது பதில் சொல்வது மட்டுமல்ல; 'இந்தப் புடைவை அதை விட நல்லதம்மா' என்று ஒரு வயதானவர் கூறினால், உடனே வாங்குபவர்களுக்கும் 'பெரியவர் சொல்வது சரியாகத்தான் இருக்கும்' என்ற நம்பிக்கை பிறக்கிறது. பண்டிகைக் காலங்களில் கூடுதல் நேரப் பணிக்குக் கூட வயது ஒரு தடையாக அமைவ தில்லை!'' என்கிறார் அவர்.

"ஈடுபாடு என்ற சொல் இருக்கிறதே, அதுதான் வயதையெல்லாம் மறக்கடிக்கும் மந்திரச் சொல்!'' என்கிறார் டாக்டர் விஜயலட்சுமி. சொல்வதைச் செய்தும் காட்டிக் கொண்டு இருக்கிறார். வயது அறுபதுக்கு மேல் என்றாலும் 'சென்டர் ஃபார் சோஷியல் ரிசர்ச்' என்ற நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருக்கிறார். கூடவே மீனவப் பெண்களின் நிலை, விவசாயம், தொழில்துறை இவற்றில் புதிய டெக்னாலஜியின் தாக்கம், அன் ஆர்கனைஸ்ட் செக்டாரில் பெண்கள்... என்று இவரது ஆராய்ச்சிப் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மத்திய இரயில்வேயில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற எஸ். கிருஷ்ணமூர்த்தி, ''எனக்கு மதக்கோட்பாடுகள், சமஸ்கிருதம், ஜோசியம், கர்நாடக சங்கீதம் இப்படிப் பல ஈடுபாடுகள் உண்டு. ஆனால் என் 36 வருட அலுவலகப் பணியில் இவற்றிலெல்லாம் தனிக் கவனம் செலுத்த முடியவில்லை. ஏன், லீவு கிடைக்காத காரணத்தால் உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளக் கூடச் சில சமயங்களில் முடியாமல் போனதுண்டு. இப்போதுதான் இதற்கெல்லாம் நேரம் ஒதுக்க முடிகிறது!'' என்று சந்தோஷமாகச் சொல்கிறார்.

இவர்களைப் போன்றவர்கள் ஒருபுறமென்றால், மறுபுறம், ''பிள்ளைங்க இன்னும் சம்பாதிக்க ஆரம்பிக்கலீங்க... அதுக்குள்ள வயசைக் காட்டி வீட்டுக்குப் போன்னு சொல்லிட்டாங்களே... எங்களை மாதிரி இல்லாதவங்க ரிடயர்மெண்ட்டுக்கு அப்புறம் எப்படிக் குடும்பத்தைச் சமாளிக்கிறது?'' என்று அங்கலாய்க்கும் கந்தசாமிகளும், ''வேலைன்னா ஆபீஸ் உத்தியோகம் மட்டுந்தானா? முப்பத்தஞ்சு வருஷமா அடுப்பைக் கட்டி மாரடிக்கிறேனே, இது வேலையில்லியா? பிள்ளைக்குக் கல்யாணமாகி மருமகள் வந்தப்புறமும், அவ சம்பளக் கவரைத் தாண்டிலாப் போட்டுத் திருப்பித் திருப்பிச் சமையலறை, பால் புட்டின்னு சுத்திக்கிட்டேயிருக்கேனே... எனக்கு ரிடயர்மெண்ட் கிடையவே கிடையாதா?'' என்று புலம்பும் மங்களம் போன்ற குடும்பத் தலைவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

– நிர்மலா சக்ரவர்த்தி




''நம்ம மானேஜர் அடிக்கடி 'கம்ப்யூட்டரையே முழுசா நம்பிடாதீங்க'ன்னு சொல்லிட்டிருக்காரே, ஏன்?''

''அவருக்குக் கம்ப்யூட்டர்லதான் ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கல்யாணம் செஞ்சு வச்சிருக்காங்களாம்.''

– கரம்

சினி சிப்ஸ் :

"ஆண்களையும் கலங்க வைக்கும் அம்மாவின் நடிப்பு!"



● நிழல்கள் ரவி : மறுபடியும் எதிர்பார்த்து...



● கமல் : பழசை மறக்காதவர்

●● ஓர் இளம் இயக்குனர் இளையராஜாவைத் தாக்கியதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ஆயினும் அச் செய்தியில் அந்த இயக்குனரின் பெயர் வெளியிடப்படவில்லை. நாம் அந்த இளம் இயக்குனரைத் தேடிப் பிடித்து விசாரித்த போது, "இளையராஜா சார் எனக்கு நடமாடும் தெய்வம். என்னோட அடுத்த படத்துக்கு மியூசிக் போட்டு, எனக்கு 'லைஃப்' தரப் போறவரே அவர்தான். இந்த நிலையில் அவரைப் போய் நான்... இதென்னை பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது..." என்றார் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு. இளையராஜா தரப்பில் அந்தச் செய்தியை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை!



● சாந்தா அம்மையார் : ஆறுதல் தந்தவர்

●● சினிமா தயாரிப்பாளர்களாக மாறிக் கையைச் சுட்டுக் கொண்டவர்களில் மலேசியா வாசுதேவனும் ஒருவர். அவரும் அவரைப் போன்றவர்களும் இனியாவது நஷ்டம் வரக் கூடாதென்று சாந்தா அம்மையார் நிகழ்த்திய ரதயாத்திரையிலும் நூற்றியெட்டு யாக குண்ட வேள்வியிலும் கலந்து கொண்டனர்! "சாந்தா அம்மையாரைச் சந்தித்த பிறகு தான் என் மனம் சாந்தியடைந்தது!" என்கிறார் மலேசியா வாசுதேவன்.

●● "மனோரமாவை இன்னும் முழுமையாக யாரும் பயன்படுத்தவில்லை என்று தான் சொல்வேன்!" என்று கூறுபவர் யார் தெரியுமா? ஆச்சியின் மகன் பூபதிதான். "ஆனால் 'தூரத்துச் சொந்தம்' அப்படியல்ல. அதில் நானும் அம்மாவும் உணர்ச்சிபூர்வமாக நடித்திருக்கிறோம். படம் வெளிவந்ததும் பாருங்கள், ஆண்களையே அந்தக் காட்சிகள் கண்கலங்க வைக்கும்!" என்கிறார் பூபதி.




● பூபதி : "ஆண்களே கண்கலங்குவார்கள்!"

●● கமலஹாசனின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த பலரில் ஜி. என். ரங்கராஜனும் ஒருவர். அவருக்கு இப்போது கஷ்டம். இதை அறிந்த கமல், அவருக்காக கால்ஷீட் ஒதுக்கி, ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பையும் வாங்கித் தந்திருக்கிறார். "புகழின் உச்சிக்குப் போனாலும் என்னை மறக்காமலிருக்கும் அந்த மகராசன் நல்லாயிருக்கணும்" என்று மனம் நெகிழ்ந்து கூறும் ரங்கராஜன், தமது படத்திற்கு வைத்துள்ள பெயர் 'மகராசன்!'

●● ஆபாவாணனின் பல படங்களில் நடித்தும் பெரிய அளவில் வளர முடியாமல் போய் விட்ட அருண் பாண்டியன், தற்சமயம் பெரிதும் நம்பியிருப்பது, அவரது சகோதரர் அருள் பாண்டியன் இயக்கும் 'அமிழ்யன்' படத்தைத்தான். இவரைப் போலவேதான் நிழல்கள் ரவியும்! "நான் புடிச்ச மாப்பிள்ளை' எனக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தாலும் அதன் பிறகு மெல்ல மெல்ல என் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகி விட்டன. இப்போது பாலு மகேந்திராவின் 'மறுபடியும்' படத்தின் மூலம்தான் மறுபடியும் வாய்ப்புக்கள் வந்து குவியும் என்று எதிர்பார்க்கிறேன்!" என்கிறார்.

– கலைத்தூதன்

வாழ்த்துச் சொல்லுகிறோம்!









கல்கி பொன் விழா :: தங்க நகைப் பரிசுத் திட்டம் - 25

நீ அடிமைக் காலத்தில் பிறந்தாலும் கூட
உன் எழுத்திலும் கருத்திலும் அடிமைத் தனம்
இல்லை!
கல்கி - ஜனநாயக மணியோசை. அதில்
விழித்துக் கொள்ள முடியாதவர்கள்
பழித்துச் சொல்ல முயல்வார்கள்.
உன்னை அடக்க நினைப்பவரைக் கூட
உன் அணுகுமுறை அடக்கி விடும்.
வயது ஐம்பதாமே! பொன் விழா வாழ்த்
துக்கள்!
வாரம் தோறும் புதிதாய்ப் பிறக்கிறாய்
பின்பு எப்படி வயதாகிறது உனக்கு?
எனக்கு வயதானாலும் நம்பிக்கை உண்டு
நிச்சயம் வாழ்த்துவேன் உன் நூற்றாண்டு
விழாவிற்கு.

- டி. ஸ்ரீதேவி, தூத்துக்குடி.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகைப் பரிசு பெறுபவர்:
டி. ஸ்ரீதேவி,
107/88 மில்லர்புரம், தூத்துக்குடி - 628 008

கன்னலின் சுவையாக கங்கையின் நீராக
காரிருள் அகற்றிடும் கதிரோனின் சுடராக
இன்னருந் தமிழாலே இதயத்தி னடிவருடி
ஈடிலா நற்கருத்து முத்துக்களை வித்தாக்கி
பொன்னியின் செல்வனெனும் பூவாரம்
மணம் பரப்பப்
புதுமைப் படைப்புகளைப் பொன்போலப்
பொதித்தளித்துக்
கன்னியர் இடைகாட்டும் கவர்ச்சிக்கு விடை
கொடுத்து
கள்ளத்தையும் கயமையையும் கருவோடு
வேரறுக்கும்
என்னரும் 'கல்கி'யெனும் கலங்கரை
விளக்கமே நீ
பொன்விழா காணுகிறாய் பூரிப்பால்
நாணுகிறாய்
உன்னருஞ் சேவையொளி உலகெலாம்
பரவிடவே
உமையவளைக் கரங்குவித்து உளமார
வாழ்த்துகிறேன்

- பி. ஏ. ஜவஹர்லால், பாளையங்கோட்டை.

"கடையினில் தொங்குவதற்காய்
வருகின்ற இதழ்களிடையே
வாசகன் மனத்தில் தங்குவதற்காய் வருகின்ற
'தங்க' இதழே! 'எங்கள்' இதழே! - நீ
இலக்கியம் மட்டுமின்றி இதயமும்
வளர்க்கிறாய்!
'பொலிவோடு' மட்டுமின்றி 'தெளி
வோடு'ம் திகழ்கிறாய்!
உன்னைப் படிப்பதால் நாங்கள் வளர்
கிறோம்!
உந்தன் வளர்ச்சியில் நாளும் மகிழ்கிறோம்!
வாழ்த்தினேன் இன்றும்; வாழ்த்துவேன்
என்றும்!"

- வெ. பாண்டுரங்கன், திருநின்றவூர்.

வாழிய கல்கி! வாழிய இன்றும்
வாழிய பல்லாண்டு!
ஆழ்கடல், மாமலை, வானகம் உளவரை
வாழிய புகழாண்டு!
விற்பனை பெருகிடக் கற்பனையின் தரம்
வீழ்ந்திட எழுதாமல்
அற்புத மாயொரு ஐம்பது ஆண்டுகள்
ஆண்டனை வாழியவே!
ஏடுக ளுக்குள் இத்தனை சாதனை
ஈட்டிய வார இதழ்

தேடரி தாமெனக் காட்டிய 'கல்கி'
தமிழ்என வாழியவே....!
- இரா. கங்கைமணிமாறன், கணபதிபுரம்.

நறுக்குத் தெறித்தாற்போல் நயமான
தலையங்கம்
சிரிக்கவும் சிந்திக்கவும் சீரான கார்ட்டூன்
பாங்காய் ஒரு பக்கம் பம்பாய்க் கடிதம்
உங்கள் செல்வம் உயர்வதற்கு உள்ளவழி
கேட்டு வரும் கேள்விகட்குத் தரமான
தராகபதில்
நாட்டுநிலை ஆராய்ச்சி நக்கீரன் தன்வழியில்
இப் பத்திரிகை சிறப்பைப் பாட்டெழுதிப்
பாராட்ட
பத்துவரி பத்தாது பாரதியே வந்தாலும்
பொன்விழா காண்பது கல்கியா? இல்லை
இல்லை
தன்விழா என்குதே தமிழன்பர் உள்ள
மெல்லாம்.
- சி. செ. நாதன், பம்பாய்.

கூட்சிச் சாயம் பூசாமல்
மதமாச் சாயம் அணுகாமல்
ஜாதிப் போர்வை படராமல்
சினிமா மாயையில் சிக்காமல்
விரச விளம்பரம் இல்லாமல்
தரமற்ற செய்திகளைத் தாங்காமல்
நடுநிலை என்றும் பிறழாமல்
நாடு போற்ற ஒரு பத்திரிகையை
நடத்த முடியுமா? முடியும்!
அதற்குச் சாட்சி; கல்கி! வாழிய பல்லாண்டு!
- பொடுசி, சென்னை - 81.

கல்கி - நீ
கால மாறுபாடுகளுக்கு ஏற்ப வளைந்து
கொடுத்தாலும்
கவர்ச்சியையும் சினிமாவையும் நம்பி
ஒடிந்து போனதில்லை
எத்தனை வாசகர்கள் உனக்கு எனும்
இறுமாப்பை விட
எப்படிப்பட்ட வாசகர்கள் எனக்கு என
எண்ணி
நெஞ்சம் நிமர்த்தலாம் நீ.
உனது இந்த ஐம்பது ஆண்டு வளர்ச்சியில்
இராமருக்கு அணில் போல் என் பங்கும்
உண்டு
என எண்ணி - நீயும் வளர்ந்து
எம்மையும் வளர்க்க வாழ்த்துகிறேன்.
- க. பா. கணேஷ் பாபு, பெங்களூர் - 79

எட்டிமரம் கனிகுலுங்கி நின்றா லென்ன?
எண்ணற்ற கவர்ச்சியிதழ் உதித்தா
லென்ன?
தொட்டெழுப்பி நெஞ்சத்தின் ஞானக்
கீற்றைத்
துலக்கிடநீ 'கல்கி'யென வந்தா
யன்றோ!
முட்டியெழும் பயிர்முளையாய் முனைந்தே;
விட்ட
மூச்செல்லாம் தமிழினத்தின்
மேன்மைக் கீந்து
பட்டொளியைப் பொன்விழாவில் வீசும்
நின்றன்
பணிதொடர்ந்து பைந்தமிழாய்
நிலைத்தே வாழி!
- அ. மணிவாசகன், சேலம் - 3.

செநற்றிக் கண்ணிற்கும் அஞ்சாத நக்கீரனே!
நற்கருத்துக்களை நயம்படச் சொல்லும்
வள்ளுவனே!
தன்னிகரில்லாத் தலையங்கச் செம்மலே!
உயர்வான கதைகளைத் தாங்கிவரும்
பெட்டகமே!
அரசியலுக்கு விலைபோகாத முத்தே!
வாசகர்களை மதித்திடும் பொற்றாமரையே!
கேள்வி-பதிலில் மனம் விட்டுப் பேசும்
நண்பனே!
வட்டமேஜையில் இதயங்காட்ட ஜன்னல்
திறக்கும் செண்பகமே!
கலையைக் கலையாய் மதிக்கும் பூபாளமே!
கல்கி ஆலமரமே!
அடுத்த யுகத்திலும் வாழ்க!
- எஸ். திருமலை, கோவை - 43.

எதுபிடிக்கும் மக்களுக்கு எனக் கருதாமல்
எது தேவை மக்களுக்கு என்பதை எவருக்கும்
அஞ்சாமல் எடுத்துரைத்த இராஜாஜி வழி
நின்று
நடுநிலையுடன் செய்திகளை வெளியிடும்
கல்கி,
பரபரப்பு அரசியல் செய்திகள் - இலக்கிய
ஆபாசங்கள்
எவையுமின்றி அமரர் கல்கி வழிநின்று
தரமான
படைப்புகளை வெளியிடும் கல்கி,
வருங்காலத் தலைமுறைக்கும் பயன்பட்டு
விழாக்கள் பல காண வாழ்த்தி மகிழ்கிறேன்.
- க. ப. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு.

முன்னெச்சரிக்கையாக ஒரு கட்டுரை!

◆ வேலை நிறுத்தங்களைத் தடுக்க வேண்டும் என்று நினைக்காமல் தவிர்க்க வேண்டும் என்று 'சக்கரங்கள் சுழலட்டும்' தலையங்கத்தில் எழுதியதைப் பொன்னேட்டில் பொறிக்க வேண்டும்.
மேட்டூர் அணை,
ஆர். ஜெயமாலதி.

◆ மம்மூட்டியின் பேட்டி - பேட்டி போலவே தோன்றவில்லை. நீண்ட நாள் பழகிய நண்பருடன் நடந்த உரையாடல் போலவே இருந்தது. இயற்கையான நடிப்பு, செயற்கையான நடிப்பு, சிவாஜியின் நடிப்பு போன்றவற்றை அவர் அலசிய விதத்தில் அவரது மேதாவிலாசம் தென்பட்டது.
சென்னை - 62, ஆர். பாகீரதி.

◆ சண்டைக் காட்சியில் நடிப்பதற்கு 'டூப்' போட்டு விட்டு, காதல் காட்சிகளில் புகுந்து விளையாடும் நடிகர்கள் மத்தியில், 'காதல் காட்சிகளில் நடிப்பதற்குக் கூச்சமாக இருக்கிறது' என்று கூறும் மம்மூட்டி ஒரு - மகோன்னதக் கலைஞர் என்பதில் சந்தேகமேயில்லை!
சிதம்பரம், ரா. கருணாகரன்.

◆ மீண்டும் அரபு மோகம் தலையெடுத்துள்ள இந்த நேரத்தில், வேலை வாய்ப்பைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சி செய்பவர்கள், ஏஜெண்டுகளால் எப்படியெல்லாம் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை அலசி ஆராய்ந்து கட்டுரை வெளியிட்டுள்ளதானது, மோசடிகளை உணர்த்தும் ஒரு முன்னெச்சரிக்கையாக அமைந்துள்ளது. பாராட்டுக்கள்!
காட்டூர், எஸ். அருள்மொழி.



◆ 'விம்பிள்டனில் ஒரு கொலை வெறி' என்ற முதல் பக்கக் கட்டுரை மிகவும் அருமை. இதன் முடிவில் அரசியல்வாதிகளின் மனப்பான்மை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒப்பிட்டுக் கூறி, ஆனால் அது பகல் கனவு என்று முடித்திருப்பது அருமை.
குத்தாலம், பி. முத்துக்குமரன்.

◆ "கொண்டாங்க ஒலிம்பிக் தங்கம், கொண்டாடுறோம் பாருங்க!" கற்பனை, கர்மா சொல்லக் கூடாது; சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களின் மனநிலையை அப்படியே பிரதிபலித்திருந்தது.
தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

◆ இன்றைய நிலையை வெகு இயல்பாய் எடுத்துக் காட்டிய திருவாரூர் பாபுவின் 'கனவு தேசம்' சிறுகதையை ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் படிக்க வேண்டும்.
முத்துப்பேட்டை,
ஜெயபா. சிங்காரவேலு.

◆ நம் நாட்டு அரசியல் நடப்பை 'தியாகி' சிறுகதை மூலம் "கடபுஜ" வெட்ட வெளிச்சமாக்கி விட்டார். பாராட்டுக்கள்!
கடையம், அன்பின் செபா.

◆ அகிலா கார்த்திகேயனின் 'மொய்ச்சிரிப்பு' மட்டுமல்ல; அதற்கு மருது வரைந்த ஓவியமும் பார்த்தவுடன் சிரிக்க வைத்து விட்டது!
சிதம்பரம்,
சு. கு. பா. பட்டுதுரை.

◆ சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு 'மரம்' ஒன்றே பிரதானம் என்று கருதி, தாங்கள் மரம் நடுவதோடு, மற்றவர்கள் நடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வரும் டாக்டர் மாதவனும், ரிசர்வ் வங்கி அதிகாரி வி. சுப்ரமணியமும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.
கும்பகோணம், 'கவிட் ரவி'

◆ 'வரதட்சணை வாங்காமல்' என்ற சிறுகதையில், வரதட்சணை வாங்காதவரின் தடுமாற்றத்தை இயல்பாக உணர்த்திய விதம் சிறப்பாக இருந்தது.
மங்கைநல்லூர்,
ஆர். செல்வராணி.

◆ உத்தியோகத்தின் நிமித்தம் அடிக்கடி, ஊர் மாறிச் செல்பவர்களுக்குக் கல்கியின் ஒரு பக்க டிப்ஸ் பயனுள்ள ஒன்று.
கும்பகோணம்,
புலவர் எஸ். கே. மூர்த்தி.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.




குளியல் சோப்பை கேசத்திற்கு உபயோகிக்காதீர்கள்...
கேசத்திற்குத் தேவை பிரத்தியேக சோப்

குளியல் சோப்புகள் கேசத்தை சரியான முறையில் சுத்தம் செய்யாது. இவற்றால் கேசம் நாசமாகி, சிக்குப் பிடித்து பொடுகுகள் வரக்கூடும். கேசம் வலுவிழக்கக்கூடும்.

அதனால் கேசத்திற்குத் தேவை பிரத்தியேக சோப். கேசத்தின் தேவைகளை உணரும் ஒரு சோப்—அதுவே விப்ரோ சிகாகாய். கேசத்தை சுத்தமாக வைப்பதற்கு ஆண்டாண்டுக் காலமாக உபயோகிக்கப்பட்டுவரும் சீயக்காயின் நற்பயன்கள் பரிபூரணமாக நிறைந்த விப்ரோ சிகாகாய்,கேசத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கிறது. கேசம். ஆரோக்கியமாக இருந்தால் எவ்வாறு உதிரும்?





விப்ரோ
சிகாகாய்

அழகான கேசம் பெற ஆரோக்கியமான வழி

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Sri Lanka